ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வெளிநாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1க்கு ரூ. 1,
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தொடர்ந்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி வருஷ பங்குனிமீ 1உ (13—3—1932) | மலர் 46

பலமுள்ளவீரபுருடனுக,

குமரனுக, வாலிபத்தன்மையடைய, ஆண் பெண் மன மொத்துவாழ, இல்லற, இன்டம் அனுபவிக்க, புத்திர பாக்கியம் பெற வழியில்லையென வருந்துபவர்கள்

தங்க பஸ்பம்.

சாப்பிடுங்கள்.

அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும் இல்வாழ்வில் அதியற்புத சுகந்தரும்.

48-நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24-நாளைக்கு ரூ 10.

மாதர்களுக்கு

இது தான் வேண்டியது

கெர்ப்ப எண்ணெய்

மாதாந்தர காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெர்ப்பம் உண்டாகும். மிக்க அநுபவமானது.

புட்டி 1-க்கு ரூ. 2.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால், பழனி. S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, தேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், காவரோகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்

கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

கவலை வேண்டாம்!

தற்காலத்தில் ஒவ்வொரு வரும் தாராளமாக சம்பாதிக்கக்கூடிய வழியை தெரிந்து கொள்ளவேண்டாமா? அட படியானால் ஒரு ரிப்ளேகார்டு எழுதுங்கள். பதில் தெரிந்து கொள்ளலாம்.

S. நாராயணசாமி
வடக்குவீதி திருவாரூர் S. I.

Read
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

ஜோதி முத்து.

டாக்டர், B. A. எதிராஜுலுவினால், தயாரித்து 31 ஆண்டுகளாக அனுபவித்து கை கண்ட கோஷாயி மேக எண்ணை (கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப் பெற்றது.)

வெட்ட வாய்வு, (அஷ்ட்ட) எட்டு விதங்களாக கர்ப்பவிந்து ஸ்தானங்களில் தங்கி, சந்ததியார்களுக்கு ஜெனித்த தடிப்பு, சிட்டைகள் முதலிய மேகம் 21க்கும் இரண குஷ்டம் 18ம் 3 நேரம் ரம் கோஷாயி மேக எண்ணை சாபபிட்ட 7-வது நாளே எல்லா உபத்திரவங்களிலிருந்து விலகி, 15-வது நாள் பாலிய தேக சடன் விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்று வருவது பிரத்தியட்சம்.

3. நேரம் உபயோகிக்கும் கோஷாயி மேக எண்ணை கொண்ட சீசா 1-க்கு ரூ. 7—0—0 பத்திய விபரம், மருந்துடன், பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 8—12—0 அனுப்பி வைக்கவும்.

கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.
2½ X 5 நீ. கம்பிக்கரைபட்டு ரூ. 1-8
டைகுண்டஞ்சுகரைடஜன் 1க்கு 15-0
No. 2 டஜன் 1க்கு 12-0
3 X 8 நீ. பட்டு வேஷ்டி 1க்கு 3-8
S. K. R வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர்,

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம் கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:-
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

:0:

'தமிழன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு „ 4—0—0
ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $ 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0
ஆசிரியர்: கோ. சாரங்கபாணி
விலாசம்:—
மானேஜர், "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

"போர் முரசு"

வாரப் பதிப்பு.
ஆசிரியர், ச. ம. ச. பரமசிவம்.
தனிப்பிரதி காலணா.
வருட சந்தா. ரூ. 1—8—0
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர் - திருச்சி.

'குமரன்'

வாரப்பதிப்பு
உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0
மாதப்பதிப்பு.
உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0
ஆசிரியர்: சொ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்.

(1930ம் ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)
M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது
விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—5—0
மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ந் தேதி "குடி அரசி"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன் பணமனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

புதுவைமுரசு

ஆசிரியர்-
அ. பொன்னம்பலனார்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகியமுறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச்செந்தமிழ்வாரப் பத்திரிகை. வருடசந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிபிரதி இனம்!

மானேஜர்,
"புதுவைமுரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

தக்ளியில் நூல் நூற்று சுயராஜ்யம் பெற்ற தேசங்கள் எத்தனை?

(The Work before us)

நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

ஜாதி மதம் ஒழிவதற்கு, இனிவரும் சந்ததியாரைக் கற்பிக்க வேண்டிய அவசியம்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(IX)

"நாம் கெட்டது கெட்டோம்; போனது போகட்டும், இனியாகிலும் இனிவரும் நமது சந்ததியாரைக் காப்பாற்ற முயல்வோமாக", என்னும் பொதுவுடைமையோர் கோரிக்கையை சற்று விசாரித்தறிவோம்.

முன் அத்தியாயத்தில், ஜாதி ஒழிவதற்கு அரசியல் உதவி வேண்டிய அவசியத்தைக் குறிப்பிட்டோம். அத்துடன் பாமர ஜனங்களின் அறியாமையை நீக்கவேண்டி, மெஞ்ஞானம் பரவவேண்டிய அவசியத்தையும் குறித்துக் காட்டினோம். ஆனால், தற்போது வாழும் ஜனசமூகங்கள், பல தலைமுறையகத் தொன்று தொட்டு வந்த பழக்க வாசனையால், ஜாதி, மத பொருள் உரிமைகளை விட்டொழிப்பது மிகக்கஷ்டமாகையால், மனித ராசி, எந்த காலத்தில் இத்தாதி அநாகரீகங்களிலிருந்து விடுபடும்? என்ற சங்கை பலர் உள்ளத்தில் தோன்றுவதால், மனித குலத்திற்கு விமோசனமுண்டா? என்பதைச் சற்று விசாரித்தறிவோம்.

உலகில் இன்று 160 கோடி ஆண், பெண் குழந்தைகள் கூடிய மனிதர் கூட்டம் வாழ்ந்து வருகின்றன. இவர்களில், பெரும்பான்மையோர், தங்கள் முதியோர்கள் வாயலாக வந்த மதபழக்க வழக்கங்களில் கட்டுண்டவர்கள். நமது நாட்டில், இத்துடன் பெரும் பான்மையோரும், ஜாதிக் கட்டுப்பாட்டிலும் பழகி வந்தவர்கள். இந்தப்பழக்கம், முதியோர்களை விட்டுப்போகுமா? என்பது தான் சங்கை? இவ்வளவு காலம் இந்திய சமூக வாழ்க்கையில் கலப்புற்றிருந்துவரும் ஜாதி, மதம், நீங்குவதெக்காலம்? தற்கால மனிதவகுப்பில் வழங்கும் அபிப்பிராயங்களும், கோட்பாடுகளும், எண்ணங்களும், நடையுடைபாவனைகளும், பழக்கத்தினால் வந்தவை. எதையும் நாம் மண்மேல் பிறக்கும்போது கொண்டு வந்ததில்லை. இறக்கும் போதும் கொண்டு போவதில்லை? நடுவில் சொல்வதைப்பார்த்தும், கேட்பதைக் கேட்டும், நடப்பதை நடத்தியும் வருகின்றோம். கடவுள், தெய்வம், பேய், பிசாசு, பிராமணன், சூத்திரன், பறையன், பள்ளன் என்றவை சொற்களே யொழிய தனிப்பட்ட பதார்த்தங்களுமல்ல, பொருளுமல்ல. சொன்னதைச்சொல்லும் கிளிப் பிள்ளைகள் போல் இச்சொற்களை உலகம் சொல்லிக்கொண்டு வந்திருக்கின்றதே யொழிய, மற்றபடி யாரும் பார்க்கக்கூடியபொருள்கள் அல்ல. இவ்வார்த்தைகளை, மனித குலம் உற்சரிக்காவிட்டல், கண்களுக்குத் தோன்றப் போவதில்லை. காதுகளுக்குக் கேட்கப்போவதில்லை. மூக்குக்கு வாசனையுண்டாகப்போவதில்லை. நாவுக்கு, ருசிக்கப்போவதில்லை. உடம்புக்குஸ்பரிசிக்கப்போவதில்லை. இந்தசொற்களை, வாயால் பேசாவிடடல், உலகில் வழங்காமலே போய் விடும். சந்ததி மூலமாக எழுதி வைத்துள்ள ஏட்டுகளாலும், பேசும் வார்த்தைகளாலும், ஜாதி, மதம், கடவுள், தெய்வம் மென்ற சொற்கள் உலகில் வழங்கி வருகின்றனவே யொழிய நிலையுள்ள பொருள்களை குறிக்கும் சொற்கள் அல்ல. இவைகள், வெருஞ்சொற்கள். இந்த வெருஞ்சொற்களுக்காகவே கட்டியுள்ள கோயில்களும், தரிக்கும் பூணூல்களுமென அறிக! இந்த வெறும் வார்த்தைகளைக் கேட்டு மயங்கித் தயங்கி நிற்கும் உலகை என்னென்று நினைப்பது?

ஜாதி, மதங்களால் உலகிற்காகிலும், அல்லது இந்தியருக்காகிலும், எந்தவித நன்மையும் விளைந்ததாக எண்ண இடமில்லை. இவ்விரண்டு நம்பிக்கைகளால் உணவுப்பொருள்விளைவுற்றனவா? உடைபொருள் அதிகரித்தனவா? எந்த வித செல்வமாகிலும், நாட்டில் பெருகிற்றா? அல்லது அறிவாகிலும் விருத்தி அடைந்ததா? பாமர மக்களுக்காகிலும், அல்லது கற்றவர்களுக்காகிலும், தெளிவும், ஞானமும் பெருக்கவைத்தனவா? உலகிற்கு உபயோகமாகும்படியான, எந்தப்பொருளையாகிலும், அல்லது பகுத்தறிவையாகிலும் உண்டாக்கினவா? ஜாதி மதங்கள் மனித குலத்தில் தோன்றிய முதல் சண்டையும், போரும், கலகமும், வைராக்கியமும், சமூகவித்தியாசங்களும், வேறுமையும், வீண் செலவும், வீண் பிரயாசையும், பொய் நம்பிக்கைகளும், பித்தும், அகந்தையும், அழிவும், நாசமும் உலகில் விளைவதற்கு அஸ்திவாரங்களாக இக்கொடூர கற்பனைகள் இருந்து வந்தனவே யொழிய மனித வாழ்வுக்கு எந்த உபயோகத்தையும் தர, சக்தியற்றவைகளாவே இருந்து வருகின்றன. ஆனால் இவ்வளவு கொடிய கற்பனைகள், இவ்வளவு காலம் சமூக வாழ்வில் தங்கி இருக்கின்றதே என்று கேட்கலாம்? கெடுதியை விளைவிக்கும் இந்த எண்ணங்கள் என் இதுகாறும் அழிவின்றி நிலைத்து வருகின்றதென்றும் கேட்கலாம்?

மதங்கள் உண்டான பிறகு, அவைகளுடன் நீதியும், நெறிமுறைகளும், மதங்களோடு, மதகுருக்களால் தந்திரமாக சேர்க்கப்பட்டன. புராதன சமூக ஒழுங்குகளாகிய ஈகை, தயை, அன்பு, ஒற்றுமை, இவை போன்ற நற்குணங்களை, ஒரு பக்கத்தில் மதங்கள் தழுவிக்கொண்டு, மதக்கோட்பாடுகளுடன், சமூக வாழ்வுக்கு இன்றியமையாதனவாகிய நற்குணங்களையும், நற்செய்கைகளையும், வற்புறுத்தத்தலைப்பட்டன. "உன் தெய்வம் பெரிது, என் தெய்வம் பெரிது" என்று சண்டையிட்டுக் கொண்டு வருவதோடு, நீதி நெறியுடனும் நடக்க வேண்டுமென்றும் மதங்கள் சொல்லிக்கொண்டு வந்தன. இந்த வேஷத்தால், மதங்களுக்கு ஆயுள் நீண்டுவந்தது. இரண்டாவது ஆதிகாலத்தில், மதங்கள் தங்கள் கொடூர கோட்பாடுகளை தணித்துக்கொள்ள நேரிட்டது. மனிதர், மெஞ்ஞானத்தால் பகுத்தறிவை திகரித்துக்கொள்ள சந்தர்ப்பம் நேர்ந்ததும், மதக்கோட்பாடுகளை கண்டிக்கத்தலைப்பட்டனர். இதனால், மதங்கள், முன்னிருந்த பிடிவாதங்களையும், முரட்டுத்தனங்களையும் மிருகத்தன்மையையும், சற்று இழக்க நேரிட்டது. நாகரீகம் பரவ, பரவ அறிவு துலங்கத்துலங்க, பகுத்தறிவு அதிகரிக்க அதிகரிக்க, மதங்களின் மிருகத்தன்மை குறைந்து மானுஷீகத்தன்மையை அடையலாயின. மதங்கள், இந்த மாறுதலை அடையாதிருக்கும் பட்சத்தில், மனிதப்பூண்டு அழிவுற்றிருக்கக் கூடும். என் இந்த கொடூர ஸ்தாபனம், மனித சமூகத்தில் முளைத்தது என்றும் கேட்கலாம்? மனித சமூக வாழ்க்கையில், நல்லதும், கெட்டதும் இயற்கையாகவே தோன்றுகின்றன. சில சீவன்களுக்கு நல்ல உறுப்புகளும் தோன்றுகின்றன. கெட்ட உறுப்புகளும் தோன்றுகின்றன. ஆனால் கெடுதியை விளைவிக்கும் உறுப்புகள் வலிவு பெறுமாயின் அந்த சீவன்கள் நாசமுறுகின்றன. சிவதேரியம், விஷ்ணு தேரியம், பிரம தேரியம் என்ற பண்டைக்கால நாற்கால் மிருகங்கள், கெடுதியை விளைவிக்கும் சில அவையவங்களை பெற்றதனால் அம்மிருகவகை க்ஷீணித்துப்போயின. அதுபோலவே ஜாதிமத ஸ்தாபனங்கள் சிற்சிலமாறுதலை அடையாவிடின் மனிதப்பூண்டையே அழித்துவிட்டிருக்கும் இத்தியாதி காரணங்களால் ஜாதிமதங்கள் தற்காலம் நிலைத்து வருகின்றன.

மூன்றுவது காரணமும் கவனிக்கத்தக்கது. முன்போல் அரசுகள், மதங்களையும், ஜாதியையும், வைராக்கியத்துடன் ஆதரிப்பதில்லை. அனேக அரசுகள் மதஜாதி விஷயங்களில் நேராகத்தலையிட்டுக்கொள்ளாமல் பாராமுகமாக இருந்துவருகின்றன. இதனால் அரசுகளுடைய உதவியை இழந்த மதங்கள் தங்கள் ஆக்கிரம குணங்களை, சற்று சாந்தப்படுத்திக்கொள்ளவும் நேரிட்டது.

ஜாதியும் அவ்வாறே தணிவுற்று வருகிறது. ஜாதியின் அட்டகாசத்தையொழிக்க பலகாரணத்துவம் உண்டாய்வருகின்றன. முக்கியமாகத்தாழ்ந்த ஜாதியாரின்மனவெழுச்சி, ஜாதியின் கரேத்தைச் தணவுறச்செய்து வருகின்றது. ரயில், கப்பல் முதலிய போக்குவரத்துக்குவேண்டிய ஸ்தாபனங்களால் உயர்ந்தோரும், தாழ்ந்தோரும் கலந்து யாத்திரை செ

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

பிள்ளைப்பேறு

பிள்ளை பெறுவது எதற்கு?

[சாமி. சிதம்பரனார்]

II.

தற்காலத்தில் நமது நாட்டில், தங்களுக்குக் குழந்தைகள் வேண்டுமென்று விரும்பாத குடும்பங்களில்லை. ஒவ்வொரு பெற்றோர்களும், தங்களுடைய மக்களுக்கு மணஞ்செய்து வைத்தபின் அவர்களுக்கு குழந்தை பிறத்தலையே ஆவலோடு எதிர் பார்த்து நிற்கின்றனர். குழந்தை பிறக்க நாளாகி விட்டால், அதன் பொருட்டு அவர்கள் அடையும் மனத்துயரத்தை அளவிட்டுக் கூற முடியாது. அதற்காகக் "கடவுள்"களை வேண்டுகின்றனர்; விரதம் முதலியவைகளை அநுஷ்டிக்கின்றனர்; தங்கள் மக்களையும் இவ்வாறு செய்யும்படி வற்புறுத்துகின்றனர்.

எந்த வகையிலும் பிள்ளையில்லாவிட்டால் தம்பதிகள் அடையும்துன்பத்திற்கு அளவில்லை. அவர்கள் பிள்ளைப்பேற்றை விரும்பி, காசியாத்திரை, ராமேஸ்வர யாத்திரை, திருப்பதி யாத்திரை போன்ற யாத்திரைகளைச் செய்கின்றனர். அரசமரத்திற்குக் கல்யாணம், நாகைப் பிரதிஷ்டை போன்ற காரியங்களையும் செய்கின்றனர். இன்னும், புரோகிதர்களையும், ஜோசியர்களையும் அழைத்துச் சாந்தி கழித்தல், கிரகதோஷ நிவர்த்தி செய்தல் போன்ற காரியங்களையும் பொருட் செலவு செய்து முடிக்கின்றனர்.

இவையல்லாமல், எங்கேயாவது, சாமியார் சாம்பல் கொடுத்துப் பிள்ளையுண்டாக்குகிறார் என்று கேள்விப்பட்டாலும், மஸ்தான் தண்ணீர் கொடுத்துப் பிள்ளையுண்டாக்குகிறார் என்று கேள்விப்பட்டாலும், உடனே தங்கள் மனைவிமார்களைக்கூட்டிக்கொண்டு பிள்ளை வரத்திற்காக அவர்களிடம் ஓடுகின்றார்கள். சயன்சு படித்த சர்வகலாசாலைப் பட்டதாரிகள் கூட இவ்வாறு செய்கிறார்களென்றால் கல்வியறிவற்ற சாதாரண மக்களின் நிலையை என்னென்று சொல்லுவது? பிள்ளை பிறக்கும் என்று யார் எந்தக்காரியங்களைச் செய்யச் சொன்னாலும் அந்தக்காரியங்களையெல்லாம் செய்கின்றார்கள். உண்பதற்கும், உடுப்பதற்கும், உறைவதற்கும் வழியில்லாமல் நித்திய தரித்திரர் முதல் கணக்கற்றசெல்வமுடைய பணக்காரர் வரை எல்லோரும்பிள்ளை பெறும் விஷயத்தில், இவ்வளவு முயற்சியும், கவலையும் உடைவர்களாயிருக்கிறார்கள்.

பிள்ளை பெறும் விஷயத்தில் இந்துக் குடும்பங்களில் இவ்வளவு அக்கரையிருப்பதற்குக் காரணம் என்ன என்று பார்ப்போம். பிள்ளை பெறுதலும் மத சம்மந்தமான காரியமாகக்கருதப்படுவதே காரணமாகும். சாதாரணமாக "பிள்ளையில்லாதார்க்குப் புண்ணிய லோகமில்லை" என்னும் பழமொழி நமது நாட்டில் வழங்குகிறது. பிள்ளையில்லாத் ஒருவனைப் பார்த்து "கொள்ளிவைக்கக் கூட பிள்ளையில்லாத பாவி" என்று இகழ்ந்து கூறுவது வழக்கமாக இருக்கிறது. பிள்ளை பெறாத ஒருத்தியையும் இவ்வாறே இகழ்ந்து பேசுவதுண்டு. பெரும்பாலும எல்லோரும், பிள்ளையினால் தான்—அதாவது பிள்ளைகள் தமக்குச் செய்யும் இறுதிக் கடனால் தான் தாம் மறுமையில் நல்ல கதியை அடையமுடியுமென்றும், அதற்காகப் பிள்ளை வேண்டியது அவசியமென்றும் கருதுகின்றனர். பெண் குழந்தைகள் இருந்தாலும், பிள்ளையிருப்பதாகக் கருதுவதில்லை. ஏனெனில், பெற்றோர்க்குக் கருமம் பண்ணும் அதிகாரம் படைத்தவர்கள் ஆண் பிள்ளைகளேயன்றிப் பெண் பிள்ளைகள் அல்லர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இந்தக்காரணத்தால் தான் பெண் மக்களுக்குச் சொத்துரிமையையும் சுதந்திரமும் மறுக்கப்பட்டிருக்கின்றன.

எந்த வகையினாலாவது ஒவ்வொரு குடும்பத்திலும் ஆண் பிள்ளை பிறந்தாக வேண்டுமென்பது இந்து மதக் கட்டளை. இதனாலேயே பல தார மணம் இந்து மதத்தில் அநுமதிக்கப்பட்டிருக்கிறது. ஒருவனுக்கு முதல் மனைவிக்குப்பிள்ளை பிறக்காவிட்டால் இரண்டாவது மனைவியாக வேறொரு பெண்ணைக்கலியாணம்செய்து கொள்ளலாம்; அவளுக்கும் பிள்ளை பிறக்காவிட்டால் வேறுகல்யாணம்பண்ணிக் கொள்ளலாம். இந்த மாதிரியாக எத்தனை கல்யாணம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். எந்த வகையிலும் பிள்ளை பிறக்காவிட்டால் "சுவீகாரம்" எடுத்துக்கொள்ளலாம் என்று இந்துமத ஸ்மிருதிகள் விதிக்கின்றன.

இதுமட்டோ? மற்றும் பல ஆபாசங்களும் இருக்கின்றன. ஒருவன் பிள்ளை பெறாமல் இறந்து போய்விட்டால், அவனுடைய மனைவியாகிய "கைம் பெண்" தனது கொழுந்தன்மார்களைச் சேர்ந்து பிள்ளை பெறலாம். அல்லது குலகுருவைச்சேர்ந்து பிள்ளை பெறவேண்டும். இவையெல்லாம் இந்து மதக்கொள்கை. மற்றும் எந்த வகையில் பிள்ளை பெற்றுக்கொண்டாலும் இந்துமதம் அநுமதிக்கும். இவற்றுக்கெல்லாம், பாரதக் கதையை உதாரணமாகக் கொள்ளலாம். திருதராட்டிரன், பாண்டு, விதுரன் முதலியவர்களும், பாண்டவர்களும் தம் சொந்த தகப்பன் மார்களுக்குப் பிறந்தவர்கள் அல்லர் என்பது பாரதக் கதை படித்தவர்களுக்குத் தெரியாத செய்தியல்ல.

ஆகவே, பிள்ளை பெறவேண்டுமென்பதற்காக இவ்வளவு நிர்ப்பந்தங்களும், ஆபாசங்களும் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், இந்து மதமும், புரோகிதர்களின் புரட்டுமே யாகும். மறுமை மயக்கமே எந்த வகையிலாவது புத்திரன் வேண்டும் என்னும் எண்ணத்தை உண்டாக்குவது. "புத்திரன்"என்னும்சமஸ்கிருத வார்த்தைக்கு "நரகத்தை நீக்குகிறவன்"என்ற அர்த்தமே வழங்கி வருகிறது. ஆகையால், நமது இந்து சமூகத்தாரிடமிருந்து "பிள்ளை பெற்று ஆகவேண்டியது கடமை" என்னும் பைத்தியத்தை நீக்கவேண்டுமானால், முதலில் மறுமை நம்பிக்கைப் பைத்தியத்தையும், புரோகிதப் புரட்டின் சூழ்ச்சியையும், இந்துமத நம்பிக்கையையும் ஒழித்தால்தான் முடியும். இல்லாவிட்டால் பிள்ளை பெறும் பைத்தியத்தை நீக்க முடியாது.

மேற்கூறியவைகள் பார்ப்பனமதக் கொள்கையாகும். இனித் தமிழர் கொள்கை எப்படியிருந்தது என்பதைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம. தமிழர்க்குப் பார்ப்பனர்களின் சம்பந்தம் ஏற்பட்டபிறகுதான் சாதி சமயப் பைத்தியங்களும், இம்மை மறுமைக்கான சடங்குகள் செய்யும் புரோகிதப் பைத்தியமும் உண்டாயின என்பதில் ஐயமில்லை. இதற்கு முன் தமிழர்கள் தேசத்தைக் காப்பாறும் பொருட்டு ஆண் பிள்ளைகள் பெறவேண்டும் என்ற கருத்துடையவர்களாயிருந்தனர். இதனைப் புறநானூறு என்னும் தமிழ் நூலில் வரும் கீழ்க்கண்ட பாடலைக்கொண்டு அறியலாம்.

ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே
சான்றோன் ஆக்குதல், தந்தைக்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
ஒளிறுவாள் அரும் சமம் முருக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

என்பது புறநானூற்றுப் பாடல். இதன் பொருள்:— குழந்தையைப் பெற்று வளர்ப்பது என்னுடைய கடமை. அவனை அறிவுடையவனாகச் செய்தல் தந்தையின் கடமை. நல்ல ஒழுக்க முடையவனாகச் செய்தல் அரசனுடைய கடமை. அவனுடைய வேல் என்னும்ஆயுதத்தை கூர்மையாகச் செய்து கொடுத்தல் கொல்லனுடைய கடமை. நாட்டின் மீது பகைவர்கள் படை எடுத்து வரும் போது அஞ்சாமற் சென்று அவர்களுடன் போர் செய்து, அவர்களுடைய யானைப்படை முதலியவர்களைக் கொன்று வெற்றியோடு திரும்புதல் என் மைந்தனுடைய கடமை" என்பதாகும். இதனால் தேசப் பாதுகாப்புக்காகப் புத்திரர்கள் வேண்டுமென்பதே தமிழர்களின் நோக்கமென்பதை அறியலாம்.

இதற்குக் காரணம், பண்டைக் காலத்தில்-தமிழர்களில் ஜனத்தொகை குறைவாயிருந்த காலத்தில், ஜனத்தொகையை அதிகப் படுத்த வேண்டு மென்பதற்சாகப் புத்திரப் பேறு அவசியம் என்று ஏற்படுத்தப் பட்டிருக்கலாம். இப்பொழுதும், இட்டாலி, போன்ற தேசங்களில் ஜனத்தொகையைப் பெருக்க வேண்டுமென்பதற்காகப் பிள்ளை பெறுகின்றவர்களுக்கு, அரசாங்கத்தார் உதவி செய்வதையும், மணஞ் செய்து கொள்ளாமலிருக்கும் "பிரம்மச்சாரி" களுக்கு வரி போடுவதையும் காண்கிறோம் அல்லவா? இது போலவே ஆரியர்களுக்கும், ஒரு காலத்தில் மக்கள் அதிகமாக வேண்டியிருந்த காரணத்தால், பிள்ளை பெற வேண்டிய கடமையை மத சம்பந்தமானதாகச் செய்திருக்கலாம் என்று ஊகிக்கலாம்.

ஆகவே பிற்காலத்தில் - ஜனத்தொகை பெருக்க மடைந்த காலத்திலும் "கட்டாயம் பிள்ளை பெற்றாக வேண்டும். இன்றேல் நல்ல கதி கிடைக்காது' என்று நயபுதலும், அதற்காக முயற்சி செய்தலும் எவ்வளவு முட்டாள் தனமான செய்கை என்று யோசித்துப் பாருங்கள்!

ஆரியர்களின் கொள்கையில் மற்றொன்று கவனிக்கக் கூடியதாகும். அதாவது "ஒருவன் தன் குடும்ப விர்த்திக்காகவும், பிதுர்க்களின் கருமங்களுக்காகவும் பிள்ளை பெறும் நோக்கத்துடனேயே, கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டும். தன் மனைவியோடு சேருங்காலத்தில் கூட சிற்றின்ப சுகத்தைக் கருதிச் சேரக் கூடாது. குழந்தை வேண்டும் என்னும் நோக்கத்துடனேயே சேர வேண்டும். ஒரு ஆண் மகன் பிறந்தவுடன் பிறகு வானப்பிரஸ்தாச்சிரமத்தை மேற் கொள்வதே ஒழுங்காகும்" என்னும் அபிப்பிராயத்தை இந்து மதம் ஒப்புக்கொள்ளுகிறது. இதனால், கருத்தடை செய்யும் அபிப்பிராயத்தை இந்து மதம் ஆதரிக்கிறது என்று நிச்சயமாய்க்கூறலாம். இதிலிருந்து இந்து மதங்கூட, அதாவது பார்ப்பன மதங்கூட "புத்திரப் பேறு" ஜனத்தொகை விருத்திக்காக என்று அபிப்பிராயத்துடன் தான், அதை மத சம்பந்தமாக்கிற்று என்ப

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ஒழுக்க நூல்.

(S. லக்ஷிமிரதன்பாரதி M. A., B. L.)

உபயோகமானது; ஒழுக்கமானது
பொருத்தமானது, முற்றிலும்
சரியானது.

The useful. The virtuous,
The expedient, And
the right.

கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற் கொள்பவர்க்கு
(குறள் 99-ம் அதி 1.)

ஒழுக்கத்தி னெய்துபவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவ ரெய்தாப் பழி.
(குறள்)

நமது ஆராய்ச்சியின் பயனாய், ஒருவன் ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் முற்றிலும் சரியான ஒரு செய்கையைத் தெரிந்தொழுக வேண்டுமாயின் அவனுக்கு ஒரே நடத்தை அல்லது வழிதானிருக்கமுடியுமே தவிர பலவாறான சரியான செயல்கள் இருக்க முடியாதென்ற உண்மை யாவர் மனதிலும் நன்றாகப் பதிந்திருக்கும் இதிலிருந்து, ஒழுக்க நயச் சிறப்பு, ஒருமைப்பட்ட தனிச் செயல்களுக்கு அணிகலனாக அமைவதன்றி, பிரித்தெடுத்த பொது குணங்களுக்காவது மனத் துணிவுகளுக்காவது விசேட மதிப்புத் தர விரைவதல்லை என்று அறியக்கிடக்கின்றது.

செயற்பாலதோரும் அறனே யொருவற், குயற்பாலதோரும் பழி.
(குறள் அதி 5, 10.)

என்ற வள்ளுவரது குறளில் 'செயற்பாலதோரும் அறனே' என்ற ஒருமை ஏகார வலிமையும் உண்மையும் காண்க.

எனவே நாம் ஒருவிதமான செய்கை அல்லது நடத்தை, ஒழுக்கச் சிறப்பு நம்முடையதாவென்று மதிப்பிடுங்கால், அச் செயல் தன்மட்டில் ஒழுக்கமானதா, அல்லது தூயதொரு குணமாகக் கருதக் கூடியதா, (அதாவது அச் செய்கையின் மாட்டுப் பொதிந்து அதற்கு யிரளிக்கும் கருத்துக்களால் மட்டும் (interests which anim-te it) அது புனிதமுடைய செயலா) என்று யோசனை செய்வது மட்டும் போதுமானதல்ல. பொய்யாமை, (பொய் பேசாதிருத்தல்) ஒரு நல்ல ஒழுக்கமாகும். எனில் 'பொய் கூறுவதா' மெய்யுரைப்பதா என்றெழுகின்ற சங்கடமான ஒவ்வொரு சமயத்திலும், மெய்யுரைப்பதின் மேன்மை யொன்று பற்றி, நமக்கு அந்தச் சந்தர்ப்பததிற்கு அறம் அல்லது கடனாவது எது வென எளிதில் நிரூபணம் செய்துவிட முடியாது, மரணவேதனை அணுகிய சாகுந்தருவாயிலுங்கூட உயிரளிக்கும் மருந்தொன்றை, அதன் புலால் கலப்புப்பற்றி யருந்த மறுக்குமொரு நண்பனுக்கு அக் கலப்பை மறைத்துப் பொய் கூறியேனும், அவனைப் புசிக்கச் செய்தவனல்லுயிர் பேணல் நம் கடனாமா? இன்னும் காமத்தீ யெரியும் தீய சிந்தையாற் றூண்டிய அரசன் துயர்ந்து விரட்டிவர கற்பறம் பேணி, மறைந் தொதுங்கிப் பதுங்கிக் கிடக்குமொரு மடமாதினுறைவிடத்தை, வேந்தன் வெகுண்டு வினவினும் மெய்யுரைக்கும் மேன்மை கருதி, நவிலுதல் ஒருவனுக்கு நல்லறமாமோ? மற்றொரு வழியுங் காணாத அந்த இடத்துரைத்த பொய் ஒருபொழுதும் மெய்யாகாதா பொய்யே யாயினும் அறச் சிறப்பமைந்த தாகாதா? இந் நயங் கருதியே,

"தன்னெஞ்சறிவது பொய்யற்க
பொய்த்தபின், தன்னெஞ்சே
தன்னைச் சுடும்"
(குறள் 30-ம் அதி 3.)

என்ற பொய்யா மொழிச் செந்நாப போதாரும்,

"பொய்மையும் வாய்மை யிடத்த
புரை தீர்ந்த
தன்மை பயக்கு மெனின்"
(குறள் 30-ம் அதி 2.)

என்று கூறியுள்ளார். இன்னும் 'பாரதம்' பயந்தவில்லியும்,

"உம்மையின் மறுமை தன்னிலு
றுபயனிரண்டும் பார்க்கி
னிம்மையில் விளங்கும் யார்க்கு
மவர வறியற்கை யாலே
மெய்ம்மையே யொருவற் குற்ற
விபத்தினை மீட்குமாகிற்
பொய்மையு மெய்மை போலப்
புண்ணியம் பயக்குமாதோ"

என்று துரோண பருவம் 15-ம் போர்ச சருக்கத்தில் கூறியுள்ளார். வாய்மை யெனப்படுவது, யாதொன்றும் தீமையில்லாத சொல்லாமாயின், புல்லிய பொய்ம்மை வாய்மைவிடத் தாவதற்கு, 'புரை தீர்ந்த நன்மை பயந்து அதன் மாசற்ற உண்மையொளி கவருத லவசியமாகிறது. அதாவது, அறன் வழியன்றி, நாவிற்கணியாம் திறம்படப் பேசுந் துறையில் மெய்யனறிப் பொய்யும் சில காலத்துநயமுடைத்தென்றார் 'வான்புகழ்கொண்ட வள்ளுவர்' எனெனில் 'புரை தீர்ந்த பொய்' தன்னெஞ்சைச் சுடும் விடமிழந்து, நன்மை பயத்தலால், மனதிற் கியைந்ததும் பொதுவாய் அறவழிப் பட்டதுமான வாய்மைக்கு பொருந்தி உதவும் மருந்தாகின்றது.

நமது நடத்தையைப் பற்றிய ஆலோசனையின் போக்கு பின் எத்தகையதாக யிருத்தல் வேண்டும்? நாம் ஒப்பித் தெரிந் தெடுத்திருக்கின்ற முடிவுகளல்லது கொள்கைகளின் தொகுப்பாலாகிய கிரமமான முழுத் தொகுதிக்கேற்ப, முற்பட்டுச் செல்வதற்கு (In furtherance of the whole system of approved ends as a system) அந்தச் சமயத்தில் எந்தெந்தச் சாதகங்கள், தலை சிறந்த உதவியையும் பலனையும் தரத்தக்கனவோ அவற்றை உபயோகப்படுத்தும் படியான சிறமையும் அவசியமும் பொருத்தமுமுடைய செயலெது வெனக் கருதுவதாக மிருத்தல் வேண்டும். பொய்மை தன் மட்டில் மொய்மையாகாததன்றி ஒழுக்கமும் வாய்மையு மற்றதெனினும், மேற் குறிப்பிட்ட அந்தச் சந்தர்ப்பத்தில், மக்கள் யாண்டும் போற்றும் மகளிர் தம் கற்பறம் காக்கப் போதிய பொருத்தமும் அவசியமும் பொருந்திய உதவியாமா வென்று உற்று நோக்கின் அவ்விடத்து பொய்யாமையின் சிறப்பு நயம் தன் வலியிழந்து குன்றிக் கெட்லாமோ வெனச் சிந்திக்க நேரிடுகின்றது. எனவே ஒழுக்கம் பற்றிய சிந்தனை யெழுங்காலங்களில் வினைகளை இடம் பொருளேவல், காலம் ஆகிய பல வழிகளானும் பொருத்தமும் வசியமுமானவைகளாவெனப் பரிசோதனை செய்கின்றோம் ஆகவே, எதனோடு இயையுங்கால் ஒழுக்க நயச் சிறப்புடைத்து, என்று கருதுகிறோமோ, அந்தச் செய்கைகளாலாகிய நாம் ஒப்பியிருக்கு மொழுக்கத் தொகுதியானது மனத்தால் துணிந்துள்ள குண நயங்களாலும், பின் பற்றுமாறு கோரிய முடிவுகளாலுமாகிய வொரு கலப்புத் தொகுதி மட்டுமின்றி, முழுப் பயனையுமிய வல்ல, செயல்களாகிய பயிர்ச்சி முறையுமாகின்றது. (Also a programme of efficient activity) ஆகவே சிறப்பு நயஞ் சீர்தூக்குந் தன்மை, குணம் அல்லது மனப்பான்மை பற்றியதாயிருப்பதோடு, செய்கையைப் பயன்படக் கூட்டுவிக்கும் பொருளாதார நிலைமை (An economic phase) பற்றியும் சிந்திக்குந் தன்மையுடையதாக இருப்பதைக்காணுகிறோம். மங்கையின் கற்பறம் பேணுவது அந்தச் சமயத்திலறமாமெனின், அவ்வறம் ஆற்றுதற்கு முழுப் பயனுந் திறனுங்கொண்ட செய்கை யெதுவென சிந்திக்க நேரிடுகின்றது. தன் பலமென்ன? அரசனது பலமென்ன? காமத்தீ பற்றி வரும் வேந்தன்கொடு வினையை யகற்றுமாறென்ன?

"வினைவலியுந் தன் வலியுமாற்றான்
வலியுந்
துணை வலியுந் தூக்கிச் செயல்"
குறள் 48-ம் அதி 1.

"பொருள், கருவி, காலம், வினை,
யிடனொடைந்து
மிருடரே வெண்ணிச் செயல்"
குறள் 68-ம் அதி 5.

அச்சமயம் அப்பெண் மறைந்திருக்குமிடம் அரசன் கண்டு கொள்ளாதவாறு பொய் யொன்று புனைந்து கூறலே, பயன்பெற அறமாற்றுவதற்குற்ற வழியாமாயின் அதனையே தெளிந்து போற்ற நேரிடுகின்றது.

அறம் தர்மம், கடமையென்ற ஒரு பொருட் பன் மொழிகளை நாம் முற்றிப் பழுத்துதிர்ந்த, ஒழுக்க நயன்றாக்கும் ஆலோசனையின் முடிவை வெளிப்படுத்தும் விலையற்ற ரத்தினம் போன்ற சொற்களாகக் கொள்வோமாகில், அறன் இடம் பொருளேவல் காலம் இன்னோரன்னவற்றின் துணைகொண்டு,அதனால்பொருத்தமுமவசியமுடைய செயலாவது வெள்ளிடை மலை.'உபயோகமானது' (The useful) என்று ஒரு பொருளையோ, செயலையோ குறிக்குங்கால் நாம் இடம் பொருளேவல் காலமிவற்றாலாவது அல்லதுஇவைகளில் ஒன்றின் மூலமாவது ஏதாவதொரு வினையைப்பற்றி அப்பொருளையாவது,செய்கையையாவது குறிப்பிடுவோம். 'தண்ணீர் குடிப்பதற்கு உபயோகமானது' கடல் நீரைக் காச்சுவதின் மூலமாக நல்ல தண்ணீரும் உப்பும் தனித்தனியாகக் கிடைக்கும். கடல் நீரைக்காய்ச்சி குடிப்பதற்குபயோகப்படுத்தக்கூடும். ஆனால் யாரேனும் நல்ல தண்ணீர் எளிதில் கிடைக்கும் பொழுது கடல் நீரை அருந்துவதற்கு உபயோகமானதாகக் கருதுவார்களா? நல்ல தண்ணீர் கிடையாதொழியும் சில விடங்களில் கடல் நீர் உபயோகப்படுத்தப்படுகிறது. கடல் நீர் குடிப்பதற்கு உபயோகப்படக்கூடிய தென்று கூறுமளவில் நாம் அதன் உளதாந்தன்மை யொன்றுபற்றிப் பேசுகிறோமேயொழிய (Judgment of fact) அதின் பயனும்நயன்றாக்கமுங்குறிப்பிடுகிறோமில்லை. (Judgment of value) ஆனால் அது உபயோகமான தென்று சொல்லுகிறவளவில் அதன் பயன் தெரிந்து தீர்மானிப்போமாயினும், அந்தச் சமயத்தில் நமக்குப் பொருத்தமுமவசியமும் பொருந்தியது (Expedient) அது ஒன்றுதானா வென்று முற்றிலும் சீர்தூக்கி ஒரு முடிவிற்கு வந்த தீர்மானமாகாது. தேக்குமரம் வீடு கட்டுவதற்கு உபயோகமானது. ஆனால் சொற்ப சம்பளமுள்ள சொத்தில்லாத ஒருவன் தன் வீட்டைத் தேக்கு மரத்தினால் கட்டுவதற்கியலுமா? ஆதலால் அவன் முற்றிலும் சிந்தித்துத் தன் வீட்டைக்குறைந்த விலையுள்ள தன் பொருளுக்குத்தக்க, உத்தரம் நிலைகதவுகளால் கட்டத்துணிந்தவனாயின், அவைகள் பொருத்தமும் அவசியமும் பொருந்தியவாகலின், அவனது தீர்மானம் பொரு வழியில் முதிர்ந்து பழுத்து நேர்மையானதாகும். எப்படி உபயோகமானதென்று நாம் தீர்மானிக்கிற பொருள்களோ செயல்களோ எல்லாச் சமயங்களிலும் நமக்குப் பொருத்தமும் அவசியமும் பொருந்தியனவாதலவசியமில்லையோ அத்தன்மையே போல் நாம் 'நல்லது ஒழுக்கமானது' என்று கருதுகின்ற குணங்களெல்லாம் (The virtuous) ஒழுக்கம்.

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

அண்ணன் தம்பிகள் சண்டையா? விரோதிகள் சண்டையா?

தேசீயமும், மதமும், பணக்காரர்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதே.

[உடுமலை கனகராஜன்]

தோழர்களே, நான் இக் கட்டுரை எழுதுவதின்நோக்கம் தேசீயம் என்பது ஒரு சூட்சி என்பதை தெளிவாக நிருபிப்பதற்கேயாகும். ஒரு சிலரின் நன்மைக்காக, எல்லோரையும் பாடுபடும்படி செய்யும் பொருட்டு, சூட்சியாக ஏற்பட்டது என்பதை நீங்கள் தெரிந்துகொள்ளவேண்டும். அதுபோலவே, தற்போதைய தேசீய சட்டமறுப்பியக்கமும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதை அறியாது மக்கள் கண்மூடித்தனமாக அதிலீடுபடுகிறார்கள்.

ஒரு சிலர் தங்கள் வசதிகளுக்காக, அதாவது பணக்காரத்தன்மையை நிலைபெறச் செய்யும் மதம், கர்மம், பரலோகம் முதலியவைகளைக் காப்பாற்றுவதற்காகவும், பிறப்பின் காரணமாகவுள்ள உயர்வு, தாழ்வு சொத்துரிமை, ஜாதித் திமிருக்கு உரிமை முதலியவைகள் அப்படியே நிலைத்திருப்பதற்காகவும், காங்கிரசில் சூட்சியான திட்டங்களை வகுத்துக்கொண்டு, அந்த சூட்சியான திட்டங்களை கொண்டே சுயராஜ்யத்திற்கு, சிலருக்கு அனியாய உரிமைகளையளிக்கும் சுயராஜ்யத்திற்கு, பார்ப்பானுடைய பணக்காரனுடைய, சோம்பேரிகளுடைய, மத குருக்கள், மடாதிபதிகளுடைய கொடுமைகளை நீக்க முடியாத சுயராஜ்யத்திற்கு, வஞ்சகமாக ஏழைகள் என்று ஒரு பிரிவைக் கொண்ட சுயராஜ்யத்திற்கு, ஏழைகளையும் மதத்தால் கொடுமை செய்யப்பட்டவர்களையுமே போராடும்படி அழைப்பதும், அதற்கும், அனேக ஏழைகளும், பெண்களும், வாலிபர்களும் இசைந்து மண்டையை உடைத்துக் கொள்வதையும் பார்த்தால் மக்களுக்கு பகுத்தறிவு வளரவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக விருக்கிறது. நிற்க,

சுயராஜ்ய மாய்கையில் சிக்குண்டவர்கள், சுயமரியாதைக்கும், காங்கிரசுக்குமுள்ள சண்டையை அண்ணன் தம்பிகள் சண்டை என்றும், அதைப் பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்றும், அரசாங்கத்தாருக்கும் காங்கிரசுக்கும் நடக்கும் சண்டையே உண்மையான விரோதிகளின் சண்டை என்றும், அதை எல்லோரும் ஒன்று சேர்ந்து கவனிக்க வேண்டுமென்றும் சொல்லுகிறார்கள்!

இதில் எது அண்ணன் தம்பிகள் சண்டை, எது உண்மையான விரோதிகளின் சண்டை என்பதை அறியவேண்டியது அவசியமே. இதை அறிவதற்குமுன் யார் நம்மை ஆள்கிறார்கள், யார் இந்தியர்களுடைய உழைப்பின் பலனை அனுபவிக்கிறார்கள், யார் தந்திரத்தாலும், பலத்தாலும் மக்களை அடிமைப்படுத்துகிறார்கள், யாருடைய சூட்சியினால் அனேக கோடி மக்கள் ஏழைகளாக பட்டினி கிடந்து சாகிறார்கள் என்று தெரிந்து கொள்ளவேண்டும்.

நாம் இதைக் கூர்ந்து கவனித்துப் பார்த்தால் அனேக கோடி ஏழை இந்தியர்கள் வெய்யிலிலும், மழையிலும் சேற்றிலும் காலை முதல் மாலை வரை பாடுபட்ட பலனை, இந்திய முதலாளிகளும், மத குருக்களும், மடாதிபதிகளும் ஆங்கிலேயர்களும், திருட்டுச் சொத்தைப் பங்கு போட்டுக் கொள்வதைப்போல் பங்கிட்டுக்கொள்கிறார்கள் என்பது வெளியாகும். இதில் ராணுவ பலத்தினாலும், அறிவின் திறத்தினாலும் ஆங்கிலேயர்கள் அதிகமான பங்கை அபகரித்துக்கொள்கிறார்கள். அந்த அதிக பங்கும் ஆங்கிலேயர்கள் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. சில பணக்காரக் கூட்டத்தார்களே அதை அனைத்தையும் அடைகிறார்கள்.

ஆகையால், அனேககோடி ஏழை இந்தியர்களின் உழைப்பின் பலனை, ஆங்கிலேயப் பணக்கார அரசாங்கமும், இந்தியப் பணக்காரர்களும், ராணுவ பலத்தின் மூலமாயும், மத ஆதிக்கத்தின் மூலமாயும் கொள்ளையடிக்கிறார்கள். இப்படி அடிக்கும் ஏமாற்றுக்கொள்ளைப் பொருளைப் பங்கு போடுவதில், முதலாளித் திட்டத்தைக்கொண்ட காங்கிரசிற்கும், முதலாளி அரசாங்கமாகிய ஆங்கிலேய அரசாங்கத்திற்கும் சண்டை ஏற்பட்டிருக்கிறது. தெளிவாகச் சொல்லவேண்டுமானால், அண்ணன் தம்பிகளான இந்திய முதலாளிகளுக்கும், ஆங்கிலேய முதலாளிகளுக்கும்தான் சண்டை ஏற்பட்டிருக்கிறது. இதைப் பகிரங்கமாகவே சொல்கிறேன்.

தேசீயத்தின் சூட்சி.

உண்மை இவ்விதமிருக்க, இந்த முதலாளிகள், தனிமையாக சர்க்காருடன் போராடாமல், தங்கள் காரியத்திற்காக தேசத்தைக் காட்டி, எல்லா தேச மக்களையும் அரசாங்கத்தின் மீது ஏவி விடுகிறார்கள். இதே தான் எல்லா தேசங்களிலுள்ள பணக்காரர்களின் சூட்சி, ஒரு தேசத்தின் தோல்வியும், வெற்றியும், அந்தந்த தேசத்திலுள்ள பணக்காரர்களுக்கே யொழிய மற்றவர்களுக்கல்ல. ஒரு காலத்தில் ரோமபுரியில், (Patricians) பெட்ரீஷியன்ஸ் (Plebians) பிளீபியன்ஸ் என்றும் இரு வகுப்பார்களிருந்தார்கள். அதில் பெட்ரீஷியன்ஸ் என்பவர்கள் பணமும், ஆதிக்கமுடையவர்களாகவுமிருந்துகொண்டு, பிளீபியன்ஸ் என்னும் ஏழைக் கூட்டத்தார்கள் மிருகங்களைப்போலவே நடத்திவந்தார்கள். இவர்களுக்கு அரசாங்க சபையில் பிரதிநிதித்துவமும் கிடையாது. இந்த நிலைமையில் அன்னியன் ரோமபுரியின் மீது படை யெடுத்து வந்துவிட்டான். உடனே பணமும், ஆதிக்கமும் படைத்த பெட்ரீஷ்யன்ஸ் என்பவர்கள், தாங்கள் மிருகங்களைப் போல் நடத்தும் பிளீபியன்ஸ் என்பவர்களை, தேசீயப் புரளியைச் சொல்லி, உதவிக்கழைத்தார்கள். அவர்கள் அதை அறிந்துகொண்டு, தங்களுக்குப் பிரதிநிதித்துவமில்லாத தேசத்திற்காக நாங்கள் போராடமாட்டோம் என்று மறுத்துவிட்டார்கள். உடனே பணக்காரர்களான பெட்ரீஷியன்ஸ், அவர்களுக்குப் பிரதிநித்வமளித்து அவர்களை தம்முடன் சேர்த்துக்கொண்டார்கள். இந்த மாதிரியே தங்களுக்குக்கஷ்டம் வரும்பொழுது மற்ற ஏழைகளை உதவிக்கழைப்பதும், சொந்தம்பாராட்டுவதும், சகோதரர்கள் என்று தற்காலிகமாகச்சொல்லுவதும் மற்ற சமயங்களில் அவர்களை மிருகத்திற்கும் கேடாக நடத்துவதும் பணக்காரர்களுடைய சூழ்ச்சியாகவிருந்து வருகிறது.

தற்போது காங்கிரசின் நிலைமையும் இம்மாதிரியே இருக்கிறது. காங்கிரஸ்கோரும் சுயராஜியம் கிடைத்துவிட்டால் இந்தியர்கள் ஒவ்வொருவருக்கும் இந்தியாவிலுள்ள பூமியில் சொந்தமுண்டா? எல்லோருக்கும் குடியிருக்க வீடுகள் கிடைக்குமா? மடாதிபதிகள், குருக்கள் கொள்ளைகள் ஒழியுமா? ஏழைகள் என்று ஒரு சாரார் இல்லாதொழிவார்களா? என்று யோசித்துப்பாருங்கள். சுயராஜியம் வந்த பிறகும் மதக்கொடுமைகளும், ஏழைகளும், இருப்பதானால் சுயராஜியம் எதற்கு? வேண்டுமானால் இந்திய முதலாளிகளுக்கு பங்கு அதிகம் கிடைக்கும். சுயராஜியத்தில் மதம், பழக்கவழக்கம் பாதுகாக்கப்படுமாகையால் மனு(அ)நீதி ராஜியத்தைப்போல் பிறப்பினால் கற்பிக்கப்பட்ட உயர்வு, தாழ்வுகள், பழக்கவழக்கத்தினால் உயர் ஜாதியார் எனப்படுவோருக்குள்ள பிரத்தியேக உரிமைகள் (Privileges) காப்பாற்றப்படும். இந்த சுயராஜியத்திற்காக, ஏழைகளும், மதத்தால் அடிமைப்படுத்தப்பட்ட பெண்களும்தீண்டாதார்களும் ஏன் போராடவேண்டும் என்பது விளங்கவில்லை. இதையறியாமல் எவ்வளவு ஏழைமக்கள் சட்டமறுப்பில் கலந்தும், சுயராஜியம் வந்தால் சுகம்பெறலாம் என்று எண்ணியுமிருக்கிறார்கள்! காங்கிரஸ் சர்க்கார் சண்டையைப்பணக்கார அண்ணன் தம்பிகள் சண்டை என்பதை எப்பொழுது ஏழைமக்கள் அறிவார்களோ!!

சுயமரியாதைப்போரானது உண்மையான விரோதிகளான, தொழிலாளி, முதலாளி சண்டை, உயர்விற்கும் தாழ்விற்கும் சண்டை, சமத்துவத்தை நிலைநாட்டும் சண்டை, நியாயத்தை வழங்கும் சண்டை என்று எக்காலத்தில் மக்கள் உணரப்போகிறார்களோ தெரியவில்லை! இதை உணர்ந்த அதே நிமிஷத்தில் 'புயல்' உண்டாகிவிடும். பின் அதை சமாளிக்க யாராலும் முடியாது. அது தான் 'பொதுவுடமைப்புயல்'.

தேசீயம் என்பது பணக்காரர்களின் சூழ்ச்சியா அல்லவா என்பதை பர்னாட்ஷா என்னும் ஆங்கிலப் பெரியாரின் பேச்சிலிருந்து ஒருவாறு அறியலாம். அவர் ருஷியா போய் இங்கிலாந்துக்கு வந்ததும், ருஷியாவின் நியாயமான கொள்கைகளைப்பற்றியும், நேர்மையான அரசாங்கத்தைப்பற்றியும் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் பொழுது கூட்டத்திலிருந்த ஒருவர் அவரை நோக்கி 'இங்கிலாந்திற்கும் ருஷியாவிற்கும் யுத்தம் நடந்தால் நீங்கள் யாருடன் சேர்வீர்கள்' என்று கேட்டார். அதற்கு அப்பெரியார் 'நான் எதில் சேருவேன் என்பதைவிட, நீங்கள் எதில் சேரப்போகிறீர்கள் என்பதே முக்கியமான கேள்வி' என்று பதில் சொன்னார். இதிலிருந்து அவர் தேசீயத்தை எவ்வளவு அலட்சியம் செய்து பேசியிருக்கிறார் என்பது விளங்கும்.

தேசீயத்தின் சுய நலத்தை ஒரு உதாரணத்துடன் விளக்குகிறேன். ஒரு முதலாளியின் தோட்டத்தில் அநேக பண்ணை ஆட்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்ததோட்டத்தில் எதையாவது யாராவது திருடிக்கொண்டு போய் விட்டால் முதலாளியானவன் தோட்டத்திற்கு சொந்தமல்லாத பண்ணையாட்களிடத்தில் 'நீங்கள் வேலை செய்யும் தோட்டத்தில் களவு போனால் அந்தக்கேவலம் உங்களுக்கில்லையா' என்றும் 'நம் தோட்டததில் களவு போகவிடக்கூடாது' என்றும், எப்படி சொந்தம்பாராட்டி தன்னுடைய சொந்தக்காரியத்தை அவர்கள் காரியம்போல் காட்டி அப்பண்ணையாட்களுக்கு ரோஷம் வரும்படி செய்து ஏமாற்றித் தன் காரியத்தை முடித்துக்கொள்கிறானோ அதேமாதிரிதான் பணக்காரர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் உண்மையில் சொந்தமாயிருக்கும் தேசத்தை, ஏழைகளுக்கும் அதை அவர்கள் தேசம் என்றும்,

தொடர்ச்சி 15-ம் பக்கம் பார்க்க

"இரண்டில் ஒன்று."

(சாக்கோட்டை. எஸ். ஆர். சாமி)

குடிஅரசை வாங்கிப் படிக்காதவர்கள் ஏமாற்றுக்காரர்களால், ஏமாந்து கொண்டே இருக்கட்டும். ஆனால் அவர்களிடம் இதைப் படித்துக் காட்டி விடுங்கள். நன்ருக யோசித்த பின், மறு நாள் அவர்களுடைய போக்கைத் தெரிவிக்கட்டும்.

பொதுவாகப் பார்ப்பனர்களுக்கும், சிறப்பாக, பாமரர்களை ஏய்த்துப் பிழைத்தவர்களின் பிழைப்புக்கும், இவ்வேழு வருஷங்களாக அசைவு கண்டு விட்டது. நதி, நதி என்று சொல்லி ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு காசு பறித்தவர்கள் எத்தனை பேர்? மோக்ஷம், மோக்ஷம், அதுவும் உனக்கு மோக்ஷம், அப்பனுக்கு மோக்ஷம், உன் தாய்க்கு மோக்ஷம் என்று சொல்லிக் கோதானம், பூதானம், வஸ்திரதானம், சொர்ண தானம், பாத்திர தானம், பாதரக்ஷா தானம், இன்னும் உப்பு முதல் கற்பூரம் வரை வாங்கிக் கொழுத்தவர்கள் எத்தனை பேர்?? மற்றும் சிலர் லோகத்திற்கே குரு (லோக குரு) என்று ஆடம்பரத்தினுல் மிரட்டி வேறொன்றும் வேண்டாம் ரொக்கமாகவே (தக்ஷணை) உங்களுடைய கடமையைச் செலுத்தி விடுங்கள்; இல்லாவிட்டால் குருவின் கோபத்திற்குள்ளாவீர்; பிறகு 'நரகம்' வந்து சம்பவிக்கும் எனச் சொல்லி, ஏய்த்துப் பிழைத்தவர்கள் எத்தனை பேர்??? ஏன் இன்னும் பிழைக்கிறவர்களும் உண்டு.

இவர்களை யெல்லாம் குடி அரசு கண்டிக்க ஆரம்பித்தவுடன் அவ்வாலிபனை எதிர்த்தார்கள். நாங்கள் பெரியவாள், மேல்குலத்தவர்கள், நாங்கள் எல்லாம் முட்டாள்களா? எங்களை அப்படிச் சொன்னுல் நாக்கு அழுகி விடாதா? பின்னுல் நரக வேதனை தான், என்று மிரட்டிப் பார்த்தார்கள். இந்த மிரட்டல் பலிக்கவில்லை. பிறகு நாங்கள் எல்லாம் பிரம்மாவின் முகத்திலிருந்து வெடித்தவர்கள். இந்த ஏட்டைப் பாருங்கள், கடவுள் சொன்னது, அந்தப் புத்தகம் மனு, இந்த புத்தகம் சேர், அது நீதி, இது தர்மம், இது தான் எங்களுடைய ஐதீகம் என்று தத்துவார்த்தம் பேசிப் பார்த்தார்கள். அதற்கு குடி அரசு, கடவுள் சொன்னதாகவே இருந்தபோதிலும் ஆராய்ந்து தான் பார்ப்பேன். சமூகத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்றதாயிருப்பின், காலத்திற்கொத்தவாறு இருப்பின் ஒப்புக் கொள்ளுகிறேன் எனச் சொல்லி ஆராயுங்காலத்து கடவுள்களின் தன்மை, குட்டு, வெளிச்சமாயிற்று. ஏடுகளை ஆராயுங்காலத்து, ஒரு சாரார் வயிற்றுப் பிழைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட சுயநல சூட்சியே, என பட்டப்பகல் போல் வெட்ட வெளிச்சமாயிற்று. இன்னமும் ஆகிறது.

பிறகு ஒரு அறிவாளியை, வயது சென்றவரை, நன்ருக ஆங்கிலத்தில் தேர்ச்சியுடையவரை ஒரு எம். கே. யைப் பிடித்தார்கள். எங்களுடைய குலத்துக்குத் தீங்கு வராதபடி, எங்களுடைய சூட்சிகள் வெளியாகாதபடி எங்களை ஆதரித்தே பேசுங்கள். நீங்கள் சொன்னுல் தான் நம்புவார்கள். என்றார்கள். அதற்குத் தகுந்தாற்போல் அவரும், பகவத்கீதையையும், வருணாசிரம தர்மத்தையும், வலக்கண், வலக்கையாக வைத்துக் கொண்டு 'நான் தான் இந்தியா, இந்தியா தான் காங்கிரஸ், நான்தான் இந்தியாவிலுள்ள யாவருக்குந் தோழன்'' என்று தன்னுடைய ராமபஜனையுடன், இதையும் சேர்த்துக் கொண்டார் (அல்லா விட்டால் மகாத்மா பட்டம் பறந்து விடுமே) பகவத்கீதையில் தான் சுயராஜிய மிருப்பதாக நினைத்தார் போலும்; சுயநல சூழ்ச்சிகளைக் காப்பாற்ற என்னே! இவர்களது தந்திரம்!! இவர்கள் சொல்லும் சாத்திரம், கடவுள் என்பவைகளில் பலமில்லை எனக் கண்டவுடன் சுயராஜ்யக் கூப்பாடு அதிகமாயிற்று. 'சுயராஜ்யம்' என்று காந்தியார் ஒரு தரம் சொன்னுல் இவர்கள் ஆளுக்கு ஐந்நூறு தரம் சொன்னுர்கள். சொல்லுகிறுர்கள். ஏன் இப்படி சொல்ல வேண்டு மென்றுல் திரு. காந்தியாரின் மூலமாவது தங்களுடைய கடவுள், மதம், ஏடு, சடங்கு, ஜெயந்தி திருவிழாவாகிய இவைகளெல்லாம் நாட்டப் பார்த்த, பார்க்கிற ஒரு சூழ்ச்சியே தவிர, உண்மை சுயராஜ்யத்திற்கா? என்று தான் இவர்களைக் கேட்கின்றேன். இருந்தாலும் இவர்களுடைய சூழ்ச்சிக்கும், ஏய்த்துப்பிழைத்த பிழைப்புக்கும் ஆட்டந்தான்என் பதில் உண்மையில்லாமலில்லை.

எம்மதமாயினும், எக்கூட்டத்தாராயினும், எத்தலைவர்களாயினும், எவ்வேடுகளாயினும், நாட்டின் முற்போக்குக்கு முட்டுக்கட்டைகளாயிருப்பின், அவைகள் அறிவுடையோர்களால், புத்தியைசரியான வழியில் செலுத்தும் கூட்டத்தாரால், பகுத்தறிவை உபயோகப் படுத்துபவர்களால், ஒப்புக் கொள்ள முடியாதென்பது நாடறிந்தஉண்மை. ஆகவே நாம் மோக்ஷ டிக்கட் விற்பவர்களை, சாமிகளின் தரகர்களை, குருமார்களை, சங்கராச்சாரிகளை, கேட்பது என்ன வென்றுல் இவர்களுடைய அப்பன், பாட்டன், தாய், மோக்ஷ லோகத்தில் முதல் வகுப்பிலா? அல்லது மூன்று நாலு வகுப்பிலா? அல்லது தரையில் தானு? இவர்கள் எப்பதவியில், எவ்வகுப்புக்குப் போகப் போகிருர்கள்? என்று தான் கேட்கின்ருேம். இவர்களுடைய சூழ்ச்சிகளை மறைக்கவும், ஏடுகளை நிலை நாட்டவும் முயலுவது வீணுகத்தான் முடியும். முடிகிறது என்றும் சொல்லலாம். மற்றும் கடவுள்களின் ஊழல்களைப் பற்றியும், சாமிகளின் திருவிளையாடல்களையும் மறைப்பதற்கு இவ்வளவு தத்துவார்த்தமா? மறைக்க இவ்வளவு மிரட்டலா? ஐதீகமா? மகான் தன்மையா? சுயராஜிய உணர்ச்சியா?

தூங்கினவன் தொடையில் திரித்தவரையில் தான் லாபம். ஆனுல் இனியும் திரிக்கமுயலவேண்டாம். ஆனுல் நாங்கள் எழுப்பியும் இன்னும் தூங்கு கிறவர்களும் உண்டு. அதை நான் மறைக்க முயலவில்லை. அவர்களும் நன்ருக விழித்துக்கொண்டால் யார் தான் தொடை கொடுப்பார்கள். அதற்காக இவர்கள் கோபித்துக்கொள்வதில், நாத்திகப்பட்டமளிப்பதில், துவேஷிப்பதில் பயனில்லை. காலம் கலிகாலம் என்று சொல்லிக்கொண்டே மெதுவாக நழுவி விடுவதே ஏற்ற வழி. ஆகவே இவர்களை எல்லாம் தூஷிப்பது என்ற நோக்கங்கொண்டு இதை எழுத நான் முன்வரவில்லை. அதற்காக இதை எழுதவுமில்லை. சிலரிடமுள்ள சூழ்ச்சிகளை, நாட்டின் முற்போக்குக்குத் தடையாகவுள்ள மூடப் பழக்க வழக்கங்களை, எடுத்துச் சொல்லி, சீர்திருத்தத்திற்கு அழைப்பது தூஷிப்பதாகுமா? இவர்களும் உண்மை யுடையோராகவும், உண்மை தேசீய வாதிகளாகவும், உள் அர்த்தங்கள் வைத்து சுய நலத்தோடு பேசும் தன்மையை அகற்றியவர்களாகவும், இருப்பார்களாயின், இவர்கள் நமக்குத் தோழர்கள் தான். சீர்திருத்தச் சகோதரர்கள் தான். நிற்க,

இன்னும் துணிந்து கூறின், இவர்களுடைய கடவுள்களை, சாத்திரங்களை பழய ஏட்டுப் பிரதிகளை, விளம்பரப்படுத்துவதற்காக, நிலை நாட்டிக் கொள்வதற்காக, சுயராஜ்யம், சுயராஜ்யம், காந்திக்கு ஜே! போட்டுக்கொண்டு காங்கிரஸ்காரர்களாக வந்தாலும் சரி, அல்லது பக்தர் வேஷம் போட்டுக்கொண்டு பதரிக்கொண்டு வந்தாலும் சரி, அல்லது கரடி வேஷமே போட்டுக்கொண்டு "காவ்-காவ்" என்று கத்திக்கொண்டு வந்தாலும் சரி, மற்றெவ் வேஷத்தில் வந்தாலும் நேர்முகமாக நின்று, எதிர்த்தே தீருவோம் என்பது மாறுபடாஉறுதி. வீண் கூப்பாடு போடுவதில் பயனில்லை. அரசாங்கத்தை வைவதும், கதர், கதர், என்று கதறுவதும் தலைவர் பட்டத்துக்காகவா? அல்லது மறு தேர்தலில் (இப்பொழுது நடந்த தேர்தலில் பணமும் செலவில்லாமல் பதவியும் கிடைத்து விட்டது) ஸ்தானம் பெறவா? அல்லது உலக பக்தன் எனப் பெயர் வாங்கவா? என்று இவர்களைக் கேட்கின்றேன். உண்மைக்குப் பாடுபடுகிறவர்கள் உண்டென்ருல் அவர்களிடம் வேலையில்லை. இப்பார்ப்பனர்கள் தான் சாமி, மதம், தங்களுடைய மேலான குலம், இவைகளைக்காப்பாற்ற கதர், கதர் தேசீயம், காந்தீயம் எனக் கதறுகிருர்கள் என்று நன்ருகத் தெரியும் போது, சூத்திரன் என்ற பெயரை தங்கமாக பாவித்து தலை மீது தாங்கிக்கொண்டு அவர்களுடனும் கூத்தாடுகிருர்களே! இவர்கள் எதைக்காப்பாற்ற? என்பதுதான் எனக்குவிளங்கவில்லை.

அன்னியர்கள் நம் தாய் நாட்டின் பொருளைச் சுரண்டுகிருர்களெனவீரம் பேசுபவர்களிடம், தன்னுடைய மக்களின் பொருளைச் சுரண்டும் அன்னியரை பாரதத்தாய் சுரண்ட விட்டுக் கொண்டிருப்பது தகுதியா? பேசாமலிருந்தால் பிறகு அன்னியர்கள் பாரத தேவியின் சேலையையும் சுரண்டி விடமாட்டார்களா? என்ற கேள்விகள் வேறு இருப்பினும், நான் சொல்வது என்னவென்றுல் அன்னியர்கள் அப்படி யென்றுல், இவர்களோ? கடவுள், மதம், மறு ஜென்மம், கோவில், தீர்த்தம், இவைகளின் பேரால் நம் பாமர மக்களின் பொருளைச் சுரண்டிக்கொட்ட வில்லையா? ஏன் இன்னும் சுரண்டிக்கொண்டுதானே இருக்கிருர்கள். வேண்டுமானுல் திருப்பதி, பழனி, சிதம்பரம், ஸ்ரீரங்கம் இன்னும் எண்ணற்ற கோவில்களின் உண்டியல்களில் விழும் பொருள், நகை, முதலியவைகளே போதிய அத்தாக்ஷியாகும் என்று சொல்வதற்கு முன் அப்பொருள்கள் யாவும் யாருடையது? என்று கேட்கின்றேன். அருமையான ஸ்தலம் 'திருப்பதி' என்று, 'ஆக்ஸ் போர்டு' லிருந்து யாராவது வந்து போடுகிருர்களா? ஐதீகமான 'சிதம்பர' மென்று 'ஆஸ்ட்ரேலி' யாவிலிருந்து யாராவது வந்து போடுகிருர்களா? பண்டைய காலத்துப் 'பழனி' என்று 'பார்லி' யிலிருந்து யாராவது வந்து போட்டார்களா? போடுகிருர்களா? எந்தஅன்னியன் அட்டிகையையும், பவுன் சங்கிலியையும், பணத்தையும், பவுனையும் போட்டு இவர்கள் சாமிகளின் உண்டியல்களை நிரப்பிவிட்டுப்போனுன்? எல்லாம் நம் பாமரமக்களுடையதே தவிர வேறு என்ன? இவர்கள்தான் உண்மையான அந்நியர்கள். இவர்களையும் இவர்களது சாமிகளையுந்தான் முதலில் விரட்டவேண்டும் அல்லது சாமிகளை யெல்லாம் ஒரு மூட்டையாகக்கட்டி ஒரு இடத்தில் குமித்துவிட்டு (எங்கேயாவது இடத்தில் குவித்தால்கூட இடத்தை அடைக்கும்) பெருங்கடல்களிலாவது போட்டுவிட்டு சுரண்டும் வழிக்கல்லாத நிரேக உழைப்பிலேயே இவர்களை உழைத்து ஜீவிக்கும் வழிக்குக்கொண்டுவரல்வேண்டும்.

புரோகிதர்களே! உங்களைப்பற்றி சுவாமிவிவேகானந்தா புரோகிதர்களை நாஸ்திகர்களைக் காட்டிலும் மூடர்களை கொடுமை இவற்றினின்றும் முளைத்தெழுந்தவர்கள் அபிவிருத்திக்கு எதிரிடையாக இருக்கும் இவர்களை

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

அந்தோ! பெண்ணுலகமே?

(திருமதி எஸ். நீலாவதி)

அந்தோ! பெண்ணுலகமே! அந்தோ! பெண்ணுலகமே அடிமைப் பெண்ணுலகமே!! வஞ்சகத்தால் வதைக்கப்பட்ட பெண்ணுலகமே!!! தன்னலத்தால் தாழ்த்தப்பட்ட பெண்ணுலகமே!!!! வைதீகப் பேய் வாய் வயப்பட்டு வாடி நிற்கும் பெண்ணுலகமே!!!!! உன் நிலை பற்றி என்னெழுதுவேன்? எது இயம்புவேன்? நெஞ்சம் கொதிக்கின்றதே? வயறு பற்றி எரிகின்றதே? நினக்கு எக்காலத்தினும் விடுதலையில்லையோ? எவ்விதத்தும் இன்ப வாழ்க்கைகிடையாதோ? அணுவளவு ஆதரவும் இன்றி அநாதி நிலையில் வீற்றிருக்கும் பெண்ணுலகமே! நீயேன் இப்பூவுலகில் இன்னும் உயிரோடு வாழ்கின்றனை? மற்ற நாட்டுப் பெண்களின் நிலையையும், உனது நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்குங்கால், உனது நிலையைப் பற்றி என்ன எழுதுவதென்பதே விளங்க வில்லை. அகங்கார வெறி பிடித்த வைதீகர்களால் நினது வாழ்க்கை அல்லோல கல்லோலப் படுகின்றதை யார் சிந்தித்துப் பார்க்கின்றனர்? இந்திய நாட்டில் பிறந்த ஒன்றிற்காக நீ மிருக வாழ்க்கை நடத்துவதும் நினது உரிமைகள் கடுமையாகப் பரிக்கப்படும் கொடுமையையும் என்னென்று எடுத்துரைப்பேன்?

வைதீக வெறியர்களே! தன்னல விரும்பிகளே! உங்களது வாக்குகள் பலிக்கும் காலம் இன்னும் எந்நாள் வரை? ஒரு புறம் மாதாக்களை மனங் கலங்க விட்டு விட்டு மறுபுறம் தாய்ப் பணி பேணுகிறீர்களே? தேசசேவை புரிகின்றீர்களே உங்களது தன்மையை எதற்கு ஒப்பிடுவது?

“தன்னைப் பெற்ற தாயார் தவிட்டுக்கழுகையில் கும்பகோணத்தில் (ஐயர் மாருக்கு) கோதானம் பூதானமோ?” வெகு அழகு! வெட்கம்! வெட்கம்!! சாதி ஆசாரத்தை விட்டு, சட்ட சபையில் திட்டமாய் வீற்றிருந்து பெண்ணுலகிற்குப் பெரும் துரோகம் இழைத்து வரும் பெரியோர்களே! உங்கள் மதம், சாஸ்திரம் வேதம் வருணம் ஆசாரம் இந்தியாவில் இந்த நூற்றாண்டில் எந்த இடத்தில் எந்த விதத்தில் வாழுகின்றதென்று கேட்கின்றேன்? உங்களால் போற்றப்படும் கொள்கைகள். உங்கள் மனதார மறுக்கப்பட்டு, நடவடிக்கைகளில் புறக்கணிக்கப் பட்டு, குழி தோண்டிப் புதைக்கப் பட்டிருப்பது உள்ளங்கை நெல்லிக்கனி யன்றோ? சுயநல வாதிகளே! மதப் பித்தர்களே!! பெண்நலம் மறுக்கும் பேற்றினர்களே! இவற்றை உணர்ந்துபார்க்க ஏன் உங்கள் மண்டையில் மூளையில்லாது போகின்றது. உங்களது கொள்கைகளில் உங்களுக்கே நம்பிக்கையில்லையே? மற்றவர்களுக்கேன் பூச்சாண்டி காட்டி மடக்குகின்றீர்கள். இமிடேஷன் ஆங்கிலேயர்களாகத் திரியும் நீங்கள் மத சாஸ்திரத்தைப் பற்றிப் பேச என்ன யோக்கியதையிருக்கின்றதென்றே கேட்கின்றேன். இன்று நீங்கள் சட்ட சபையில் வீற்றிருந்து மகளிர் முன்னேற்றத்தில் மண் அள்ளிப் போட்டு வருவது உங்கள் மூதாதையர் காட்டி விட்ட ஆசாரமா? பாட்டன்மார் சொல்லி விட்டுப் போன பழக்க வழக்கமா? ஏன் இவ்வாறு பெண் 'பாவத்தை' ஏற்கின்றீர்கள்? உங்கள் வைதீக விருட்சம் என்று வேரோடு சாயும்? என்று நாங்கள் விடுதலையடைவோம்? சுயநல ஆண் மக்களே! சிந்தியுங்கள்! சற்றே சிந்தியுங்கள்!! உங்களது வாழ்க்கையில் பலவிதத்தும் இன்ப மளிக்க வல்லவர் பெண்களே யல்லவா? சட்ட சபையின் மூலம் வெளியில் பெண்களுக்கு வேண்டிய மட்டும் துரோகம் செய்து விட்டு, வீட்டுக்குச் சென்று யாரிடம் குலாவுகின்றீர்கள்? எவரிடம் கூடி வாழ்கின்றீர்கள்? வைதீகர்களே! என் மகளிரை மனைவியராகக் கொள்ளுகின்றீர்கள்? பெண்களை ஏன் பேற்றெடுக்கின்றீர்கள்உங்கள் மத சாஸ்திர வேத இதிகாச புராணங்களை விட்டு சுயநல காரியங்களுக்காகப் பெண்களைத் தஞ்சமடையலாமா? என்று கேட்கின்றேன். வாசகர்களே! வாக்கியங்கள் அதிகக் கடுமை யென்று என் மேல் வருத்தமுற வேண்டாம்; பெண்ணுலகிற்கு வைதீகர்கள்செய்து வரும் அக்கிரமங்களையும், அநியாயங்களையும் இதோடு ஒப்பிட்டுப் பார்த்துப் பின்னர் பேசுங்கள், பெண்களின் முன்னேற்றத்திற்கு சமீபத்தில் சட்ட சபையில் வந்த மசோதாக்களை விட வேறு என்ன முக்கியமாக வேண்டியிருக்கிறது? அது விஷயத்தில் வைதீகர் தம்கொடுமைதெளிவாக விளங்கி விட்டதன்றோ? என் செய்வது? “தட்டிப்பேசஆளில்லையேல்தம்பி சண்டப் பிரசண்டன்' என்பதற் கொப்பசர்க்காரும் அவர் பக்கம் சேர்ந்துவிட்டனர். பழம் நழுவிப் பாலில்விழுந்த கதையாயிற்று.

சட்ட சபையும், வைதீகர்களும்.

ஆயிரக்கணக்காய்ப் பணம் அள்ளியிறைத்து, எல்லோரிடமும் ஓட்டுப் பெற்று, சட்ட சபைசென்ற அங்கத்தினர்கள் ஆங்குள்ள ஆசனங்களைக் கண்டதும் யாவற்றையும் மறந்து “தங்களுக்கு ஆசனம் சொந்தம்ஆசனங்களுக்குத்தாங்கள்சொந்தம்' 'காலரியில் வீற்றிருப்பது தான் நமது கடமை. நம்மைச் சுமக்க வேண்டியது தான் காலரியின் கடமை” என்று எண்ணி இறுமாந்திருப்பது வேடிக்கையாகவே யிருக்கிறது. மக்கள் நலத்திற்குழைப்போ மெனப் பசப்பி மகளிர் நலத்திற்கு மட்டற்ற கேடு விளைவித்து வருதல் மகாகொடுமையன்றோ? எம்மசோதாவிற்கும் வைதீகர் முட்டுக் கட்டையன்றோ பெரிதாயிருக்கின்றது. ஆனால் அவர் தம் பக்கம் தான் தற்போது காலமும் ஜெய காலமாயிருக்கிறது. திரு. சாரதாவின் மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்ட போது (மகாமதிபூகிகளான) சட்ட சபை அங்கத்தினர்கள் சபைக்கு வராது அச்சமயந்தான் இளைப்பாற்றிக் கொண்டார்களாம். ஆனால், இதைப் பற்றி அவர்கள் உடலைக்கூட கவனியாது உழைக்க வேண்டுமென வற்புறுத்த வில்லை “எல்லாந் தெரிந்த கள்ளன்” என்பது போல் விஷயம் பூராவும் தெரிந்து கொண்டு வேண்டுமென்றே விஷமம் செய்தது கண்டிக்கத் தக்கதாகாதா என்று தான் கேட்க விரும்புகிறேன். மசோதாவின் விதியோ அன்றி சட்ட சபையின் விதியோ எது ஒன்றையும் வலுக் கட்டாயமாய் ஆதரிக்க வேண்டு மென்பதல்லவென்பது தெரியாத செய்தியல்ல. ஆனால் நல்ல பிள்ளைகளாக நடக்க வேண்டுமென்னும் நோக்கமோ வென்றால், அதற்கு இது மார்க்கமல்ல; சாக்கடையை மூடி வைத்து நாற்றத்தைமறைப்பதற்குப் பதிலாக வெளியில் இழுத்துப் போட்டு மணக்க வைப்பதற்கே இது ஒப்பாகும். விருப்பமுள்ளவர்கள் ஆதரிக்கவும், இல்லாதவர்கள் நிராகரிக்கவும் செய்வது தான் ஒழுங்கு முறையில் சேர்ந்ததாகும். இனி அங்கத்தினர்களின் அரிய பேச்சை சிறிது கவனிப்போம்.

திரு. அமர்நாத் தத்தர்.

வருணாச்சிரம தர்மத்தில் நம்பிக்கையுடையவரென்றும், பண்டைக் கால மகான்களின் புனித சட்டங்களில் கை வைக்க ஒருவருக்கும் சுதந்தரம் கிடையாதென்றும் கூறியிருக்கின்றார். பண்டைக்கால மகான்களின் புனித சட்டப்படியும், வருணாச்சிரம தர்மத்தின்படியும் இவர் நடக்கின்றாரா? என்று கேட்க அச்சட்டசபையில் பெண்களின் நிலைமையறிந்த ஓர் பெண் அங்கத்தினர் இல்லாது போனது பெண்ணுலகத்திற்கு பெருமையின்மையாலேயாகும்.

மகான்களின் புனித சட்டங்களில் கைவைத்துக்கலைக்க ஒருவருக்கும் உரிமை கிடையாதென்று கூறிய இப்பெரியார் முதலில்தானே அதில் கைவைத்து தர்மத்தை எடுத்து விழுங்கி ஏப்பமிட்டு இந்திய சட்ட சபைக்கு வந்தது எத்தன்மையதென்று தான் எமக்கு விளங்கவில்லை. மேலும் இவர் சீக்கியர்களுக்கும், ஜைனர்கள், பௌத்தர்கள், முஸ்லீம்களுக்கும் வக்காலத்து வாங்குகிறார். ஆனால் அடுத்தாற்போல் ஒரு முஸ்லீம் அன்பர் பேசியிருப்பதையும் இவர் செவிகள் கேட்டிருக்குமென்பதில் சந்தேகமில்லை.

ஆச்சாரியார் அரிய சேவை.

இந்து விதவைகள் கஷ்டப்படுகின்றார்கள். அநீதியாக நடத்தப்படுகின்றார்கள் என்னும் கதை உண்மையைக்கொண்டு மெய்ப்பிக்கப்படவில்லை. நாடு முழுவதும் இதுசம்மந்தமாய் ஓட்டெடுத்தால் மசோதாவைக்கொண்டு வந்தவரின் கதை வெட்ட வெளிச்சமாகிவிடும் என்றும் இம்மசோதா இந்து சமூகத்தின் வேரையும், தர்மத்தின் வேரையும், வெட்டி வீழ்த்தி விடும் என்றும் கூறினர். இந்து விதவைகள் கஷ்டப்படவில்லை, அநீதியாக நடத்தப்ப-வில்லை, என்னும் இவர் கூற்றை என்னென்போம்? விதவைகள் துன்புறுவது உண்மையாயென்றறிய நாடுமுழுதும் ஓட்டெடுக்கவேண்டுமாம். நன்று! தற்போது ஒன்றும் முழுகிப்போய்விடவில்லை. மதபேதம் பாராது, சாதி பேதம் பாராது, கட்சிபேதம் பாராது, பால் வேற்றுமை பாராது, இன்றே ஓட்டெடுக்கப்புறப்படட்டும். அப்போது ஆச்சாரியார் கூறியபடியே கதை வெட்ட வெளிச்சமாவதை 'உங்காத்தா, எங்காத்தா, விடிந்தால் தெரியும்' என்பதைக்காணலாம். மேலும் இம்மசோதா இந்து சமூகத்தின் வேரையும், தர்மத்தின் வேரையும் வெட்டி வீழ்த்தி விடுமாம். ஒரு பாலாரைத்துன்புறுத்தத்தான் தர்மம் ஏற்பட்டதோ? துரோகமே உருக்கொண்ட ஒரு சமூகம் வஞ்சகமே குடிகொண்ட ஒரு சமூகம் வாழ்வதை விட சாவதுமேலல்லவா? கொஞ்சமும் நெஞ்சில் ஈரமின்றி விதவைகள் பழமாய்த்தின்று பாலில் கைகழுவுவதாக ஆச்சாரியார் அறைந்திருக்கின்றாரே? அவருக்குத்தக்க சவுக்கடி கொடுக்க ஆங்கு இருந்த எவரும் துணியவில்லையோ? ஆ! என்னே! பெண்ணுலகின் பரிதாப நிலை! பெண்மணிகளே! அவர் தென்னாடு போந்த பின் அவர்கழுத்தில் ஒரு தாலியைக் கட்டி பின் தாலியறுக்கச்செய்து சகல ஆக்கினைகளும் தவறாது செய்து ஆச்சாரியாரே விதவைகள் அநுபவிக்கும் இன்பம் இதுதான் என்று எடுத்துக்காட்ட இன்று முன்வருவீர்களா? எந்த மாதர் சங்கம் முன்வரும்? மேலும் விதவைகளுக்குக்கடுகளவு நன்மை வழங்கவும் ஆச்சாரியாருக்கு விருப்பமில்லை. சமூகத்தையும், தர்மத்தையும் காப்பாற்ற எழுந்தருளியிருக்கும் சத்தியவான்! ஆச்சாரியாரை ஒன்று கேட்க விரும்புகிறேன் ஐயா ஆச்சாரியாரே! முக்காடிட்ட உங்கள் பெண்கள் கள்ளத்தனமாய் வேறு சாதியிற்கூடி பிள்ளைபெற்று கழுத்தைத்திருகி பெட்டியில் வைத்து குப்பைத்தொட்டியில் வீசி வருவதால் உங்கள் இந்து சமூகத்தின் வேர் வெட்டி வீழ்த்தப்படாமல் தழைத்தோங்கி வருகிறதோ? இதனால்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

டாக்டர். அம்பெத்கார் சொற்பொழிவு.

இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார் அனைவரும் எனது குடும்பத்தினராவர்.

ஃ ஃ ஃ

எந்த அரசியல் உரிமைகளுக்காக நாம் போராடுகிறோமோ அந்த அரசியல் ஞானமே நம்மக்களிடம் உண்டாகவில்லை. அதை உண்டாக்கவேண்டியது பிரதிநிதிகளது கடமையும், பொறுப்புமாகும்.

இம்மாதம் 4ந் தேதி சென்னை தாழ்ந்த வகுப்பார் கல்விச்சங்க ஆதரவில் இந்திய வாக்குரிமைக் கமிட்டி அங்கத்தினரும் வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதியுமான டாக்டர் அம்பெத்கார் அவர்களுக்கு ஒரு விருந்தளிக்கப்பட்டது. அவரது சமூக ஊழியத்தையும் வட்டமேஜை மகாநாட்டில் செய்த சேவையையும் பாராட்டியதற்கு வந்தனமளிக்குமுகத்தான் டாக்டர் அம்பெத்கார் பேசியதின் சாரமாவது:—

இரண்டு முக்கிய சம்பவங்களுக்காக நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். முதலாவது பிரபலஸ்தர்களாக எனது சகோதரர்களோடு நெருங்கிப் பழக சந்தர்ப்பம் ஏற்பட்டதொன்று, இக்கரையை விட்டு நாளை புறப்படப்போகும் நான் ஏதாவது சில முக்கியமான விஷயங்களைச் சொல்லிப் போகலாமென்பது மற்றொன்று. கனவான்களே! இந்தியாவிலுள்ள தாழ்ந்த வகுப்பார்களெல்லாம் எனது குடும்பத்தினரே. கடந்த 6 வருஷங்களாக எனது மனைவி மக்களையோ, உறவினர்களையோ முற்றிலும் மறந்து விட்டேனென்பதை நீங்களறியவேண்டும். ஒரு தினத்தில் ஒரு மணி நேரமாவது நான் அவர்களோடு சவகாசமாய் இருந்தது கிடையாது. இதிலிருந்து எனது குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஒருவாறு நீங்கள் யூகிக்கலாம். இது முற்றிலும் உண்மையென்பதையும், குடும்ப பராமரிப்பை உத்தேசித்து கட்டாயம் நடத்தவேண்டிய தொழிலேயல்லாது, நான் ஆற்றவேண்டிய கடமைகள் பல உளதென்பதையும் நீங்கள் அறியவேண்டும். நாம் இன்று கோரும் அரசியல் உரிமைக்கு பல பக்கங்களிலிருந்தும் பெரிய எதிர்ப்புகள் இருந்தபோதிலும், இனி வரப்போகும் சீர்திருத்த உலகில் நமக்குத் தகுதியான செல்வாக்கில்லாமல் போகாது என்பதுவே எனது திடமான நம்பிக்கை.

பிரதிநிதிகள் கடமை.

சட்ட சபைகளில் ஸ்தானம் வகிக்கும் தாழ்ந்த வகுப்புப் பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பை உணர வேண்டும். அவர்களது மனச்சாட்சிக்கு விரோதமில்லாது, அவர்களது முழு பலத்தையும் உபயோகித்து ஒருமுகமாக நின்று வேலை செய்யவேண்டும். இந்த விதமாக கட்டுபாடாகவும், ஒழுங்காகவும் அவர்கள் நடந்து கொள்வார்களேயானால் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் அவர்கள் கோரிய பலனை அடைவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. நமது பாமர மக்களில் பெரும்பாலோர் கல்வியறிவில்லாதவர்களாய் இருப்பதால் நமது பிரதிநிதிகளின் பொறுப்பு இன்னும் அதிகமானதென்பதை அவர்கள் உணரவேண்டும். இங்கிலாந்து தேசத்தில் பார்லிமெண்ட் சபையின் அங்கத்தினர் ஒருவர் தன் கடமையைச் சரிவர செய்யவில்லையானால், தன் தொகுதி ஓட்டர்களின் நன்மதிப்பையோ அல்லது நல்லெண்ணத்தையோ பெற முடியாது போனால், அந்தத் தொகுதிஜனங்களும் ஓட்டர்களும் ஒரு கூட்டம்கூட்டி, ஷை அங்கத்தினரிடம் சமாதானம் கேட்பார்கள். 12 மாத காலத்தில் அந்த அங்கத்தினர் சபையில் செய்த ஊழியங்களைப் பற்றி கேட்பார்கள். அத்தகைய ஓர் மனோபாவம் நம்மிடை இன்னும் உண்டாகவில்லை.

கல்வியவசியம்.

எந்த அரசியல் உரிமைக்காக நாம் போராடுகிறோமோ அந்த அரசியலைப் பற்றிய ஞானமே நம் மக்களிடை இன்னும் உதிக்கவில்லை. ஆகையால் அத்தகைய அரசியல் அறிவை உண்டாக்கவேண்டியது பிரதிநிதிகளாகிய நமது பொறுப்பும், கடமையுமாகும். எத்தகைய சக்தியும், செல்வாக்கும் நமக்கு இருந்தும், அதை உபயோகிக்க வகை தெரியாவிடில் அது பிரயோஜனமற்றதாகும். ஆகையால் தாழ்ந்த வகுப்புப் பிரதிநிதிகள் சட்டசபைக்குப் போவதிலும், எதிர்கட்சி ஆசனத்திலிருப்பதும் பிரயோஜனமற்றதாகும், நீங்கள் சட்டசபைக்குள் ஒரு முடிவான கொள்கையோடும், திட்டத்தோடும் போகவேண்டும். அந்தத் திட்டத்தை நீங்களே பிரஸ்தாபிக்கக்கூடிய ஆற்றலும், தைரியமும் வேண்டும். மற்றவர்களது புத்திமதியைக் கேட்டு அதன்படி நடப்பது என்பது எப்போதும் ஆகாத காரியமாகும். இனி வரும் நமது பிரதிநிதிகள் இரண்டு முக்கியமான விஷயங்களை மனதில் வைக்கவேண்டும். ஒன்று தாங்கள் உண்மையாய் தாழ்ந்த வகுப்பாரின் பிரதிநிதிகள்தான், அவர்களது நன்மையே மனதில் கொண்டிருக்கிறோம் என்பதும், அது சம்பந்தமான சட்டதிட்டங்கள் தெரிந்திருப்பதுமே யாகும்.

ஆனால் படித்துப் பட்டம்பெற்றால்தான் இவைகளை அறிய முடியுமென நீங்கள் எண்ணி மயங்கிவிடாதீர்கள். படித்துப் பட்டம் பெற்றவர்களைக் காட்டிலும், நிழலுக்கும் கலாசாலையில் ஒதுங்கியிராதவர்கள் அதிக சாமர்த்தியசாலிகளாயிருக்கிறார்களென்பதை நீங்கள் அறியவேண்டும். இதற்குக் காரணம் அவர்களது முயற்சியும் உழைப்புமே.

உங்களுக்குள் ஒற்றுமையை உண்டாக்குவதிலும், கல்வியைப் பரப்புவதிலும் எல்லோரும் அதிக கவனம் செலுத்தி வருவீர்கள் என்று நம்புகிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பாராகிய நாம் கல்வியறிவொன்றினாலேயே முன்னேற முடியுமென்பதுவே எனது உறுதியான நம்பிக்கை. கல்வி கற்பதனால் நீங்கள் ஜாதி ஹிந்துக்களாகிவிடலாமென்று நான் நினைத்துச் சொல்வதாக நீங்கள் கருதிவிடக்கூடாது. ஆனால் கல்வி உங்கள் நிலையை உணரவும், அதற்குரிய பரிகாரங்களை நீங்களே தேடிக்கொள்ளவும் போதிய உதவியளிக்கும். நமது பொதுமக்களில்பணக்காரர்களாய் உள்ளவர்கள் தங்கள் சமூகமுன்னேற்றத்திற்கான எல்லா உதவியையும் செய்யவேண்டும். முஸ்லீம்கள் கல்வி அபிவிருத்தி அடைந்திருப்பதின் காரணமென்ன. அவர்களில் செல்வந்தர்களாய் உள்ளவர்களது தயாள குணமும் உதவியுமே யாகும். ஆகையால்தான் பணம் படைத்த நமது சகோதரர்கள் தங்கள் சமூகத்திற்கு உதவிசெய்ய வேண்டிய கடமையைப்பற்றி வற்புறுத்துகிறேன்.

"ஜஸ்டிஸ்"

சமபந்திபோஜனம்.

மதுரை சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் 20—3—32 ஞாயற்றுக்கிழமை பகல் 1 மணிக்கு மதுரை முனிச்சாலை ரோடு லெக்ஷிமிபுரம் தபாலாபீஸ் கீழ்புற சந்திலிருக்கும் **டாக்டர் எஸ். ஜி. தஸ்தகீர்** அவர்களின் பங்களாவில் ஜாதி வித்தியாசங்களைப் போக்குவதின் நிமித்தம் **சைவ சமபந்தி போஜனம்** ஒன்று நடைபெறும்.

நான்கு அணுசெலுத்தி எல்லா தோழர்களும் ஜாதி, மத, கட்சி வித்தியாசமின்றி இதில்கலந்து கொள்ளும்படி இச்சங்கத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

18-3-32உ மாலை 5 மணிவரை சங்கக்காரியதரிசிகளிடம் டிக்கட்பெற்றுக்கொள்ளலாம். என ஷை சங்ககாரியதரிசி எழுதுகிறார்.

அனுதாபத்திற்குவந்தனம்

என் தமையனார் திரு. டி. ஆர். ராஜாத்தினம்பிள்ளை பி. ஏ., எல். டி. (பள்ளிக்கூடங்களின் டிப்டி இன்ஸ்பெக்டர்) உயிர் நீத்தமைக்காக அநேக உபாத்திமைச்சங்கங்களும், பலநண்பர்களும தங்கள் அன்பார்ந்த அனுதாபத்தை அனுப்பியுள்ளார்கள். அவர்கள் எல்லோருக்கும் எங்கள் குடும்பத்தார் சார்பாகவும், என் சார்பாகவும் என் மனமார்ந்த வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை தயை செய்து ஏற்றுக்கொள்ளுமாறு எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேனெனவக்கீல் திரு. டி. ஆர். சுந்தரம் பி. ஏ., பி. எல்., எழுதுகிறார்.

அழகர்சாமி.

தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் உடம்பு அசௌக்கியம் காரணமாக ஈரோட்டில் வைத்தியசிகிச்சை பெற்றுவருகிறார். ஏற்கனவே அழைக்கப்பட்டிருந்த பலவிடங்களுக்கும் இது சமயம் வரமுடியாதிருக்கிறது. இன்னும்சில தினங்களில் உடம்புமுற்றிலும்குணமான உடன் வாக்களித்த இடங்களுக்குவர இயலும்.

ஏஜண்டுகள் தேவை

நமது பத்திரிகைக்குக் கீழ்கண்ட நகரங்களில் டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்கள் எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

சேலம்.
திருப்பூர்.
பொள்ளாச்சி.
உடுமலைப்பேட்டை.
தஞ்சாவூர்.
கள்ளிக்கோட்டை.
திருவனந்தபுரம்.
ஜோலார்ப்பேட்டை.
நன்னிலம்.
பரமக்குடி.
கரூர்.
திருமங்கலம்.

பிரிண்டர் அண்டு பப்ளிஷர்
"குடி அரசு" ஈரோடு.

குடி அரசு.

ஈரோடு 1932 மார்ச்சு௴ 13-௳

தேசியப்பைத்தியம்

—:0:—

தேசீயம் என்பது ஒரு பித்தலாட்டம் என்பதையும், அது சுயநலவாதிகளின் வயிற்றுப்பிழைப்புக்குத் துணைபுரியும் வார்த்தை என்பதையும், நமது இயக்கம் தோன்றிய நாள் முதல் நாம் எடுத்துக்காட்டி வந்திருக்கின்றோம். தேசியவாதியாக இருக்கின்ற ஒருவன் எச்சமயத்திலும் யோக்கியப் பொருப்புடன் நடந்துகொள்ள முடியாது. சமயத்திற்குத்தகுந்த வேஷங்களைப்போட்டுக்கொண்டு பாமர மக்களை ஏமாற்றக் கற்றுக்கொள்ளவேண்டும். பாமர மக்களைப் பலவகையிலும் ஏமாற்றி அவர்களைத் தன்னைப்பின்பற்றுமாறு செய்துகொள்ள முடியாத எவனும் தேசியத்தலைவனாக இருக்க முடியாது. பாமர மக்களை ஏமாற்றுவதற்கு எவ்வளவு பித்தலாட்டங்களும், அயோக்கியத்தனங்களும் செய்தாகவேண்டுமோ அவ்வளவும் செய்துதான் ஆகவேண்டும். அன்றியும் ஒரு நிலையான கொள்கையும், நேர்மையான நடத்தையும் இல்லாதவனே தேசியவாதியாக இருக்கமுடியும். அல்லாமலும் பாமர மக்கள் எவ்வளவு பிற்போக்கான கொள்கையும், பழக்க வழக்கமும் உடையவர்களா யிருக்கிறார்களோ அவ்வளவு பிற்போக்கான கொள்கையையும் பழக்க வழக்கங்களையும் பாராட்டுகின்றவனே தேசியத்தலைவனாகப் புகழ்பெற்று விளங்க முடியும். காலத்திற்குத் தகுந்த மாதிரியில் நாட்டிற்கு நன்மைதரும் கொள்கைகளையாருடைய நன்மதிப்பையும் இகழ்ச்சியையும் பாராட்டாமல் எடுத்துக்கூறும் ஒருவன் தேசியவாதியாக விளங்க முடியாது. அவன் தேசத்துரோகியாகவும், புரட்சிக்காரனாகவும், நாஸ்திகன் என்று வைதீகர்களால் பழிசுமத்தப்படுபவனாகவுந்தான் விளங்கமுடியும். ஆகையால்தான் நமது தேசத்திலும் மற்றும்நமது நாட்டைப்போல மூட நம்பிக்கையையுடைய மக்கள் வாழ்கின்ற தேசங்களிலுமுள்ள ஒருவன் தேசியத்தின் பெயரால் புகழ் பெறுவதும், பாமர மக்களின் நன்மதிப்பைப்பெறுவதும் தன் காரியங்களைச்சாதித்துக்கொள்வதும் சுலபமாக இருந்து வருகின்றது.

அல்லாமலும் முற்காலத்தில் வைதீகர்கள், பக்தர்கள், மதாச்சாரியார்கள் புரோகிதர்கள் என்பவர்கள் எவ்வாறு ஜன சமூகத்தை ஏமாற்றுகின்றவர்களாகவும், ஜன சமூகத்தின் நன் மதிப்பிற்கு பாத்திரப்பட்டவர்களாகவும், ஜன சமூகத்திற்குப்பல ஆசை வார்த்தைகளைக் காட்டுவதன் மூலம் அவர்களிடம் பொருள் பெற்றுப் பிழைக்கின்றவர்களாகவும் இருந்து வந்தார்களோ அவ்வாறேதான் இக்காலத்தில் தேசிய வாதிகளும் இருந்துவருகின்றார்கள். வைதீகர்களும், பக்தர்களும், மதாச்சாரியார்களும், புரோகிதர்களும் பாமரமக்களுக்கு 'இறந்த பின் சுவர்க்கத்தையடையலாம் என்றும், அங்கே இவ்வுலகத்தைக்காட்டிலும் அதிகமான சுகத்தையடையலாமென்றும், அச்சுகத்தை நீண்டநாள் அனுபவிக்கலாமென்றும் அதுஅழியாத சுகமென்றும், ஆகையால் அதைப்பெற முயல்வதே அறிவாகுமென்றும், அற்பமான இவ்வுலக சுகத்தை இச்சிப்பதனால் அவ்வுலக சுகத்தைப் பெறமுடியாதென்றும், கூறி அவர்கள் அறிவைக்கெடுத்து வந்தனர். அந்தச்சுவர்க்க வாசலின் சாவி தங்களிடத்தில்தான் இருக்கின்றதென்றும் கூறி, அவர்களின்உழைப்பையும், செல்வத்தையும், அறிவையும் கொள்ளை கொண்டு வந்தனர். அவர்களைப்போலவே இன்றுதேசியவாதிகள் என்பவர்களும் 'நாங்கள் ராமராஜியத்தைக்கொண்டு வருகிறோம். அந்த ராஜியத்தில் எல்லோரும் கஷ்டமில்லாமல், தரித்திரமில்லாமல்வாழலாம். ஒருவரும் கஷ்டப்பட்டு வேலை செய்யவேண்டியதில்லை. அரசாங்கத்திற்கு வரிகொடுக்கவேண்டியதில்லை. எல்லோரும் தங்கள் இஷ்டப்படி வாழ்ந்துகொண்டிருக்கலாம்' என்று சொல்லிக்கொண்டு வருகின்றனர். அந்தச்சுவர்க்கலோகத்தரகர்கள் தங்கள் மதச்சின்னங்களாக 'விபூதி, பட்டைநாமம், துளசிமணி, உருத்திராட்சம் முதலியவைகளைத்தரித்துக்கொண்டு 'அரகரா சிவசிவா ராமா கோவிந்தா' என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தது போலவே இந்தத் தேசியவாதிகளும் இன்று ராமராஜ்யச்சின்னமாக கதர்த்துணி, தேசியக்கொடி முதலியவைகளைத்தரித்துக்கொண்டு 'பாரதமாதாவுக்கு ஜே! மகாத்மா காந்திக்கு ஜே!' என்று சத்தமிட்டுப் பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். அவர்கள் பாமர மக்களின் கவனத்தை இழுக்கும்பொருட்டு அளவற்றபண்டிகைகளையும், சடங்குகளையும், விழாக்களையும் உண்டாக்கி அவைகளை அவர்கள் கொண்டாடும்படி செய்து அவைகளின் மூலம் அவர்களுடைய உழைப்பையும், அறிவையும், செல்வத்தையும் எவ்வாறு கெடுத்துவந்தார்களோ அதைப்போலவே இன்று இந்தத்தேசியவாதிகளும் ஜெயந்திகளையும், பிரார்த்தனைகளையும், கொடியேற்று விழாக்களையும் ஏற்படுத்தி அவைகளின் மூலம் பாமரமக்களின் கவனத்தை இழுத்து, அவர்களுடைய செல்வத்தையும், உழைப்பையும், அறிவையும் கெடுத்து வருகின்றனர். அந்தக்காலத்தில் நமது மக்கள் எவ்வாறு சுவர்க்கத்தைநம்பி வைதீகர்களும், பக்தர்களும், மதாச்சாரியர்களும், புரோகிதர்களும் இழுத்த இழுப்புக்கெல்லாம் போய்க்கொண்டிருந்தார்களோ அதைப்போலவேதான் இன்றும் இருக்கின்றனர். தேசியவாதிகள் வாங்கித்தருவதாகக்கூறும் 'ராமராஜியத்தை நம்பி இவர்கள் இழுக்கும் இழுப்புக்கெல்லாம் பின்செல்லுகின்றவர்களா யிருக்கின்றனர். பாமர மக்களின் இத்தகைய அறியாமையைக்கண்டேஇன்று நமது நாட்டில் வேறுபிழைப்பிற்கு வழியில்லாமலிருக்கின்றவர்களும், கௌரவமான வழியில் ஜீவனம் பண்ண வகையற்றவர்களும், யோக்கியமான முறையில். பட்டம் பதவி பெறத் திறமையற்றவர்களும் தேசிய வேஷம் பூண்டு, தேசிய வாதிகளாக நடனம் பண்ண ஆரம்பித்து விடுகின்றனர்.

இந்த உண்மையை அறியவேண்டுமானால் இன்று நமது நாட்டில் தேசிய வேஷம் போட்டுத் திரியும் கூட்டத்தினரைக் கொஞ்சம் கவனித்துப் பார்த்தால் கொஞ்சம் பகுத்தறிவுடைய எவரும் நன்றாகத் தெரிந்து கொள்ளலாம். தேசியத் தொண்டர்கள் என்பவர்களில் அனேகர் வேறு பிழைப்பிற்கு வழியில்லாத காரணத்தால் தேசீயக் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு "காங்கிரஸ்", "காந்தி" "கதர்" "சுயராஜ்யம்" என்று கூச்சலிட்டுத் திரிகின்றனர் என்பதை யாரும் மறுக்க முடியாது. இவர்களில் அனேகருக்கு, காங்கிரஸ் என்றால் இன்னது, காந்தியென்றால் இப்படிப் பட்டவர், கதர் என்றால் அதன் தத்துவம் என்ன? சுயராஜியம் என்றால்அது எப்படி யிருக்கும்? என்றுகூடத் தெரியாதவர்கள் என்பது பலருக்குத் தெரிந்த விஷயமாகும். இவர்களை நடத்துகின்ற தலைவர்கள் என்பவர்கள், எதைச் சொல்லும்படி கட்டளையிடுகிறார்களோ, எதைச் செய்யும்படி உத்தரவிடுகிறார்களோ, அவற்றையே அவற்றின் பொருளையுணராமலே செய்கின்ற புத்திசாலித் தனமுடையவர்கள் என்பதும் அனேகருக்குத் தெரியாத விஷயம் அல்ல. நமது நாட்டுத் தேசிய ஸ்தாபனம்என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற காங்கிரஸ் கைக்கூலி கொடுப்பதையோ, சோறு போடுவதையோ நிறுத்தி விடுமானால் காங்கிரசின் கட்டளைப்படி சட்ட மறுப்புச் செய்யத் தொண்டர்கள் என்று சொல்லிக் கொண்டு தேசீயத்தின் பெயரால் பெருவாரியாக முன் வர மாட்டார்கள் என்பது சிறிதும் சந்தேகமற்ற உண்மையாகும். இதற்கு உதாரணமாக சென்ற ஒத்துழையாமை இயக்கம் தோன்றிய காலத்திலும், உப்புச் சட்ட மறுப்பு இயக்கம் தோன்றிய காலத்திலும் காங்கிரஸ் பேரால் "தேசீய சேவை" என்று சொல்லிக் கொண்டு எத்தனை ஆயிரக்கணக்கான தொண்டர்கள் முன் வந்தார்கள் என்பதையும், தற்போது ஆரம்பித்து நடத்தப்பட்டு வரும் சட்டமறுப்புப் போரில் எவ்வளவு பேர் தேசியத்தின் பெயரால் தொண்டர்களாக முன் வந்து சட்டமறுப்புச் செய்திருக்கிறார்கள் என்பதையும் பார்த்தால் விளங்கும். சென்ற ஒத்துழையாமையின் போதும், உப்புச் சட்ட மறுப்பின் போதும் அரசாங்கத்தார் கடினமான அடக்கு முறையைக் கைக் கொள்ளாத காரணத்தாலும், காங்கிரஸ் ஸ்தா

பனத்தைச் சட்ட விரோதமானதெனக் கூறி அதன் பணத்தில் கை வைக்காத காரணத்தினாலும் காங்கிரஸ் ஸ்தாபனம் தொண்டர்களுக்குக் கைக்கூலி கொடுக்கவும், சோறு போடவும் தயாராயிருந்தது. இக்காரணத்தாலேயே ஏராளமான வேலையற்றவர்கள் தேசீயத்தின் பேரால், சட்ட மறுப்புச் செய்ய முன்வந்தனர். ஆனால் இப்பொழுது காங்கிரசால் நடத்தப் படும் சட்ட மறுப்பிலோ முன் போல ஏராளமான தொண்டர்களைக் காணவில்லை. இதற்குக் காரணம் அரசாங்கத்தார் கடுமையான அடக்கு முறையைக் கையாண்டதும், காங்கிரஸ் ஸ்தாபனத்தைச் சட்ட விரோதமானதென விளம்பரப்படுத்தி அதன் பொக்கிஷத்தைக் கைப் பற்றிக் கொண்டதும், பாமர மக்களிடம் காங்கிரசின் பேரால் பணம் வசூல் செய்வதைத் தடுத்ததுமேயாகும். இவ்வாறு காங்கிரசின் பணமும் போய், பண வருவாய்க்கு இடமில்லாமலும் போனவுடன் அதன் தலைவர்களால் யாருக்கும் கைக்கூலி கொடுக்கவும், சோறு போட்டு வளர்க்கவும் முடியாமற் போய் விட்டது. ஆகவே தேசீயத்தின் பெயரால் முன் வந்து சட்ட மறுப்புச் செய்கின்ற தொண்டர்கள் கூட்டமும் குறைந்து விட்டது. இதனால் தேசீயம் என்று சொல்லப்படுவது பிழைப்பற்றவர்களுக்கு ஒரு கையாயுதமாக இருக்கின்றதுஎன்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாகத் தேசீய வாதிகளாக விளங்கும் தலைவர்களாகிய பணக்காரர்களைப் பற்றிக் கொஞ்சம் ஆராய்ந்து பாருங்கள்! பணக்காரர்களுக்கு எந்தக் காலத்திலாகிலும், தமது சுய நன்மையை விட்டுக் கொடுத்து ஏழை மக்களுக்குச் சம உரிமையும், சம சுகமும் அளிக்க வேண்டும் என்னும் எண்ணம் உண்டாக முடியுமா? அவர்களுடைய பணத்திமிரும், ஜாதி அகங்காரமும், மதக்கிறுக்கும் ஒழிந்தால் அல்லாமல் அவர்களிடம் சமதர்ம நோக்கமும், அதற்குத் தகுந்த தியாக புத்தியும் தோன்றப் போவதில்லையென்பது உறுதியாகும். இத்தகைய இயல்பையுடைய அவர்கள்தேசீய வேடம் தரித்து ஏழைகளுக்குப் பாடு படுவதாகப் பாசாங்கு பண்ணுவது எதற்காக என்று ஆலோசித்துப் பாருங்கள். பாமர மக்களிடம் செல்வாக்குப் பெற்று, அதன் மூலம், சட்ட சபைத்தேர்தல், ஸ்தல ஸ்தாபனத் தேர்தல், முதலியவைகளில் வெற்றிபெற்று அதிகாரம் வகிப்பதன் வாயிலாகப் பாமர மக்களின் உழைப்பையும், அதன் பயனையும் நிரந்தரமாகக் கொள்ளையடிக்கவா? அல்லவா? என்று தான் கேட்கிறோம். உண்மையாகவே "தேசீயம்" பேசும் பணக்காரத்தலைவர்கள் தியாகஞ்செய்யக் கூடியவர்களாயிருந்தால் இப்பொழுது அவர்கள் எங்கே? அரசாங்கத்தார் கடினமான அடக்குமுறையைக் கையாளாத காலங்களில் தொண்டைவறளத் தேசீயம் பேசியவர்களெல்லாம், கடுமையான அடக்கு முறைஆரம்பித்தவுடன் தப்பித்தோம் பிழைத்தோம்" என்று எங்கோ ஓடி ஒளிந்து போனார்கள்? இத்தகைய தேசீயவாதிகளில் அனேகர் கவர்னர்கள், மந்திரிகள், நிருவாக சபை அங்கத்தினர்கள் ஆகியவர்களுக்கு அளிக்கும் வரவேற்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும், கவர்னர் வீட்டுக்கல்யாணத்தில் மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கவும் பின் வாங்கவில்லையன்றோ? மற்றுஞ் சிலர் சட்டசபைகளில் உட்கார்ந்து கொண்டு, காங்கிரஸ், காந்தி, கதர், சுயராஜ்யம் முதலிய வார்த்தைகளைக் கலந்து பேசி விடுவதும், அரசாங்கத்தாரின்அடக்குமுறையைப்பற்றியும், தடியடி பிரம்படி முதலியவைகளைப்பற்றியும், பிரமாதமாகக் கேள்விகள் கேட்டு ஆர்ப்பாட்டம் பண்ணுவதும் எதற்காக? இவைகளெல்லாம் தங்களைத் தேசீயவாதிகள் என்று பாமர மக்கள் நினைத்துக்கொள்ளவும், அதன் மூலம் அடுத்த எலக்ஷனில் வெற்றி பெறவும் செய்யப்படும் தேசீய தந்திரமா? அல்லவா? என்று ஆலோசித்துப்பாருங்கள்!

இன்னும் ஸ்தலஸ்தாபனங்களில் ஒட்டிக்கொண்டிருக்கும் தேசீய வேஷக்காரர்களில் அநேகர், "சட்ட மறுப்புக்கு அநுதாபம் காட்டும் தீர்மானங்கள் எதுவும் ஸ்தலஸ்தாபனங்களில் நிறைவேற்றக்கூடாது" என்று அரசாங்கத்தாரின் கடுமையான உத்தரவு இருப்பதை அறிந்திருந்தும், பல ஸ்தல ஸ்தாபனங்களில் சட்டமறுப்புக்கு அநுதாபம் காட்டும் முறையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை யெல்லாம் அரசாங்கத்தார் ஒப்புகொள்ளாமல், நிராகரிக்கும்படி உத்திரவிட்டவைகளை அறிந்திருந்தும், "கூட்டத்தை ஒத்திவைக்கவேண்டும்" என்றும், யாராவது சிறைப்பட்டால் அதற்கு அநுதாபங் காட்டுவதாகவும் ஸ்தல ஸ்தாபனக் கூட்டங்களில் தீர்மானங்கள் கொண்டு வருகிறார்களே இது எதற்காக? இதுவும் மறுபடியும் எலக்ஷனில் வெற்றியடைவதற்குச் செய்யப்படும் பிரசாரமா? அல்லவா? என்று தான் கேட்கிறோம். ஆகவேதேசீயத் தலைவர்கள் என்பவர்களிலும் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பதே முக்காலே மூன்று வீசம் பேர் வழிகள் பட்டம் பதவிகளைப் பெறவே இவ்வேஷத்தைத் தரித்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தெளிவாக உணரலாம். அன்றியும், அறிவு, திறமை, தியாகம் முதலியவைகளுக்கு மதிப்பில்லாமல் பணத்தையும், ஜாதியையுமே முதன்மையாக மதித்து, தேசீய இயக்கங்களில் தலைமைப் பதவியும், பத்திரிகை விளம்பரமும் அளிக்கப் படுவதும், ஏழைத் தொண்டர்களைப் பற்றிக் கேள்வி முறையில்லாமல் மேற் கூறிய பணக்கார உயர்ந்த சாதித் தலைவர்களைப் பற்றியே சட்ட சபைகளில் கேள்விகள் கேட்டு விளம்பரப்படுத்துவதும் தேசீயத்தின் உண்மையை உணர்வதற்குத் தகுந்த உதாரணமாகும்.

அடுத்தபடியாகத் தேசீயத்தின் பெயரால் நடை பெறும் பத்திரிகைகளைப் பாருங்கள்! அவைகள் வெகு ஜாக்கிரதையாக, அரசாங்கத்தாரின் அடக்கு முறைச் சட்டங்களுக்கு அகப்பட்டுக் கொள்ளாமல் தலையங்கங்கள் எழுதினாலும், தேசீயத்தின் பெயரால் நடை பெறும் காரியங்களைப் பற்றி அவை வெகு அற்பமானவையாயிருந்தாலும் பிரமாதப் படுத்திப் பெரிய பெரிய எழுத்துக்களால் தலைப் பெயர் கொடுத்துப் பிரசுரிக்கின்றன. உண்மையிலேயே சட்ட மறுப்பு இயக்கத்தை ஆதரிக்காத பத்திரிகைகளும், சட்ட மறுப்பு இயக்கத்தை எதிர்க்கும் பத்திரிகைகளுங் கூட இவ்வாறு செய்கின்றனவே எதற்காக? தேசீயப் பத்திரிகை என்று பெயர் பெறுவதன் மூலமும், தேசீய விஷயங்களையே அதிகமாக வெளியிடுகின்றன என்று தேசீய மோகங்கொண்டிருக்கும் மக்களால் நம்பப்படுவதன் மூலமும் பத்திரிகைகள் அதிகமாக விற்பனையாகிப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற நோக்கத்தைத்தவிர வேறென்ன? ஆகவே தேசீயம் என்பது பத்திரிகைகளுக்கு பிழைப்பைக்கொடுக்கும் ஒரு கருவியாகி விட்டது என்று உணரலாம்.

இன்னும், இந்தத்தேசீயம் என்பதன் பெயரால், உயர்ந்த ஜாதிக்காரர்கள் என்பவர்கள், தங்கள் செல்வாக்கும், அதிகாரமும் எப்பொழுதும் குறையாமலிருக்கவேண்டும் என்ற எண்ணத்துடன், அரசியல் சீர்திருத்தத்தில், கொடுமைப்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டிருக்கும் வகுப்பினருக்குப் போதிய பாதுகாப்பு அளிப்பதை மறுத்து வருவதையும், இதைத் தேசீயத்தின் பேரால் உயர்ந்த வகுப்பினர் என்பவர்களாலேயே நடத்தப்படும் பத்திரிகைகளெல்லாம் ஆதரித்து வருவதும் தெரியாத விஷயமல்ல.

மற்றும், மதம், கடவுள், வேதம், புராணம், வருணாச்சிரம தர்மம் முதலியவைகளில் நம்பிக்கை கொண்ட திருவாளர்கள் காந்தி, மாளவியா போன்ற வைதீகர்கள் தேசீயத்தின் பெயரால்மீண்டும், மக்களுடைய மனத்தில், மதம்,கடவுள், வேதம், புராணம், வருணாச்சிரம தருமம் முதலியவைகளைப் பற்றிய மூடநம்பிக்கைகள் உண்டாகும்படி செய்து வருகின்றனர் என்பதையும், இவ்வாறு மக்களுடைய பகுத்தறிவை அடக்கி, அவர்களை என்றும் சுதந்தரமற்ற அடிமைகளாகவே வைத்திருக்கக் காரணமாக இருக்கும் வைதீகப் பிரசாரத்திற்கும் தேசீயமே கருவியாக இருந்து வருகின்றதென்பதையும் யார் மறுக்க முடியும்? மக்களை வைதீகத்தில் திருப்ப தேசீயம் உதவியாக இருக்கின்ற காரணத்தினாலேயே, வருணாச்சிரம தருமத்தில் முரட்டுப் பிடிவாதமுடைய "மடி சஞ்சி"களில் அனேகரும் தேசீய வேடந்தரித்து நடிக்கின்றார்கள் என்பதும் உண்மையான விஷயமாகும்.

ஆகவே நாம் இது வரையிலும் "தேசீயம்" என்பதைப் பற்றிச் சொல்லி வந்த விஷயங்களைக் கொண்டு அதன் பித்தலாட்டங்களை உணரலாம். இவ்வாறுநாட்டு மக்களின் கஷ்டங்களை நீக்குவதற்கு ஒரு வழியிலும் உதவிசெய்யாமல், அவர்களை ஏமாற்றி இன்னும் கஷ்ட நிலைமையிலேயே வைத்திருக்க உதவியாக இருக்கும் இவ்வார்த்தையைக் கொண்டு தான் இன்று பிழைப்பற்றவர்களும், பணந்திரட்டும் தந்திரசாலிகளும், பதவி வேட்டைக் காரர்களும் தங்கள் தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்ளுகின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆதலால் உண்மையானசமதர்ம நோக்க முடைய எந்த வாலிபர்களும், முதியவர்களும், தேசீயத்தின் பெயரால் நடை பெறும் கிளர்ச்சிகளையும், காரியங்களையும் கண்டு ஏமாறாமல் இருப்பதே நன்மையாகும்.

இது வரையிலும் இந்த "தேசீயம்" என்ற வார்த்தையின்

பேரால் நமது நாட்டில் நடந்த கிளர்ச்சிகளாலும், காரியங்களாலும் ஏழைமக்கள் என்ன நன்மையைப் பெற்றார்கள்? மேலும்மேலும்பல வகையில்ஏழை மக்களுக்குக் கஷ்டமும் நஷ்டமும், பொதுவாக தேசத்தின் செல்வத்துக்கும்,வியாபாரத்துக்கும், அநேக மக்களின் உயிருக்கும் துன்பமும் சேதமும் உண்டானதைத் தவிர வேறு கடுகளவு நன்மையாவது கிடைத்ததுண்டா? என்று யோசித்துப் பார்ப்பவர்களுக்குத் “தேசியத்தின்” பித்தலாட்டம் விளங்காமற் போகாது.

ஆதலால், நமது நாட்டு ஏழை மக்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் நன்மையுண்டாக வேண்டுமானால் - நமது நாட்டில் வேரூன்றியிருக்கும் சாதி, மத பேதங்கள் ஒழிந்து எல்லா மக்களும்சமசுதந்திரம் அடையக்கூடிய சந்தர்ப்பத்தை உண்டாக்கவேண்டுமானால் எப்படி “வைதீகம்” என்னும் பழய பாசி பிடித்த விஷ நீர்க் குளத்தை முழுதும் மண்ணைப் போட்டு மூடவேண்டுமோ, அதைப்போலவே இந்தத் “தேசீயம்” என்னும் பித்தலாட்டத்தையும் அடியோடு ஒழித்தாக வேண்டும். எப்படி வைதீகத்தில் நம்பிக்கையுடைய மக்கள் பகுத்தறிவும், நாகரிகமும் அடைய முடியாமல் புரோகிதர்கள் வலையில் அகப்பட்டுக் கிடந்து அழியவேண்டுமோ அதுபோலவே தேசியத்தில் மக்களுக்கு நம்பிக்கையும் பைத்தியமும் இருக்கின்றவரையிலும், சுகமும் சமத்துவமும் பெற முடியாமல் “தேசியத்தலைவர்கள்” என்பவர்களின் வலையிற் சிக்கிக் கஷ்டமும் நஷ்டமும் அடையவேண்டியதுதான். “தலைவலி போய்த் திருகுவலி வந்தது” என்பது போலவே மக்களுக்கு வைதீகத்தில் உள்ள மூடநம்பிக்கை கொஞ்சம் கொஞ்சம் குறைந்து சிறிது பகுத்தறிவு உதயமாகி வருகிற இக்காலத்தில் இந்தப் பாழும் “தேசியம்” என்பது தோன்றி அவர்களைப் பிணித்து மறுபடியும் மூடநம்பிக்கையில் அழுத்தி வருகிறது என்பதில் ஐயமில்லை.

ஆகையால் இச்சமயத்தில் ஜன சமூக ஊழியர்கள் அனைவரும், தேசீயம் என்பதன் பித்தலாட்டங்களை வெளியாக்கிப் பொது ஜனங்களை ஏமாறாமலிருக்கச்செய்யமுன்வரவேண்டுவதே உண்மையான ஜன சமூக ஊழியமாகும் என்பதை உணரவேண்டுகிறோம். வைதீகத்தைப்போலக் கொடியதான இந்த தேசீயத்தை ஒழிக்க எவருடைய புகழ்ச்சியையும், இகழ்ச்சியையும் எதிர்பாராமல் தைரியத்துடன் முன்வருவதே ஒவ்வொரு பகுத்தறிவுடைய வாலிபர்களின் கடமையாகும் என்று கடைசியாகத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

திரு.மாளவியாவின் புரோகிதம்.

பிரபல வருணாச்சிரம தருமவாதியாகிய பண்டித மதன் மோகன மாளவியா அவர்களைப் பற்றி, நாம் அதிகமாக யாருக்கும் எடுத்துக்கூறத் தேவையில்லை. அவர் இங்கிலாந்து சென்றபோது, கங்கை நீரும், களிமண்ணும் மடிசஞ்சிகளும் கூடவே கொண்டு சென்ற வைதீகர் என்பது தெரியும். “சூத்திரன்” என்பவன் ஒருவன் மோட்சமடையவேண்டுமானால் “அவன் இருபத்தோரு ஜென்மங்கள் நற்குலத்தில்பிறந்து, சற்கருமங்களைச்செய்து, பிராமண பக்தனாயிருந்து கடைசியில் பிராமணனாகப்பிறந்து தான் மோட்சம் பெறவேண்டும்” என்ற பிராமணீய மதக்கொள்கையில் உறுதியான நம்பிக்கையுடைய முதிர்ந்த வயிரம் வாய்ந்த வைதீகர் என்பது அவருடைய போக்கை உணர்ந்தவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

இத்தகைய வைதீக மாளவியா அவர்கள் அரசியல் சீர்திருத்தத்தில் தீண்டாதவர்களுக்குத் தனித்தொகுதி அளிப்பதை அடியோடு மறுக்கின்றார் என்ற விஷயமும் தெரியாததல்ல. இப்படிப்பட்ட இவர் சென்ற சிவராத்திரி வாரத்தின்போது, காசியில் கங்கைக்கரையில் நடந்த “தசாஸ்வமேதக்கூட்டத்தில்” இந்துமதத்தைச்சேர்ந்த சகலவகுப்பினருக்கும் ஜாதி பேதமின்றி “மந்திர தீக்ஷை” கொடுத்தாராம்! அப்போது 150 பேர்களுக்குமேல் 500 பேர்களுக்குள் அடங்கிய தீண்டாதார்களுக்குச் “சமயதீக்ஷை” கொடுத்தாராம்!

இவ்விஷயங்கள் பத்திரிகைகளில் எல்லாம் வெளியாகி யிருக்கின்றன. என்றுமில்லாமல் இப்பொழுது திடீரெனத் தீண்டாத வகுப்பினர்மேல் திரு. மாளவியா அவர்களுக்குக் கருணைபிறந்து “சமய தீக்ஷை” அளிக்கப் புறப்பட்டது எதற்காக? அவர்கள் இந்த உலகத்திலிருந்துகொண்டு “சமத்துவம் வேண்டும் சமத்துவம் வேண்டும்” என்று சொல்லிக்கொண்டு வருணாச்சிரம தருமத்தைக் கெடுக்க வழி தேடுகின்றனர். ஆகையால் அவர்களை ஒரேயடியாக மோட்சலோகத்திற்கு அனுப்பிவிடலாம் என்ற எண்ணத்தின் பேரிலா? அல்லது அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தீண்டாமையைப் போக்கிச் சமத்துவம் அளிக்கவா? என்று கேட்கின்றோம். அல்லது “தீண்டாதவர்கள் இந்துமதத்தைச் சேர்ந்தவர்கள். ஆகையால் அவர்களைத் தனியாகப் பிரிக்கக்கூடாது. அவர்களுக்கும், அரசியல் சீர்திருத்தத்தில் பொதுத்தொகுதிதான் அளிக்கப்படவேண்டும். இந்துக்கள் தீண்டாதார்களை வெறுத்து ஒதுக்கவில்லை. அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து சமத்துவம் கொடுத்து வருகின்றார்கள்” என்று இந்துமகா சபைக்காரர்களும், காங்கிரஸ் காரர்களும் கூறி வருவதற்கு அடையாளமாக இக்காரியத்தைச் செய்ய தொடங்கினாரா? என்று கேட்கின்றோம். இவ்வாறு “சமயதீக்ஷை” கொடுக்கப்பட்ட தீண்டாத வகுப்பினர்களை இன்று திரு மாளவியாவின் கூட்டத்தார் உடன் வைத்து உண்ணவும் பழகவும் தயாராயிருக்கிறார்களா? என்றும் கேட்கிறோம். ஒருநாளும் அவர்கள் இதற்குச் சம்மதிக்க மாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். ஆகவே தீண்டாதார்களை ஏமாற்றும் பொருட்டுச் சமயத்திற்குத் தகுந்தபடி செய்யப்படும் ஒருதந்திரந்தான் திரு.மாளவியா அவர்களால் செய்யப்பட்ட “சமயதீக்ஷை” என்பதைஉணரவேண்டும்.

இவ்வாறு திரு. மாளவியா போன்றவர்கள், தீண்டாதார்களை ஏமாற்றுவதற்குச் செய்யும் புரோகிதங்களைக் கண்டு ஏமாறாமலிருக்குமாறு தாழ்த்தப்பட்ட சகோதரர்களுக்கு எச்சரிக்கை செய்கின்றோம். இந்துமத நம்பிக்கையும், இந்துமத வேதங்களில் நம்பிக்கையும் உள்ள எந்த இந்துக்களும், “பிறப்பினால் எல்லோரும் சமம்” என்பதை ஒத்துக்கொண்டு எல்லா வகுப்பினர்களுக்கும் சமத்துவம் கொடுக்கச் சம்மதிக்க மாட்டார்கள் என்பதை அறியவேண்டுகிறோம். வீணாக யாரும், “சமயதீக்ஷை” “மந்திர தீக்ஷை” என்ற பெயர்களைக் கேட்டு, வருணாச்சிரம தருமவாதிகளின் வலைக்குள் சிக்கிவிட வேண்டாமென மீண்டும்எச்சரிக்கைசெய்கின்றோம்.

சர். ரெட்டி நாயுடு அவர்கள்.

இந்திய சர்க்காரின் ஏஜண்டாகத் தென்னாப்பிரிக்காவில் உத்தியோகம் வகித்திருந்த சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் தமது உத்தியோகத்தினின்றும் நீங்கி இந்தியாவுக்கு வந்து விட்டார். சர். ரெட்டி நாயுடு அவர்கள் தென்னாப்பிரிக்காவில் உள்ள இந்தியாவின் நன்மைக்காக உண்மையாகவும், அஞ்சாமலும் உழைத்தார் என்பதை யாரும் மறுக்க முடியாது. சர். ரெட்டி நாயுடு அவர்கள் சமூதாய ஊழியத்தில் அளவு கடந்த பற்றும், உண்மையாகத் தனது கொள்கைகளைக் கைப்பற்றி நடக்கும் தன்மையும் உள்ளவர் என்பதை அவரை நேரில் அறிந்த நமது மாகாண வாசிகள் அனைவரும் அறிவர். இவருக்கு முன் தென்னாப்பிரிக்காவில் ஏஜண்டாயிருந்த மகா கனம் சீனிவாசசாஸ்திரிகளைக் காட்டிலும் ஊக்கமாகவும், உண்மையாகவும் இந்தியர்களுக்காக உழைத்தவராவார். ஆனால் மகா கனம் சீனிவாசசாஸ்திரிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்த காலத்தில், அவர் எங்கேயாவது மூச்சு விட்டாலும், தும்மினாலும், இருமினாலும் அவற்றையெல்லாம் நமது நாட்டுப் பத்திரிகைகள் பிரமாதமாக வெளியிட்டு விளம்பரம் பண்ணி வந்தன. அதற்குக் காரணம் அவர் பார்ப்பனராயிருந்ததும், நமது நாட்டுப் பத்திரிகைகளும் பார்ப்பனர்களுடையதா யிருப்பதுமேயாகும். ஆனால் “சர். ரெட்டி நாயுடு அவர்களோ பார்ப்பனரல்லாதார்; அதிலும், வருணாச்சிரம தருமப் புரட்டுகளில் நம்பிக்கையற்ற ஓர் சீர்திருத்த வாதி” ஆகையால் இவருடைய உண்மையான ஊழியத்தைப் பற்றிக்கூட எந்தப் பார்ப்பனப்பத்திரிகைகளும் எடுத்துக் காட்டாதிருந்தன. இது நமது நாட்டு வழக்கமாகவே இருந்து வருகின்றது. இதனாலேயேஒன்றுக்கும் உதவாப்பார்ப்பனர்களும் கூடப் பெரிய தலைவர்களாகவும், பிரபல தேசாபிமானிகளாகவும் ஆகி விடுகின்றார்கள். உண்மையாக நாட்டு மக்களுக்கு உழைக்கும் பார்ப்பனரல்லாதார்கள் எப்படிப் பட்டவர்களா யிருந்தாலும் குடத்துள் வைத்த விளக்கைப் போல் இருக்கின்றார்கள் என்பது நமது நாட்டுப் பார்ப்பனப் பத்திரிகைகளின் போக்கை யறிந்தவர்களுக்குத் தெரிந்த விஷயமாகும்.

இறுதியாக நாம், சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்களுடைய ஊழியத்தைப் பாராட்டுகிறோம். இனி அவர் நமது நாட்டில் உள்ள வருணாச்சிரம தருமச் சூழ்ச்சிகளையெல்லாம் ஒழித்து உண்மையான சமதர்மத்தைப் பரவச் செய்ய முன் வருவாரென நம்புகின்றோம்.

திரு. எம். சி. ராஜா ஒப்பந்தம்.

உண்மை என்ன?

வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப், பீகார், ஒரிசா முதலிய மாகாணங்களின் தாழ்ந்த வகுப்பாரின் பிரதிநிதிகள் பத்திரிகைகளுக்கு விடுக்கும் செய்தியாவது:—

அகில இந்தியா தாழ்த்தப்பட்டோர் சங்கக் காரியக்கமிட்டிக் கூட்டம் 21 தேதி புது டெல்லியில் கூடியதாகவும், அது சமயம் திரு. எம். சி. ராஜா தாழ்த்தப்பட்டோருக்குப் பொதுத் தொகுதியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசியதாயும், விஜயம் செய்தவர்களில் அநேகர் ஆதரவு காட்டியதாகவும் ஒரு செய்தி வெளியாயிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சங்கம் முழுப்பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லை என்பதைக் கூறவிரும்புகிறோம். இந்தச் சங்கத்துக்கு மத்திய மாகாணம், பம்பாய், சென்னையைத் தவிர வேறு எந்த மாகாணத்திலும் கிளை ஸ்தாபனங்கள் கிடையாது. இந்த மாகாணங்களில் கூட சங்க நிர்வாக உத்தியோகஸ்தர்களைத் தவிர வேறு அங்கத்தினர்கள் கிடையாது. எல்லா மாகாண பிரதிநிதிகளும் வரா திருந்த இந்தக்கூட்டம் எவ்வாறு பிரதிநிதித்வம் வாய்ந்தது என்பது எங்களுக்கு விளங்கவில்லை. வங்காளம், அஸ்ஸாம், பிரதிநிதிகள் விஜயம் செய்யவேயில்லை என்பது எங்களுக்குத் தெரியும். திரு. ராஜா அவர்கள் கடந்த நவம்பர் மாதம் வரை தனித்தொகுதியின் தீவிரவாதியிருந்தார். அதன்பின்னர் என்ன நேரிட்டது? ஏன் தன்னுடைய கொள்கையை திடீரென மாற்றிக்கொண்டார் என்பது எங்களுக்குத் தெரியவில்லை. பொதுத் தொகுதிக்கு அநேகர் ஆதரவு காட்டுவதாக திரு. ராஜா பிரஸ்தாபித்ததை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. ஐக்கிய மாகாணம், அஸ்ஸாம், வங்காளம், பீகார், பஞ்சாப் ஒரிஸா ஆகிய இந்த மாகாணங்களின் தாழ்த்தப்பட்ட வகுப்பாரின் பிரதிநிதிகளான நாங்கள் தனித்தொகுதியை ஆதரிப்பதோடு அதையே வற்புறுத்துகிறோம்.

M. B. மல்லிக் எம். எல். சி. தாழ்ந்த வகுப்பார் சங்கத்தலைவர், வங்காளம்.

நானக்சந்தூசா ஆதி ஹிந்து தாழ்ந்த வகுப்பார் சங்கம், ஐக்கிய மாகாணம்.

சோனதர்தாஸ்சேனாபதி தாழ்ந்த வகுப்பார் சங்கத்தலைவர், அஸ்ஸாம்.

ஹரிராம் ஆதிதர்ம தாழ்ந்த வகுப்பார் மண்டல் உதவி தலைவர், பஞ்சாப்.

சுல்டான்ரம் பீகார், ஒரிஸ்ஸா, தாழ்ந்த வகுப்பார் சங்கத்தலைவர்.

புது டெல்லி தாழ்த்தப்பட்டோர் சங்கக் காரியதரிசி திரு. எம். எஸ். சோட்டா ராம் எழுதுவதாவது:—

அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சங்க காரியக்கமிட்டி திரு. எம். சி. ராஜா தலைமையில் 21-ந் தேதிகூடிற்று. சில குட்டித்தலைவர்களே வந்திருந்தனர். அஸ்ஸாம் வங்காள மாகாண பிரதிநிதித்துவமேயில்லை. அதிக கொடுமை அநுபவித்து வருகிற பம்பாய், சென்னை மாகாணங்களிலிருந்து ஒரு பிரதிநிதியும் கிடையாது. திரு. ராஜாவும் அவரைப் பின்பற்றுகிற சிலருமே அகில இந்தியப் பிரதிநிதிகளாய்க் கருதி விட்டனர் போலும். வந்திருந்தவர்களில் அநேகர் கூட்டுத் தொகுதியையே ஆதரிப்பதாக ஒரு பத்திரிகைப் பிரதிநிதியிடம் திரு. ராஜா சொல்லியதாகத் தெரிகிறது. இது உண்மையும் சரியானதுமல்ல. கூட்டத்தில் அநேகர் அபிப்பிராய பேதமுள்ளவர்கள் இருந்தார்கள். திட்டமாக ஒன்றும் முடிவு செய்ய வியலாமையால், பூர்த்தியாக இதைப் பற்றி விவாதித்து முடிவு செய்ய நாகப்பூரில் ஒரு மகாநாடு கூட்டுவதாகத் தீர்மானிக்கப் பட்டது. ஸ்தானங்கள் ஒதுக்குவதாக சிறுபான்மையோர் உடன்படிக்கைக்கு ஆதரவு காட்ட முடியாதென்று இன்னொரு தீர்மானமும் நிறைவேற்றப் பட்டது. எவ்வகையிலாவது அது சம்பந்தமாய் பாரபட்சம் காட்டப்பட்டிருக்குமேயாமாயின் வட்டமேஜை மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு உண்மை நிலையை உணர்த்துவது மூலம் விளக்கப்பட வேண்டும். இந்த அற்ப காரணத்தைக் கொண்டு மிக முக்கியமான சிறுபான்மையோர் ஒப்பந்தத்தை உதாசீனம் செய்து விட முடியாது.

திரு. எம். சி. ராஜா டாக்டர் மூஞ்சேயிடமும் ஹிந்து மகாசபையிடமும் காட்டிக் கொடுத்து விட்டார். இந்திய தாழ்ந்த வகுப்பாரினின்று பிரதிநிதிகள் அகில இந்திய தாழ்ந்த வகுப்பார் காரியக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப் படாமையாலும், அநேக மாகாணங்களில் அதன் கிளை ஸ்தாபனங்கள் இல்லாமையாலும், திரு. ராஜா மூஞ்சேயிடம் செய்து கொண்ட ஒப்பந்தம் இந்திய தாழ்ந்த வகுப்பினரை எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது. மிகவும் அரிய இந்தச் சந்தர்ப்பத்தில் திரு ராஜாவின் கொள்கை மாற்றம் தாழ்ந்த வகுப்பாரின் முன்னேற்றத்தைப் பெரிதும் பாதிக்கக் கூடியதாகும்.

வெள்ளைக்காரனை விரட்டுமுன், கொள்ளைக்காரனை விரட்டு!

(திருமங்கலம் மணிமாறன்)

ஏன் இப்படி எல்லோரும் கட்டுப்பாடாகக் காங்கிரஸ், கதர், காந்தி, சுயராஜியம் விடுதலை என்று கூப்பாடுபோடுகிறார்கள்? ஏன் வைதீகர்களும், வருணாச்சிரமக்காரர்களும், ஜாதிப்பித்தர்களும், ஏமாற்றிப்பிழைப்பவர்களும், புராணிகர்களும் இதில் கலந்துகொண்டு தக்ளிராஜியமாம் தற்குறி ராஜியம் வேண்டும், ராம ராஜியம் வேண்டும் என்று ஏன் ஊளையிடுகின்றனர்? ஏன் ராமராஜியப்பித்துக்கொண்டு இவ்வைதீகர்கள் அடிப்பட்டவைபோல் வெள்ளையரைக்குறைக்கின்றார்கள்? என்று சற்றுயோசித்துப்பார்த்தால் கொஞ்சமேனும் அறிவுள்ளவருக்கும் காரணம் விளங்காமல் போகாது. 'இவ்வெள்ளைக்கார அரசாட்சியை ஒழித்துவிட்டு ராமராஜியம் ஏற்படுத்தவே பாடுபடுகிறோம்' என்று காங்கிரஸ் கம்பெனியாரின் முக்கிய நடிகரான கிராமபோன் பிளேட். மாஸ்டர் காந்தி அவர்கள் சொல்லுகிறார். இப்பச்சையான பொருப்பற்ற வார்த்தையைக் கேட்டுக்கொண்டு அறிவுள்ளவர் யார்தான் சும்மாவிருக்க வியலும்? ராமராஜியம் வேண்டுமாம்! அவ்வநீத ராஜியத்தை, ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கியராமராஜியத்தை, தமிழர்களை இருக்கதர் என ஏசி வாட்டிய ஆரியக்கொடுங்கோலாட்சியை, மறுபடியும் நிலை நாட்டுவதற்காக இந்த சுயராஜியப் போராட்டம் என்றால் இப்போராட்டத்தையும் இக்கூட்டத்தாரையும் தமிழர்கள், சுயமரியாதை உடையவர்கள், சமதர்மவாதிகள் என்னசெய்யவேண்டும்? வெள்ளைக்காரரை விரட்டிவிட்டு ஒரு கொள்ளைக்காரராஜியம் ஸ்தாபிக்கப்போவதாக இயம்பும் இக்காங்கிரஸ்காரர்களை என்செய்வது? ஏ! வைதீகர்களே! காங்கிரஸ் பேரால் தங்கள் கொள்கைக்குப் பாடுபடும் பார்ப்பனக்கூட்டமே! உங்களைச்சமதர்ம வாதிகள் விடார்! விடார்!! இன்னும் ராமராஜியக் கனாக்கண்டால் உங்கள் கடவுளையும், புராணத்தையும் சாதியையும் காப்பாற்ற நினைத்தால் தூக்கி எறியப்படுவீர்கள்? சமதர்மவேகத்தால் நீங்கள் சமுத்திரத்தில் வீசி எறியப்படுவீர்கள்.

ஆகவே இவ்வைதீகர்களும் பார்ப்பனக்கூட்டமும் சேர்ந்து கொண்டு காங்கிரஸ், காந்தி, விடுதலை என்று கூச்சலிட்டு வெள்ளைக்காரரைவிரட்டி ராமராஜியம் ஸ்தாபிப்பதற்காக முயற்சிக்கின்றன. ஏ! காங்கிரஸ் பக்தர்களே! ஜாதியை, பூணூலை, நெற்றிக்கோலத்தை விட்டு, சாஸ்திரத்தை, புராணத்தை, சமயத்தை, மதத்தை விட்டு யாவரும் ஒன்றே என்று சமதர்ம ராஜ்யத்திற்குப் பாடுபட்டால் உங்களோடு யாவரும் சேர்ந்து உழைக்கலாம்! வெற்றியையும் பெறலாம்! விடுதலை புங்காணலாம்! இல்லையேல் இன்னும் ராமராஜியப்பிரசாரம் செய்தால் அன்னிய ராஜியத்தை ஒழிக்குமுன்பு உங்கள் ராமராஜிய சங்கத்தை ஒழிக்கவேண்டியதே கடமை! அதுவே பொதுவுடமை! நீதியுடமை.

எனவே சுயமரியாதையுடையோரின் கடமை என்ன? சமதர்ம எண்ணமுடையோர் செய்யவேண்டியது யாது? இன்று இக்காங்கிரஸ் கூட்டத்தாருடன் நாமும் சேர்ந்து கூப்பாடு போட்டு ஒரு

வேளை சுயராஜ்யம் வாங்கினாலும் அது ராமராஜ்யமாய், சூத்திரர்களைக்கொல்லும் கொலைகார ராஜியமாய், தமிழரை அரக்கர் என்று அவதிப்படுத்தும் அநீத ராஜ்யமாய்த்தான் மாறும்! எனவே இவ்வைதிக வருணாச்சிரம சனாதன அதர்ம, பார்ப்பனீய ராமராஜ்யக்காரர்களை நாட்டைவிட்டு விறட்டி விட்டால் பின்பு நாம் இந்தியர் யாவரும் சரிநிகர் சமானமாய் ஒன்றுபட்டு ஒற்றுமையாய்க்கூடி வாழலாம். அன்று நமக்கு அரசியல் விடுதலையும் உண்டு! உண்டு!! உண்டு!!! அதுவும் சம ராஜ்யமாய் விளங்கும்! அதுவே நமது அவா!

எனவே முதலில் யாரை விறட்டுவது? வெள்ளைக்காரனை விறட்டு முன் நம் நாட்டுக் கொள்ளைக்காரரை விறட்டுவீர்!

ஒழிக ராமராஜ்யம்!

ஓங்குக சமராஜியம்!

[8-ம்பக்கத்தொடர்ச்சி]

இந்து சமூகத்தின் அடிப்படையான அஸ்திவார மரங்கள் கரையான் பிடித்து நாற்ற மெடுக்கவில்லையோ? இதற்கு யாது பதில் கூறுவீர்? சமூகமாம்! தர்மமாம்!

வெட்கம்! வெட்கம்!! மசோதாவை ஆதரித்த திரு. எ. தாஸ் அவர்கள் விவாதத்தில்எழுப்பப்பட்ட ஆட்சேபணைகள் அனைத்தும் "வெற்றுரை" என விளம்பியிருப்பதை அறிவுடையோர் எவரே மறுக்க முடியும்! சர்க்கார் மனப்போக்கைக் கண்டனம் செய்த சர். எச். எஸ். கோர் அவர்களின் ஆணித்தரமான அரிய மொழிகள் கூர்ந்து கவனிக்கத் தக்கதாகும். சமூக சீர்திருத்த விஷயத்தில் சர்க்கார் வைதீகர் மாட்டு காட்டி வரும் சலுகை கண்டிக்கத்தக்கதாகும். அதிலும் பெண்கள் விஷயத்தில் பெண்ணுக்குச்சகல சுதந்தரங்களும் வழங்கி வேற்றுமையைவெட்டி வீழ்த்திய சமூகத்தார் அரசாட்சி செலுத்தும் ஆட்சியில் பெண்கள் முன்னேற்ற, பெண்கள் விடுதலைக்கான மசோதாக்கள் சர்க்கார் ஆதரவின்றியே பாழ்படுவதென்பது விசனிக்கத்தக்கதும், வெறுக்கத்தக்கதும் அன்றோ? ஆங்கில அரசாங்கத்தின் மூலம் பெண்கள் சிறிதுமுன்னேற்றமடையலாமென்ற நம்பிக்கையை சாரதா சட்டத்தின் போது பலர் கொண்டிருந்தனர். ஆனால் அது முழுவதும் ஏமாற்றமேயடைய நேர்ந்தது. எவ்விதத்திலும் பெண் சமூகம் கடைத்தேற வழியில்லை யென்றே இதிலிருந்து யூகிக்க வேண்டியிருக்கிறது. அந்தோ பெண்ணுலகமே!

"என்று மடியும் வைதீக விருட்சம்
என்று அடைவோம் யாங்கள் விடு
தலை"

(7ம் பக்கத்தொடர்ச்சி)

வெறுத்துத்தள்ளுங்கள் இவர்களை ஒரு பொழுதும் சீர்படமாட்டார்கள்' எனக்கூறியுள்ளார்.. ஆகவே நீங்கள் நல்வழிக்கு வரப்போகிறீர்களா? அல்லது சுவாமி விவேகானந்தரின் மொழியை மெய்ப்பிக்கப்போகின்றீர்களா?

தேசத்தின் நன்மைக்காகவே உண்மையாகப்பாடுபடுகிறவர்கள் என்றால் உண்மை தேசிய வாதி யென்றால், விளம்பரக்காரர்கள் இல்லையென்றால், சீர்திருத்தத்திற்கு தகுதியுள்ளவர்கள் தான் என்றால் ஒன்று சொல்லவிரும்புகிறேன். சுயநலம்,ஒட்டுக்குஆசை, எய்த்துப்பிழைக்கும் பண்டையக் காலத்து வழக்கம், ஜாதி பேதங்களுக்கு ஆதாரமாகவுள்ள வருணாச்சிரமம் பகவத்கீதை இவைகளை ஆதரிக்கும் தன்மையாகிய இவைகளையெல்லாம் விட்டகற்றி அடியோடு மறந்து திரு. ராஜகோபாலாச்சாரியார் வெளியிட்ட தன்னுடைய புத்தகங்களில் ஒன்றில் முதல் பக்கத்தில் (Title Page) 'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்தியமக்கள்' என்றிருக்கிறபடி எல்லோரும் ஒரே 'இந்தியன்' தேசநலத்திற்கு,சீர்திருத்தத்திற்கு சுயநலமின்றி உண்மையாகப்பாடுபடுவோம் என்ற அவாவுக்காவது (திரு. ராஜகோபாலாச்சாரியார் உள்பட) வரட்டும். அல்லது இவர்கள் சமீபத்திலிருந்து ஆங்கிலேயர்களைவிட முன்னணியிலிருந்து, மத்திய ஆசியாவிலிருந்து வந்த அந்நியராகையால், காஞ்ச புல், கொட்டை, மணி பாக்கியுள்ள பூணூல் ஆகிய இவைகளையெல்லாம் ஒரு மூட்டையாகக்கட்டிக்கொண்டு சாமிகளையும், இவர்களுடன் சேர்ந்தவர்களையும் கூட்டிக்கொண்டு வந்த வழியாகவே பிரயாணம் செய்து விடட்டும், அப்பொழுதுதான் நாடு செழிக்கும். பாமர மக்கள் சம்பாதிப்பதில் ஒரு குறிப்பிட்ட பாகம் தங்கும்.

கடைசியாக, நாம் கோறுவது யாதெனின் மேற்குறிப்பிட்டவைகளில் ஏதாவது இரண்டில் ஒன்று செய்வார்களா? என்று மறுமுறையும் கேட்டுக்கொண்டு முடிக்கின்றேன்.

ஆதிதிராவிட மகாஜன சபை.

கவர்னரிடம் பேட்டி.

சென்னை ஆதிதிராவிட மகாஜன சபைப்பிரதிநிதிகளான திருவாளர்கள் ஜெ. சிவசுப்பிரமணிய பிள்ளை, பி. வி. சுப்பிரமணிய பிள்ளை, எம். வி. டி. வரதராஜா, எ. பி. பார்த்தசாரதி பிள்ளை, பண்டித பி. எம். பழனிசாமிப்பிள்ளை முதலியோர் ஒரு தூது கோஷ்டியாகச் சென்று சென்னை கவர்னரைப் பேட்டிகண்டார்கள்.

சர்க்கார் சர்வீஸில் ஆதிதிராவிடர்கள் சேர்வதற்குள்ள வயது எல்லையை 30 ஆக உயர்த்த வேண்டுமென்றும், ஆதிதிராவிட மாணவர்களுக்குத்தாராளமாக உதவிச் சம்பளம் அளிக்கவேண்டுமென்றும், தர்காஸ் நிலங்கள் பதிவு செய்து கொடுக்கும் விஷயத்தில் ஆதிதிராவிடர்கள் உரிமை முதலில் கவனிக்கப்பட வேண்டுமென்றும், சென்னை சட்டசபையில் 18 ஸ்தானங்கள் வழங்கவேண்டுமென்று மந்திரி சபைக்கூட்டத்தில் தீர்மானித்திருப்பதை தாம் ஆதரிக்கவில்லை யென்றும் ஜனத்தொகைக்குப் பொருத்தமாக வீதாசாரப்படி ஸ்தானங்கள் வழங்கவேண்டுமென்றும் இன்னும் 20 வருஷகாலம் சர்க்கார் ஆதிதிராவிடர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டிக்கொண்டிருக்க வேண்டுமென்றும்அவர்கள்கவர்னரிடம்முறையிட்டார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பிரிவுஉபசாரவிழா.

திருமங்கலம் தாலூகா புதுப்பட்டி கிராமம், போர்டு ஆண்பாடசாலை உதவி ஆசிரியர், திரு. துரைசாமி அவர்களை சின்ன மனூருக்கும், ஷையூரில் வேலைபார்த்து வந்த திரு. ராமசாமி அவர்களைப் புதுப்பட்டிக்கும் மாறுதல் செய்திருப்பதை முன்னிட்டு, 2-3-32உ புதன்கிழமை மாலை 5-மணிக்கு, ஆசிரியர் திரு. எஸ். சடையாண்டி அவர்கள் தலைமையின் கீழ், முன்ன வருக்குப்பிரிவு உபசாரப்பத்திரமும், பின்னவருக்கு வரவேற்புப்பததிரமும் முறையே, குண்ணத்தூர் ஆசிரியர்கள் திரு. பி. எஸ். கந்தசுவாமி, திரு. பி. குழந்தைவேலுப்பிள்ளை முதலியவர்களால் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின்னர், சோலைபட்டி, புதுப்பட்டிதலைமை ஆசிரியர்கள் திருவாளர்கள்:- டி. எ. பிச்சை பிள்ளை, என். எஸ். ராமசாமிஐயர் முதலியவர்களால் வந்தனோபசாரமும், தலைவர் முடிவுரையும் கூறப்பட்டது. கிராம அதிகாரிகள் உள்பட எராளமான பலமுக்கியஸ்தர்களும் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது. இறுதியில் டீபார்ட்டியுடனும், தாம்பூலசந்தனாதிகளுடன் கூட்டம் இனிதுகலைந்ததுஎன ஒருநிருபர்எழுதுகிறார்.

"சாமிகளின் அடிமைகள்"

மிஸ் மேயோஎழுதிய "சாமிகளின் அடிமைகள்" (Slaves of gods) என்னும் ஆங்கிலப் புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கொடிய அநாசார பழக்க வழக்கங்களின் உண்மைகண்டுணரலாம்

விலை அணா 0-12-0

கிடைக்குமிடம்

குடியரசு புஸ்தகசாலை
ஈரோடு.

பட்டுக்கோட்டைசீர்திருத்த திருமணம்.

1932 வருஷம் மார்ச்சுமாதம் 17உவியாழக்கிழமை காலை 9மணிக்கு நியூஸ் ஏஜண்டு என். மருதமுத்துக்கு தஞ்சாவூர் திருமதி மாரிமுத்துவைச்சீர்திருத்த முறையில் கும்பகோணம் சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் கே. கே நீலமேகம் அவர்கள்தலைமையில் முன்னோர்கள்ஏற்படுத்திய புரோகிதமெனும் மூடப்பழக்கத்தை அறவே ஒழித்து. சீர்திருத்தசிக்கனமுறையில் பட்டுக்கோட்டை காசாங்குளம் அரிசிக்காரத் தெருவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும். ஷைதிருமணத்தன்று நமதுஇயக்கத்தில் ஆர்வமுள்ள பல தோழர்கள் சுயமரியாதை இயக்கமும் சீர்திருத்தமணமும் என்பதைப்பற்றி பேசுவார்கள் எனஒரு நிருபர்எழுதுகிறார்.

கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷை சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 28-2-32 ந்தேதி சங்கத்தலைவர் திரு. கே. கே, நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் பலமுக்கியமான தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

உங்கள்

கண்ணையும்

காதையும்

கவனித்துக்கொள்ளுங்கள்

பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வை [illegible] ஆபரேஷன் இல்லாமல் [illegible] எவ்வளவு [illegible] நான்கு வாரங்களில் நிச்சயமாகக் குணப்படுத்தி விடுவோம்

செவிடு !!

[illegible] செவிடாகயிருந்தால் கூடப்பரவாயில்லை, காதிரைச்சல், [illegible] இருந்தாலும் அக்கறையில்லை. [illegible] நிவர்த்திக்கப்படும் [illegible] உத்திரவாதம்

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக்கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. P. O Calcutta.

ராமாயணமும் பாரதமும்
'நரியும் காக்கையும்'
போன்ற கட்டுக்கதைகளே,

ஏ. பி. சி. வைதீகம்.

[தேசீயத்துரோகி]

நாம் சொல்லுவதைத் தயவு செய்து கொஞ்சம் காதுகொடுத்துக் கேளுங்கள். பிறகு அதைப் பற்றிக் கொஞ்சம் யோசனையும் செய்து பாருங்கள். அதன்பின் வேண்டுமானால் நம்மைத் தூற்றுங்கள். தாராளமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். கூடுமானால் நாமும் பதில் சொல்லுகிறோம். "காங்கிரஸ் இயக்கம் முதலாளிகள் இயக்கம். அதில் உள்ளவர்கள் அனைவரும் முதலாளிகளின் ஆதிக்கத்தை எந்தக் காலத்திலும் விட்டுக் கொடுக்கச் சம்மதிக்கமாட்டார்கள்" என்று எந்தக் கோபுரத்தின் உச்சியில் நின்றுகொண்டும் சொல்லத்தயார். இதற்குக் காரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

இப்பொழுது சட்டமறுப்புச் செய்து ஜெயிலுக்குப் போயிருக்கின்றவர்களைப் பாருங்கள். அவர்கள் ஜெயிலுக்குப்போன விதத்தையும், ஆலோசனை பண்ணுங்கள். ஜெயிலில் போய் அடையும் கஷ்ட நஷ்டங்களையும் கொஞ்சம் ஆலோசனை செய்துபாருங்கள். நாம் கூறுவதன் உண்மை காந்த விளக்கைப்போலத் தெரியும்.

முதலில் தொண்டர் கூட்டத்தைப் பாருங்கள். இவர்களெல்லாம் மறியல்செய்து போலீஸ்காரரிடம் தடியடியும், பிரம்படியும் பட்டு ஜெயிலுக்குப் போகின்றார்கள். தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் அடி பட்டவர்களே. அடி படாதவர்கள் மிகச் கொஞ்சம்.

இரண்டாவது தலைவர்கள் கூட்டத்தைப்பாருங்கள், அவர்களை இரு பிரிவாகப் பிரித்துக் கொள்ளலாம் ஒரு பிரிவு பார்ப்பனரல்லாத தலைவர்கள். மற்றொரு பிரிவு பார்ப்பனத் தலைவர்கள். பார்ப்பனர்களிலும் தெலுங்கப் பார்ப்பனர்கள், தமிழ்ப் பார்ப்பனர்கள் என்று இரு வகையாகப் பிரித்து கொள்ளலாம். இவர்கள் ஜெயிலுக்குப் போன கதையைப் பாருங்கள். பிறகு இவர்களில் எந்தக் கூட்டத்தார் கெட்டிக்காரரென்று யோசியுங்கள்.

பார்ப்பனரல்லாத சோணகிரித் தலைவர்கள், போலீசாரிடம் அடிபட்டுத்தான் ஜெயில் செல்லுகிறார்கள். இதற்கு உதாரணம், திரு. பக்தவச்சலம், முத்துரங்க முதலியார் போன்றவர்கள் உதைபட்டுச் சிறை சென்றதே போதிய உதாரணமாகும். தெலுங்கப் பார்ப்பனர்களாகிய திரு. பிரகாசம், நாகேசுவரராவ் பந்துலு போன்றவர்களும் கொஞ்சம் கஷ்டப்பட்டே சிறை சென்றார்கள். ஆனால் இவர்களில், தமிழ்ப் பார்ப்பனர்கள்தான் மிகவும் தந்திரசாலிகள். திரு. சத்தியமூர்த்தி, ராஜகோபாலாச்சாரி முதலியவர்கள் எப்படிச் சிறை சென்றார்கள் என்று பார்த்தீர்களா? தடியடி படவில்லை-பிரம்படி படவில்லை: கால்நடையாக நடந்து சென்றுகூட காங்கிரசுக்கு ஒன்றும் செய்யாமல் சிறை சென்றார்கள். மோட்டார்கார்களில் உட்கார்ந்தபடியே நோட்டீஸ் வழங்கிவிட்டுச் சிறை சென்றார்கள். ஆகையால் இப்பொழுது, தொண்டர்கள் சமர்த்தர்களா? தலைவர்களில் பார்ப்பனரல்லாதார் சமர்த்தர்களா? தெலுங்கப் பார்ப்பனர்கள் சமர்த்தர்களா? தமிழ்ப் பார்ப்பனர்கள் சமர்த்தர்களா? என்றுதான் கேட்கிறோம்.

இனி இவர்கள் சிறையில் சென்று அனுபவிக்கும் கஷ்ட நஷ்டங்களைப் பாருங்கள்!

சிறையில் ராஜீயக் கைதிகளுக்கு மூன்றுவிதமான உபசாரம் நடக்கின்றது. அவை ஏ. வகுப்பு, பி. வகுப்பு சி. வகுப்பு என்பன. இந்த ஏ. பி. சி- வகுப்புப் பிரிவினை நமக்குப் பழய கால மனுநீதியைத்தான் ஞாபகப் படுத்துகிறது. மனுநீதியில்தான், ஒரு குற்றத்தை பார்ப்பான் செய்தால் அவனுக்குக் குறைந்த தண்டனையும், க்ஷத்திரியன் அதே குற்றத்தைச் செய்தால் இன்னும் அதிகமான தண்டனையும், வைசியன் அதே குற்றத்தைச் செய்தால் க்ஷத்திரியனுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமான தண்டனையும், சூத்திரன் அதே குற்றத்தைச் செய்தால் சகிக்கமுடியாத கொடுந் தண்டனையும் விதிக்கும்படி எழுதப்பட்டிருக்கின்றது. ஆகவே ஜாதிக்கொரு நீதி கூறும் மநுநூலை நாம் வெறுக்கிறோம்; கொளுத்த வேண்டுமென்று கூறுகிறோம்- ஆனால் மனுநீதியைப் போலவே இப்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கத்திலும் ராஜீயக் கைதிகளுக்கு ஏ. பி. சி. வகுப்பு அளிக்கப் படுகிறது: இதற்குக் காரணம் யார்? பணக்கார ஜாதியாராக இருக்கின்ற காங்கிரஸ்காரர்தானே? முன்னே, அதாவது இந்துமத அரசர்கள் காலத்தில், ஜாதியின் பேரால் தண்டனை கொடுக்கப்பட்டது. இப்பொழுது பணத்தின் பேரால் தண்டனை கொடுக்கப்படுகிறது. இவை இரண்டில் என்ன வித்தியாசம் இருக்கிறது? பெரிய பணக்காரனாகவும் தலைவன் என்று பெயர் படைத்தவனாகவும் இருக்கிறவன் ஏ, வகுப்புக் கைதியாவான். கொஞ்சம் குறைந்த பணக்காரனாகவும், சின்னத் தலைவனாகவும் இருக்கின்றவன் பி. வகுப்புக் கைதியாவான், சாதாரண மாணவர்களும், அன்னக்காவடிகளும் சி. வகுப்புக் கைதிகள்.

இக்கைதிகளுக்குள் ஏ. வகுப்புக் கைதிகளுக்கு யாதொரு கஷ்டமும் இல்லை. மாமியார் வீடாகவே ஜெயிலை நினைத்துக்கொள்ளலாம். மாமியார் வீட்டைக்காட்டிலும் அதிக சௌகரியமும், உபசாரமும், ஏ. வகுப்புக் கைதிகளுக்கு உண்டு. பி. வகுப்புக் கைதிகளுக்கும் அவ்வளவு கஷ்டமில்லை. அவர்களும், அனேகமாக மாமியாள் வீடாக இல்லாவிட்டாலும் தங்கள் சொந்தவீட்டில் இருப்பதுபோலவாவது இருக்கலாம், ஆனால் நமது தோழர்களாகிய தொண்டர்களும், மற்றவர்களும் பெறும் சி வகுப்புக்கும், மற்ற திருட்டு கொலைமுதலிய குற்றங்கள் செய்த கைதிகள் நிலைக்கும்வேறுபாடில்லை என்றே சொல்லலாம்.

பொதுவாகப்பார்க்கும்போது, சுயராஜ்யம் பெறத்தியாகிகளாகவெளிவரும்பணக்காரனுக்குஒரு கஷ்டமுமில்லை,அவன் வெளியிலும்சுகம்அடைகின்றான். ஜெயிலுக்குள் சென்றாலும் ஏ வகுப்பில் அமர்ந்து இன்பம் அனுபவிக்கின்றான். ஆனால் வறுமையினாலும், வேலையில்லாமையாலும், திண்டாடும் சாதாரணமக்கள் வெளியிலிருந்தாலும் கஷ்டந்தான் அடைகிறார்கள். காங்கிரஸ் பேரைச் சொல்லிச் சிறைசென்றாலும் அங்கேயும் சி வகுப்பில் சேர்க்கப்பட்டு வெளியிலிருந்ததைக் காட்டிலும் அதிக கஷ்டத்தைத்தான் அடையவேண்டியிருக்கின்றது. அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!!

தோழர்களே! காங்கிரஸ் காதலர்களே! இங்கே கொஞ்சம் ஆலோசனை பண்ணுங்கள்! ஏழை மக்களின் சௌகரியத்திற்காகச் சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்கின்ற இந்த காங்கிரஸ் தலைவர்கள் உள்ளக்கிடக்கையைக்கொஞ்சம் நுழைந்து பாருங்கள்! இந்தத்தலைவர்களுக்கு மதிப்பு இருக்கும்படி உழைப்பவர்கள் தொண்டர்கள் அல்லவா? தொண்டர்கள் இல்லாவிட்டால் தலைவர்கள் எப்படி வெளிவரமுடியும்? இப்படிப்பட்ட தொண்டர்களுக்குச் சிறையில் சௌகரியம் வேண்டுமென்பதற்காக இவர்கள் இதுவரையிலும் என்ன செய்தார்கள்? இவர்கள்மாத்திரம் ஏ வகுப்பில் போய் சுகமாகக் கவலையற்று வாழ்கிறார்களே ஒழிய வேறு என்ன செய்கிறார்கள்? சிறையிலும் தங்களுக்கும், தொண்டர்களுக்கும்சமத்துவமான ஸ்தானமே இருக்கவேண்டுமென்று யாரேனும் கேட்டார்களா இவர்கள்தானா நாளை சுயராஜ்யம் பெற்று ஏழை மக்களுக்குச்சமத்துவம் கொடுக்கப்போகிறார்கள்?

சுயராஜ்யத்திற்காக எவ்வளவோ தியாகஞ் செய்யததயார் என்று முன்வந்திருக்கும் இந்தத்தலைவர்களில் எவரேனும் இதுவரையிலும் 'எங்கள் சகாக்களான—தேசமக்களான— அரசியல் கைதிகளில் அனேகர் சி வகுப்பில் இருக்கும்போது நாங்கள் ஏ வகுப்பிலும், பி வகுப்பிலும் இருக்கமாட்டோம் அவர்களுக்கும் எங்களைப்போலவே ஏ வகுப்போ, பி வகுப்போ, கொடுக்கவேண்டும், இல்லாவிட்டால் நாங்களும் சி வகுப்பிலேயே இருக்கிறோம்' என்று எந்தத் தலைவர்களாவது தியாக புத்தியுடன் சொல்ல முன்வந்தார்களா? என்று பாருங்கள்.

நீங்கள் மகாத்மா என்று சொல்லுகிற திரு. காந்தியாகட்டும், குட்டி காந்தி என்று சொல்லுகின்ற திரு. ராஜகோபாலாச்சாரியாகட்டும், அல்லது மற்ற பேர்வழிகளாகட்டும், அவர்கள் அனைவரும் இன்று ஏ வகுப்பில்தானே இருக்கின்றார்கள்? வெளியிலிருப்பதுபோலவே ஜெயிலுக்குள்ளும், பகவத்கீதை படித்துக் கொண்டும், பத்திரிகை பார்த்துக் கொண்டும், உலாவிக்கொண்டும், காற்று வாங்கிக்கொண்டும், இருக்கிறார்கள் அல்லவா? ஆனால் நமது ஏழைத்தோழர்களின் கதியென்ன? கல்லுடைப்பதும், மூட்டை தூக்குவதும், இட்டவேலைகளைச் செய்வதும், சுதந்தரமின்றி இருப்பதும் ஆகிய கஷ்டங்களைத்தானே அடைந்துவருகிறார்கள்?

இதிலிருந்தே நமது ராஜீயத்தலைவர்களின் மனப்பான்மை விளங்கவில்லையா? ஜெயிலில் நடக்கும் குறைகளைப்பற்றிப் பத்திப்பத்தியாக பத்திரிகைகளில் எழுதும் தேசாபிமானிகளில் யாராவது இந்த ஏ, பி, சி என்னும் புதிய வருணாச்சிரமதருமத்தைக்கண்டித்தார்களா? எந்தெந்த காரியத்தைப்பற்றியோ சட்டசபைகளில் கேள்விகள் கேட்டுத்தங்களை விளம்பரப்படுத்திக்கொள்ளும் காருண்ய கனவான்களில் யாரேனும் இந்த ஏ. பி. சி வருணாச்சிரமத்தைப் பற்றிக் கண்டித்ததுண்டா? கேள்வி கேட்டதுண்டா? என்று யோசித்துப்பாருங்கள் ஆகவே எல்லா ராஜீயத்தலைவர்களும் சிறையில் இந்த ஏ. பி, சி பிரிவு இருக்கவேண்டுமென்று தானே விரும்புகின்றார்கள். இவர்கள் அதிகாரம் வகிக்கக்கூடிய சுயராஜ்யத்திலும் இந்த ஏழை பணக்கார ராஜ்யந்தானே இருக்கும்? காங்கிரஸ் பேரைச்சொல்லி சிறை செல்லும் சோணகிரிகளே ஏ. பி. சி யைக் கவனியுங்கள்! நீங்கள் கொண்டிருக்கும் மயக்கம்தெளியும். அதன்பின் நம்மோடு சண்டைக்குவாருங்கள்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

'பாரதமாதா' என்றும், தாய்நாடு என்றும் தேசத்தின் மீது குருட்டு பக்திவரும்படி செய்து ஏமாற்றுவதுதான் தேசீயம் என்பது. இதையே பணக்காரக்காங்கிரசும் கைக்கொண்டிருக்கிறது. காங்கிரஸ் வாதியானவன் வெள்ளைக்காரன் அதிக வரிவாங்குவதாகச் சொல்லுகிறான், பூமியுள்ள மிராசுதாரனிடத்தில் வரி வசூல் செய்தால் பூமியில்லாத ஏழைக்கென்ன நஷ்டம்? இதற்காக ஏழை ஏன் அரசாங்கத்தாரோடு சண்டை போட்டு தடி அடிபட வேண்டுமென்பதா தெரியவில்லை. எவ்வளவோ கோடி ரூபாய்க்கு இந்தியாவை அடமானம் வைத்திருப்பதாகவும், அது கணக்குப்போல் ஒவ்வொரு இந்தியனுக்கு 40 ரூபாய் கடன் இருப்பதாகவும் ஒரு பாவமுமறியாத அன்று பிறந்த குழந்தைக்குமிருப்பதாக உண்மையை மாற்றிச்சொல்லி எல்லாமக்களுக்கும் அரசாங்கத்தார் மீது துவேஷமுண்டாகும்படியாக காங்கிரஸ் பக்தர்கள் சொல்லுகிறார்கள்.

செத்த பாம்பு.

(பைத்தியம் கிழித்தது.)

சென்ற 1—3—32-ல் ராஜாங்க சட்ட சபைக் கூட்டத்தில் கனம், ராஜா ரகுநாத தாஸ் பிரசாத் என்பவர் சாரதா அவர்களால் நிறைவேற்றப்பட்ட பாலிய விவாகத் தடைச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டது. அப்பொழுது கனம் ஜி. ஏ. நடேசனும், கனம் திவான் பகதூர் ஜி. நாராயணசாமி செட்டியாரும் "அச்சட்டத்தை ரத்து செய்வதற்கு வேண்டிய காரியம் ஒன்றுமே நடை பெறவில்லை" யென்று கூறி எதிர்த்தனர். பிறகு உள்நாட்டு இலாகாக் காரியதரிசியாகிய கனம் எமர்சன் அவர்களும் ரதது செய்ய வேண்டும் என்னும் தீர்மானத்தை எதிர்த்தார். இறுதியில் தீர்மானம் நிராகரிக்கப் பட்டது. கனம எமர்சன் அவர்கள் தீர்மானத்தை எதிர்த்த போது கூறிய வார்த்தைகள் கவனிக்கத் தக்கன. அவர் வார்த்தையிலிருந்தே சாரதா சட்டம்ஒன்றுக்கும்பயனில்லாமல்செத்த பாம்பாக இருக்கிறது என்று உணரலாம். கனம் எமர்சன் பேசியதாவது:—

"பெரும்பான்மையோர் சமுதாய சீர்திருத்தத்திற்கு மிகவும் அவசியமான தென்று கருதும் ஒரு சட்டத்தை இந்திய அரசாங்கம் எப்பொழுதாவது ரத்துச் செய்தது உண்டா? சாரதா சட்டம் இந்திய சட்ட சபையிலும், இந்தச் சட்ட சபையிலும் நிறை வேற்றப் பட்டதாகும். இச்சட்டம் கடந்த இரண்டு வருஷங்களிலும் ஒரு கஷ்டத்தையும் உண்டாக்க வில்லை. சமுதாய வாழ்விலும் குறுக்கிட்டுத் துன்பஞ்செய்யவில்லை. இச்சட்டத்தால் ஒரு பயனும் உண்டாக வில்லை யென்று பலர் கண்டித்திருக்கின்றார்கள். இக்கண்டனம் சரியானதல்ல. சாரதா சட்டத்தால் எந்த வகுப்பாருக்கும், தொந்தரவோ, கஷ்டமோ ஏற்படவில்லை. இச்சட்டம் பால்ய விவாகத்தின் கெடுதிகளை நன்றாய் விளக்கிக் காட்டக் கூடிய ஒரு கருவியாக இருக்கின்றது. கொடுமையான ஒரு சமுதாய வழக்கத்தை எதிர்ப்பதற்கு அறிகுறியாகவே சட்டசபையில் இச்சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. அதனை மறுபடியும் ரத்து செய்வதென்றால், அத்தகைய சமுதாய வழக்கங்களைச் சட்ட சபை ஒப்புக் கொள்ளுவதாகவே ஏற்படும். இதைக் கண்டு "இந்தியா சமூக ஊழல்களை ஒழிக்கச் சம்மதிக்க வில்லை" என்று உலகத்தார் நினைக்கக்கூடும். அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படப் போகும் இக்காலத்தில், இந்த விஷயத்தில் இந்தியா உலக அபிப்பிராயத்தை அலட்சியம் பண்ணுதல் கூடாது"

இந்தப் பேச்சிலிருந்து சாரதா சட்டம் இந்தியாவில் பேருக்காகத் தான் இருந்து வருகிறதென்பது நன்றாய் விளங்குகிறது. "சாரதா சட்டத்தால் எந்த வகுப்பாருக்கும் தொந்தரவோ, கஷ்டமோ ஏற்படவில்லை" என்று கூறியிருப்பதிலிருந்தே, இச்சட்டத்தால் பாலிய விவாகம்தடைப் படவில்லை யென்று தெரிந்து கொள்ளலாம் பால்ய விவாகம் செய்யும் வழக்கமுடைய வகுப்பினர் யாதொரு தடையுமின்றி பால்ய விவாகத்தைத் தாராளமாகச் செய்து வந்திருக்கின்றார்கள் என்ற விஷயத்தை அரசாங்கத்தாரே ஒப்புக் கொண்டவராகின்றனர்.

"இச்சட்டம் பாலிய விவாகத்தின் கெடுதிகளை நன்றாய் விளக்கிக் காட்டக் கூடிய ஒரு கருவியாய் இருக்கிறது" என்று கூறியிருப்பதிலிருந்து உண்மையில் அச்சட்டம் சட்டமாக இல்லை யென்று அரசாங்கத்தாரே ஒப்புக் கொண்டவராகின்றனர். சமூக ஊழல்களைப் பற்றிப் பலர் புத்தகங்கள் எழுதி வெளியிடுவதைப் போலவும், பலர் பத்திரிகைகளில் வியாசங்கள் எழுதுவது போலவும் அரசாங்கத்தாரும், பாலிய விவாகம் என்பது பற்றி திரு. சாரதா அவர்கள் எழுதிய ஒரு வியாசத்தைச் சட்ட சபையின்மூலம் வெளியிட்டிருக்கிறார்கள் என்று ஏற்படுகிறது.

ஆகையால் சாரதா சட்டத்தால் ஒரு பயனும் உண்டாகவில்லைஎன்று கண்டிப்பதில் என்ன தவறு இருக்கின்றது? பிறர் கண்டிப்பது தவறு என்று திரு, எமர்சன் கூறியிருப்பதில் ஏதேனும் அர்த்தம் இருக்கிறதா? அரசாங்கத்தாரே வெளிப்படையாக இச்சட்டத்தால் பயன் ஒன்றுமில்லை. வெறும் பிரசாரம் பண்ணுவதற்குத் தான் இச்சட்டம் பிரயோசனம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்களே? இனி இதற்கு வேறு உதாரணம் என்ன தான் வேண்டும்?

ஆனாலும், எந்தச்சமாதானத்தைக கூறியோ, சட்டத்தை ரத்துசெய்ய முடியாது என்று அரசாங்கத்தின் சார்பாகக் கனம். எமர்சன் அவர்கள் தைரியமாகக் கூறியதைப் பாராட்டுகிறோம். இன்று 'சாரதா சட்டம்' என்று சொல்லப்படுவது 'சாரதா வியாச' மாக இருந்தாலும் ஒருகாலத்தில் உண்மையான சட்டமாகவே ஆனாலும் ஆகக்கூடும் என்று எண்ணிக்கொஞ்சம் ஆறுதலடைகிறோம்.

இதைப்போலவே இந்தியா சட்ட சபையிலும் சாரதா சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்பது பற்றிய விஷயம் விவாதத்திற்கு வருங்காலத்திலும் அரசாங்கத்தார் தைரியமாக எதிர்ப்பார்களென்றே எதிர்பார்க்கின்றோம். சாரதா சட்டம் தற்போது செத்த பாம்பாக இருந்தாலும் ரத்து செய்ய முடியாது என்று சொல்லியது வைதீகர்கள் வாய்க்குச்சரியான ஆப்பு என்றே நாம் கூறுகிறோம்.

நான் சொல்லுவதென்ன வென்றால் இந்தியா எவ்வளவு ரூபாயிக்கு அடமானம் வைத்திருந்தாலும், பணக்காரனுக்கும் பூமி சொந்தக்காரனுக் தான் கவலையேயொழிய பணமும் பூமியுமில்லாத ஏழைக்கென்னவென்பதே.

உண்மை இவ்விதமிருக்க 'ஏழைகளுக்காகவே சுயராஜியம்' என்று காங்கிரஸ்தலைவர்கள் வாய்ப்பந்தல் போடுகிறார்கள். ஏழை பணக்காரன் என்று இருபிரிவு இருக்கும் வரை ஏழைகளுக்குக்கஷ்டம் ஒழியாதென்பது உலகமறிந்த உண்மை. 'ஏழைகளுக்காகவே சுயராஜியம்' என்னும் காங்கிரஸ் சுயராஜியத்தில் ஏழை பணக்காரன் இல்லாதொழிய வேண்டும். அப்படியல்லாமல் ஏழை பணக்காரன் என்ற பிரிவுகள் காங்கிரஸ் சுயராஜியத்திலிருந்தால் 'ஏழைகளுக்காகவே சுயராஜியம்' என்று சொல்லுவது அர்த்தமில்லாததுமன்றி ஏமாற்று வித்தை என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

நண்பர்களே! இவ்வியாசத்தை நீங்கள் படித்தபின் காங்கிரஸ் அபிமானிகளுக்கு இதைப்படித்துப்பார்க்கும்படி அவர்களிடம் கொடுக்கவேண்டுமாய்க்கோருகிறேன்.

Goshaye office pillss.

கோஷாயி ஆபீஸ் மாத்திரை

உண்மைகடைப் பிடி. நிர்ணயமே ஜெயம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் தயாரித்து அனுபவித்து கை கண்டது.

அமுர்த மருந்த சடலத்தை காத்து, பகுத்தறிவை அரிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தம் அனுபவிக்க சஞ்சலத்தை அகற்றி, சிவராஜ யோகம் சாதித்து வருவோர்களுக்கும் முடிவு பெற்ற காரியங்களில் மனதை செலுத்தி, சதா சஞ்சலம் அனுபவித்து வரும் இல்லற வாசிகளுக்கும், (ஆனந்த அருள நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம் போல்,) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும் (நீர், நெருப்பு, காற்று,) காலக்கிரம ஆகார தவக்கத்தினால், முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும் வாய்வும் உரவாகியது முதல் மலபந்தம், மலச்சிக்கல், மலம் தீய்தல், அன்னதுவேசம், அசகி, இடுப்புவலி, மார் நோய் கீல் வாய்வு சூலை தாது நஷ்டம் முதலிய வியாதிகள் ஜெனித்து வருவது யாவருக்கும் அனுபவசித்தி.

மேல்படி உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப் பின் கோஷாயி ஆபீஸ் மாத்திரை ஒன்றை, ஒரு வெத்திலையில் வைத்து மென்று, ஜலம், சாப்பிட்டால் அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும் க்ஷவரம் தைலஸ்நான முதல் வழக்கம் போல் யாவும் நடத்திக் கொள்ளலாம் மலபந்த முள்ளோர்கள் துடர்ச்சியாயும் வாரமிரு, மும்முறையாக உபயோகித்து வந்தால், வெட்ட வாய்வு உபாதைகளை, நிவர்த்தித்து, திரேகத்தை திடகாத்திரமுண்டாக்கக் கூடியது. குழந்தைகளுக்கு மலச்சிக்கலின் மேல் காணும் சகல ஜுரங்களுக்கும் நேரம் 1-க்கு ஒரு மாத்திரை வீதம் 3 நாள் காலை, காலையில் துளசி சுரசம் பிள்ளைப்பால் இதுகளிலொன்றில் உரைத்து கொடுக்க ஜுரத்துக் கேற்ற பத்தியம் கார்க்க வெத்திலையில் வைத்து சாப்பிட்டு வந்தால் எவ்வித பத்தியமுமில்லை, சிசுக்கள் முதல் உபயோகித்து குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை சீசா ஒன்று, ஒவ்வொரு இல்லத்திலும் சர்க்கோட் பெட்டியிலும் அவசியம் இருக்க வேண்டியது. கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 1—10—0—101 மாத்திரை கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 3—2—0 -வி. பி- பாக்கிங் சார்ஜ் வேறு மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்தது அனுப்பி வைக்கவும் சந்தாமெம்பர் தெருவிப்போர்களுக்கு மருந்துடன் கால்டஜன்கோஷாயி ஜீவ தாது மாத்திரைகள் கொண்ட டப்பி ஒன்று (0—12—0 விலையுள்ளது) மருந்துடன் இனமாய் சேர்த்து அனுப்பி வைப்போம்.

சோல் ஏஜெண்டு, திருச்சி ஜில்லா பெரம்பலூர் (தாலுகா) ஷாப், மளிகை அண்டு பூஜை வைத்தியமும் நடத்தி வரும் சே. கி. மு. அங்கமுத்துப்பிள்ளை அவர்களிடம் கோஷாயி வைத்திய சாலையின் மற்ற விவரங்களும் தெரிந்து கொள்ளலாம்.

உதவி டாக்டர் T. K. V. Chalam.

டாக்டர் B. A. எதிராஜ்,

(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,

தென்னூர் திருச்சி.

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பற்றிய நிகழ்ச்சிகள் எழுந்தோறும் நமக்கு அறன் அல்லது கடனும் (the right) வழிபுடைய தெனக் கூறுதல் பொருந்தா வழக்காம். 'நல்லது' அல்லது 'ஒழுக்கமானது' என்ற சொற்கள் பொதுவான குணத்தின் தன்மையை, அல்லது மனத் துணிவினியல்பைப்பற்றிய, ஒழுக்க விழுப்பம் தரும் முற்றுப்பெறாத முடிவைக் குறிக்கும், தீர்மானங்களாக மதிக்கலாம். ஆனல் ஒழுக்க நயச் சிறப்பைச் சேர்தாக்குந்தன்மையோவெனின் இடம் பொருளேவல் காலமிவற்றையுந் தன்னுள்ளாக்கியதாகவிருக்கிறது. எனவே அது முற்றிலும் பழுத்த பயன்றெரியுமாலோசனையாகும். அறன் அல்லது கடனெனக் கொண்ட ஒவ்வொரு தீர்மானமும் ஒழுக்கமானதாகும். இவ்வாறு முதிர்ச்சி பெற்ற ஆலோசனையின் பயனும் முடிவுகளுக்கு; உண்மையாகவே ஒழுக்கமான நடத்தை பொருத்தமானதாக விருப்பதால் அந்நடத்தை அறிவுடன் பொருந்தி ஒன்றுபட்ட அறனுகும்.

அறத்துறையில் பொய்யுரைத்தல் கடனுமோ வென்று நம்மைச் சிந்திக்கச் செய்கிறதாக, நான் கூறிய இரு உதாரணங்களினுலும், இன்னும் இத்தகைய் பொயகளை ஒரு சிறிது வள்ளுவர், வில்லி போன்ற பெரியோர்கள் ஆதரித்துப்பேசுவதினுலும், இன்னோன்ன இடங்களில் பொய் பேசுதலே தலைசிறந்த அறமாமென்று நாம் நிர்ணயித்து விட்டதாக வாசகர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. பழுத்து முதிர்ந்த அறத்துறையிலியங்கிய அறிவு கடனும் செய்கையைப் பயன்படக்கூட்டுவிக்கும் பொருளாதார நிலையைக்கருதும் தன்மையுமுடையதாக விருப்பதைக்காட்டுவதற்கே மேற்கண்ட உதாரணங்கள் கையாளப்பட்டன. மேற்கண்ட இடங்களிலும் மெய்யுரைத்தலே தவிர்க்கொணு அறமெனக்கொள்ளுதல் பொருந்த முடைத்து. என? மெய்யுரைத்தல் மெய்மையினின்றும் பிறிக்கொணுத ஒரு அம்சம். மெய்மைக்கும் (Truth) நாம் அறவயச்சிறப்புடையனவாகக் கருதுகின்ற மற்றப் பொது விதிகளுக்கும் யாண்டும் மறக்கொணு வேற்றுமைகள் உள. மெய்மை என்றும் நிலைத்திருப்பது அழியாதது (Truth is Reality) மெய்மையே அழகு, அறம், இன்பம், ஆயின் மற்ற அறநெறிகள், இடம் பொருளேவல் காலதேச வர்த்தமானங்களைக் கொண்டு உலகில் நின்று நிலவுகின்றன. எனவே அவற்ரேடு இவ்விதிகளும் மாறுதல்கள் அடையவும் அழியவும் செய்கின்றன. இத்தகைய பொது விதிகள் எவ்வளவுக்கெவ்வளவு மனிதருக்குப் புரை தீர்ந்த நன்மையையும், நிலையான இன்பத்தையும், பயக்கும் வன்மையுடையனவோ அவ்வளவுக்கவ்வளவு உண்மையின் ஒளி பெற்றனவாகும், அல்லாதவரை மெய்மைக்கப் புறப்பட்டன. ஆனல் மெய் விளம்புதலோ மெய்மையிலியங்கிய அம்சமானதால் ஒரு போதும் விலக்கொணு ஒரு தனிச்சிறப்புப் பெற்ற விதியாம். எனவே மெய் போன்று, மெய் பேசுதலும், யாண்டும் யாங்கனும் நின்று நிலைக்கும் பேரறமாகும். இந்நியாயம் கொண்டு நோக்குழி, மேற்கூறிய உதாரணங்களிலும் பொய்மையால் கேவலம் ஒரு நண்பனுடைய வாழ் நாட்களை சிறிது நீட்டுவதிலோ அன்றி ஒரு பெண்ணினுடைய உடம்பின் பரிசுத்தத்தைக் காப்பதிலோ அந்தச் சந்தர்ப்பத்திலடையும் மனத்திருப்தியையுமின்பத்தையும் புறக்கணித்து, பொய்மையைப் பேணுவதின் மூலம் அது பரவி மக்களுக்குத் துன்பம் விளைவிக்கக்கூடிய பெருங் கேட்டையுணர்ந்து, இன்னும் 'பிறந்தவர் யாவருமிறப்பதுறு' யெனும் பெற்றியை அறிந்து, அறத்தின மாண்பினைக் காப்பதற்கும் அழிவுறுயாக்கைபொய்மையால் வலிதிற்பாழ்படுத்தப்பட்ட காலையிலும், ஒரு மங்கையின் மனம் மாசுறுதிருக்கும் வரை அவள் கற்பறம் கோணவில்லை என்ற தன்மையைப் பாராட்டுவதற்கும் போதிய அறிவும் திறனும் பெற்ற கடந்த ஞானியர் (Supermen) உலக வாழ்க்கையிலே மனிதரைமயங்கச்செய்கின்ற மாறிமாறி நிகழும் நன்மை தின்மைகளையும், இன்ப துன்பங்களையுங் கடந்த (Beyond good & Evil) இன்பம், அழகு, அறம், கடவுள் ஆகிய சொற்களெல்லாம் ஒரு பொருளுணர்த்தும் பேருண்மையைப்பெற்றவராவர். இப்பேருண்மை கண்டே, வள்ளுவரும்,

"அறத்தான் வருவதே இன்ப
மற்றெல்லாம் புறத்த புகழுமில"
(குறள் 5ம் அதி 9)

என்ருர்.

(தொடரும்)

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

தையும், இதைப் புரோகிதர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக உபயோகித்துக் கொண்டு மக்களை ஏமாற்றி வயிறு வளர்த்து வருகிருர்கள் என்றும் உணரலாம்.

ஆகவே "மக்கட்பேறு" என்பது தேச நன்மைக்கான காரியமே ஒழிய சுயநலத்திற்கான காரியமல்ல வென்பதையும், ஆனல் பிற்காலத்து அது சுயநலத்திற்கான காரியமாக மாறி விட்ட தென்பதையும் உணரலாம்.

இந்துக்கள் தாங்கள், இறந்த பின் நற்கதி யடைவதற்காகப் பிள்ளை வேண்டும் என்று விரும்புவது ஒரு புறம் இருந்தாலும் இன்னும் பல காரணங்களாலும் புத்திரப் பேற்றை விரும்புகிருர்கள் என்று கூறலாம். பணக்காரர்களா யிருக்கின்றவர்கள், தங்கள் சொத்துக்களை ஆளப் பிள்ளை வேண்டும் என்று நினைக்கின்றனர். ஏழைகளாயிருக்கின்றவர்கள், தங்களுடைய வயதேறிய பருவத்தில், அதாவது தாங்கள் சம்பாதித்துச் சாப்பிட முடியாத காலத்தில், தங்களை வைத்துக் காப்பாற்ற பிள்ளை வேண்டுமென்று நினைக்கின்றனர்.

இன்னும் சிலர், தமது குடும்பம் எப்பொழுதும் அழியாமலிருக்க வேண்டும் என்பதற்காகப் புத்திரன் வேண்டு மென்று விரும்புகின்றனர்.

ஆகவே பொதுவாக, இந்து மதத்தினர் ஆகட்டும், மற்றவர்களாகட்டும், தங்களுக்குப் புத்திரன் வேண்டு மென்று விரும்புவதற்கும் காரணம் இரண்டேயாகும் என்று கூறி விடலாம்! இரண்டும் சுயநலக் காரணந்தான். ஒன்று மறுமையில் நன்மையடைய வேண்டு மென்னும் சுயநலம். இரண்டு இம்மையில் நன்மையடைய வேண்டும் என்னும் சுயநலமாகும்.

ஆகவே பிள்ளைப் பைத்தியம் ஒழிய வேண்டுமானல், மத நம்பிக்கை ஒழிவது மட்டும் போதாது. பொருளாதார சௌகரியமும் ஏற்பட வேண்டும். பொருளாதார சௌகரியத்தை அரசாங்கத்தால் தான் செய்ய முடியும். அதாவது ஏழைகள் விடுதிகள் அமைத்து வயதேறியவர்களும், வேலை செய்யத் திறமையற்றவர்களும், அவ்விடுதிகளிலிருந்து கவலையின்றி வாழ ஏற்பாடு செய்ய வேண்டும்.

இம்மாதிரியான ஏற்பாடு இருக்குமானல் யாரும் பிற்காலத்தில் தம்மைப்பிள்ளைகள்தான் காப்பாற்ற வேண்டும் என்று கவலைப்படமாட்டார்கள். ஆகவே புத்திரப்பேற்றுத் தடையைச் சுலபமாக நாட்டில் ஏற்படுத்த முடியும். எதிர்காலத்தில் உலகில் பஞ்சமும் கலகமும் உண்டாகாமல் தடுப்பதற்கு ஜனத்தொகையை அதிகரிக்காமல்தடுப்பதைத்தவிர சிறந்தவழி வேறு ஒன்றுமில்லை. ஜனத்தொகை அதிகப் படுவதுதான் "நமது கஷ்டத்திற்குக் காரணம்" என்ற உணர்ச்சி தேச மக்கள் எல்லோர் மனத்திலுங் உண்டாகவேண்டும். இதற்கான விஷயங்களை அறிஞர்கள் பொது ஜனங்களுக்கு விளக்கிக் கூறவேண்டும். இதுவே சமூக ஊழியர்களின் முக்கியமான கடமையாகும்.

நோட்டீஸ்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

1929-ஸ் O. S. No. 1161.
1931-ஸ் I. A. No. 1596.

பெரியசாமிக்கவுண்டன்-வாதி.

பல்லடம் தாலூகா பெருமாநல்லூரிலிருக்கும் கன்னிமார்தோட்டம் முத்துசாமிக் கவுண்டன் மகன் கொண்டத்துக்கவுண்டன் 1, ஷை யூர் பழனிக்கவுண்டன் மகன் முத்துசாமிக் கவுண்டன் 2 —பிரதிவாதிகள்.

மனுதார் தரப்பில் டிக்கிரியில் தொகை செலுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் காலம் தவரி டிக்ரித் தொகை செலுத்தப்படாமலிருக்கிறபடியால் ஷை டிக்கிரியை Final decree செய்ய வேணும் என்றும் மனுக்கொடுத்திருக்கிறபடியால் அதைப்பற்றி உமக்கு ஏதாவது ஆக்ஷேபணையிருந்தால்அதை நீர் நாளது 1932 வருஷம் மார்ச்சு மாதம் 17-தேதியில் இந்தக்கோர்ட்டில் ஆஜராகி அறிவித்துக்கொள்ளவும். அப்படிக்கில்லா விட்டால் ஷை விஷயமாய் ஒரு தலைபக்ஷமாக தீர்மானிக்கப்படும்.

C. S. குப்புசாமி அய்யர், வக்கீல்.

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "நமத் எண்ணேயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—1—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட் விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனும். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons,
Pilibhit R. K. Ry., U. P.

மஞ்சள் ஆவாரம்பூ பானத்தூள்

உ, காப்பிக்குப்பதிலாக சாப்பிடவும்.

ALWAYS DRINK
YELLOW
AVARAMBU
HEALTH
BEVERAGE.

ஒ ரு தடவை உபயோகித்துப்பார்.

C V பாண்டியா & கோ.

16-17 சகின் லேன் பீச்சு, மதராஸ்

(8ம் பக்கத்தொடர்ச்சி)

ய்ய நேரிடுவதால் ஜாதி மமதை தணிவுறுகிறது. அறிவும், தெளிவும், கல்வியும், நாகரீகமும், பரவி வருதலாலும், ஜாதிவேற்றுமை வெளியில்காட்ட சற்று பயப்படுகின்றது ஆனால் அதனை முற்றிலும் வேருகளைந்தெடுத்து விடாவிட்டால் திரும்பவும் இந்திய குலத்தை நாசமாக்க சந்தர்ப்பம் நேரிடும். அதற்குச்சந்தேகமில்லை. **மதமும், ஜாதியும் பற்பல நாகரீகங்களை அழித்துவிட்டிருக்கின்றன.** புத்த தருமத்தையும், அதன் நாகரிகத்தையும் இந்தியாவில் அழித்தவை, இந்துமதமும், இந்து ஜாதியுமென அறிக. இவை இரண்டுமே, தற்கால மேல்நாட்டு நாகரீகத்தை நமது நாட்டில் பரவாமல் அழிக்க முயல்கின்றதை கவனிக்கவேண்டும். இந்து சபைகளும், சங்கங்களும், சங்கதங்களும், சுத்திகளும் தபியத்துகளும் தற்கால நாகரீகத்தை அழிப்பதற்கே தோன்றியவை. இந்த ஸ்தாபனங்களை அடக்காவிடில் நமது தேசம் நாச முறுவதற்குச் சந்தேகமில்லை.

ஆதலின், ஜாதி மதங்கள், பண்டைக்காலந்தொடங்கி, பல உருவங்களைக்கொண்டு, ஒரு தலைபோனலும், மற்றோர் தலையைக்கொண்டு முளைத்து முளைத்து வருவதால், எப்படி அவை வேர் அறச் செய்ய முடியும்? இந்த சங்கைக்கு மெஞ்ஞானம், எதாகிலும் வழிகாட்டுகின்றதாவெனப் பார்ப்போம். மண்மேல் பிறக்கும் போது யாதும் கொண்டு வந்ததில்லை என்றார், ஓர் நமது பெரியோர். இதனையே விஞ்ஞான அனுபவ, அனுமான சாட்சியங்களைக்கொண்டு, ஸ்தாபிக்கின்றது. தேக உறுப்புகளைத்தான், நாம் கொண்டு வருகின்றோம். நடக்கக் காலும், செய்ய கையும், பேச வாயும், மற்ற நடத்தைகளுக்கு வேண்டிய அவயவங்களுமே நாம் பிறப்போடு கொண்டு வருகின்றோம். மனமென்பதும் (Mind) விஞ்ஞான மென்பதும் (Consciousness), அறிவு என்பதும், (Intellect), சுயஅறிவு (Instinct) என்பதும், மனோ விகாரமென்பதும் (Emotion), இவையெதையும் நாம் கொண்டு வருகிறதில்லை. நாம் பிறக்கும் போது சிற்சில நடத்தையைத்தான் (Behaviour) காட்டுகின்றோம். அவைகளாவன, அழுதல், அசைதல், மூச்சு விடுதல், மலஜலம் தள்ளுதல், உண்ணுதல், பார்த்தல், கேட்டல், ஸ்பரிசித்தல் முதலிய சொற்ப நடத்தைகளைத்தான், பிறப்போடு கொண்டு வருகின்றோம். இந்த சொற்ப நடத்தைகளை விருத்தி செய்து கொண்டு வயது வந்தவன் (Adult) பல கோடி நடத்தைகளை செய்து வருகின்றான். ஆதலால் மனிதன் காட்டும் நடவடிக்கைகள் யாவும் பிறந்த பிறகு குழந்தை பருவ முதல் கற்றுக்கொண்ட (Learned) நடத்தைகளேயாகும். பேசுவதற்கு நமக்கும், வாலில்லாக்குரங்குகளுக்கும் பச்சக்கிளிக்கும், மைனாப்பட்சிக்கும் சில அவையவங்கள் தொண்டையில் இருக்கின்றன. இவை கண்கண்டகாட்சி. இந்த அவயவங்களால், மனிதனும், மைனாவும் பேச சக்தி பெற்றுள்ளன. நாம் பேசும் சொற்கள் யாவும் சொல்லிக்கொடுத்த பேச்சென அறிக. மனிதனுக்காகிலும், அல்லது மைனாவுக்காகிலும், இளமையில் பேசக் கற்றுக்கொடா விட்டால், இரண்டு பிராணிகளும், ஊமையாகவேயிருக்கும். இரண்டொரு கூச்சல் செய்வதைவிட, வேறு எந்தப் பேச்சும் பேசுவதற்கு இல்லாமையாகும். ஆதலின், நாம் பேசும் வார்த்தைகள் யாவும், குடும்பவாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் (கலாசாலைகள் பள்ளிக்கூடங்கள், புஸ்தகசாலைகள்) கற்றுக்கொடுக்கப்பட்டனவும், கற்றுக்கொண்டனவுமான சொற்கள், இந்தசொற்கள் இரண்டு வகைத்து. உலகப்பொருளைக் குறிக்கும் சொற்கள் ஒருவகை. எந்தப் பொருளையும் குறிக்காத வெறுஞ் சொற்கள் இரண்டாவது வகை. இந்த இரண்டாவது வகுப்பைச் சேர்ந்தவைகளான சொற்களில் கடவுள், தெய்வம், நரகம், மோட்சம், ஜாதி சமயம், நல்ல நாள், தீயநாள், பாப்பான், பறையன், வள்ளுவன், வேளாளன், நாயுடு, முதலி, ஐயர், ஐயங்கார முதலிய சொற்கள் யாதொரு பொருளையும் குறிக்காத கற்பனை சொற்களாகும். இந்த கற்பனை சொற்களின் ஆதி ஆதாரத்தை விளக்கிக்காட்ட இதுவல்ல இடமென்றே, தெரிவித்துக்கொள்ளுகிறோம். இந்த சொற்களால்தான் உலகிற்கும், முக்கியமாக நமது தேசத்திற்கும் விளையும் கேடுகளெல்லாமென அறியவும்.

இந்த சொற்கள் சிறுவயதிலிருந்தே வழங்காவிடில் அதாவது சிறுவர் காதில் விழாதபடி தடுக்கப்படுமாயின் அத்தியாதி சிறுவர்களைக்கொண்ட சந்ததியார், (Generations) கடவுள், தெய்வம், ஜாதி சமயம் முதலிய சொற்கள் இல்லாமலே வளருமன்றோ? அச்சொற்கள்யாரும் கேளாமற் போமாயின் அவைகளின் மூலமாக எழும் பொய் நம்பிக்கைகளும் சித்தாந்தங்களும் மூடநடைவுடை பாவனைகளும் இல்லாமற்போமன்றோ? ஒரு சிறு திருஷ்டாந்தத்தை எடுத்துக் கொள்வோம். தெருவில் போகும் ஒருவன் கோவில் கோபுரத்தை பார்த்தவுடன் அதில் உள்ளகற்சிலையை கைகூப்பி வணங்குகின்றான். இது சிறுவயது முதல் கண்ட, கேட்ட பழக்கத்தால் செய்யும் செய்கை. இவன் குழந்தை பருவமுதல் கடவுள் என்ற வார்த்தையை கேட்டறியாதவனாய் இருப்பானாயின் இத்தியாதி மூடச்செய்கை அவன் செய்யமாட்டான், அல்லது அவனுக்கு சிறுவயது முதல் கோயில்களில் உள்ளது பொம்மைகளே அல்லாது தெய்வங்களாகாவென கற்பித்து கொடுத்திருப்பானேயாகில் அவன் கண்ட கோபுரங்களை நோக்கி கைகூப்பமாட்டானன்றோ? அல்லது உற்சவங்களில் விக்கிரகங்களை தூக்கி வருங்காலை, இவைகள் பொம்மைகளே ஒழிய வேறொன்றில்லை எனக்கற்று இருப்பானேயாகில், கண்ட சிலைகளுக்கும், கண்ட விக்கிரகங்களுக்கும் கைதூக்கமாட்டானன்றோ? இவ்விதமாக வளரும் நமது சந்ததியார், மதப்பற்றின்றி வாழ என்ன தடை? ஜாதயும் அவ்வாறே. தீண்டாமை யொழிக வென்று நமக்கு புத்தர் காலமுதல், சிலர் சொல்லி வந்தும், அது ஒழிந்தபாடில்லை. பணக்காரனுக்கு ஏழைகளை மனிதர்களென பாவிக்கச்சொல்லியும், அவ்விதம் பாவிப்பாரில்லை. ஏன்? நமது சிறுவர்கள், இந்த வித்தியாசங்களைப்பாராட்டுகின்ற படியால் எனவறிக. அப்படி, பாராட்டவொட்டாமல், சிறு குழந்தை முதல் ஏழைப் பிள்ளைகளுடன், பணக்காரப்பிள்ளைகள் கலந்து வாழும் பட்சத்தில், வயது வந்த போதும் இரண்டும் வித்தியாச மற வாழுமன்றோ? அதே விதமாகவே, பறையர், பள்ளர் முதலிய தாழ்த்தப்பட்டவர்களின் குழந்தைகளும் உயர் குலத்தோர் பிள்ளைகளும் கலந்து வாழும் பட்சத்தில், தீண்டாமை அந்த சந்ததியாருக்கு இல்லாமற் போமன்றோ?

ஆதலின், நமது சமூகம், ஜாதி மத தீமைகளினின்று விலக வேண்டுமானல், நமது சிறுவரையும், சிறுமியரையும், அத்தீமைகளில் பழக்காமல், அச்சொற்கள் அவர் காதில் விழாமல் வளர்ப்பதே மெஞ்ஞானத்தின் திடமான பாடமாகும். இவ்வித நடைத்தையோடு பழகும் குடும்பங்களும், அவர்கள் சந்ததியாரும் பல்லாண்டு பல்லாண்டுகளாக, மத கற்பனை, ஜாதி வேற்றுமை இன்றி வளர்ந்துஇனி வரும் உலகை சுகப்படுத்துமாறு, நமது கடமையைச் செய்து வருவோமாக!

தாது புஷ்டிக்கு
"கெய்ரோடைன்"
சாப்பிடுங்கள்.
இந்தியா கவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:
ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

சோமதேவ இருஷியின் வரப்பிரசாத ஒளஷதம்.
குஷ்டம் கிராதகர்ம நோயென்றெண்ணி கஷ்டப்படுவதேன்?
எக்காரணத்தினாலுண்டாகிலும் எவ்வித குஷ்ட நோய்க்கும் அனேக தொத்து வியாதிகளுக்கும் சிறந்த சிகிச்சை முறைகளையும் சிறந்த ஒளஷதங்களையும் சாந்த [illegible]
நோயினால் அவஸ்தைப்படுவோர் ஸ்டாம்புடன் எழுதுங்கள்
சி. ஒ. கேசவவைத்தியர்
Bhaskara Vilasam (S. K. R.) Pharmacy
Cameron Road, Pallithottam, Quilon S. I.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ...	0—4—0
5.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
6.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
7.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
8.	சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ...	2—0—0
9.	மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகிறவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

பண்டிதர், உயர் திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)
கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.
இம்பீரியல் பிரஸ், மாயவரம்

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா		$ 1.00.
வெளிநாடு ,,	இந்தியா	$ 1.50.

ஆசிரியர்:—சுவாமி அற்புதானந்தா.

விலாசம்:— மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

'சண்டமாருதம்'

சுயமரியாதைத் தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்திச்செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
அனுபவத்துக்குரிய அபிப்பிராயங்கள்
ருசிகரமான குமிடப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன,

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

Read the
"SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது சுவஸக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதார்) அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து திகாற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒருமுறை படித்தால ஆரியர்களின் புராதன நாகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம, மதம் முதலியவைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழவேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலைசிறந்ததாகும். இதன் விலை அணா 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0.

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாது கிய "கன்னி மேயோ" எழுதியதில் உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டி சீர்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.